உ
சிவமயம்
"மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெலாம்"

# மில்க்வைற் செய்தி
# Milk White News


தபாற்பெட்டி இல. 77 | யாழ்ப்பாணம் | தொலைபேசி: 7233

கௌரவ ஆசிரியர்:
க. சி. குலரத்தினம்
Hony. Editor:
C. S. KULARATNAM

இதழ் 76
ISSUE 76

வெளியிடுவோர்:
க. கனகராசா ஜே. பி.
Publisher:
K. KANAGARAJAH J. P.


WORLD HINDU CONFERENCE

ලෝක හින්දු සම්මේලනය

அகில உலக இந்து மகாநாடு


மில்க்வைற் தொழிலகத்தின்
செந்தமிழ் ஆங்கிலத் திங்கள் வெளியீடு

01-04-82

Thamil - English Monthly issue of the
MILK WHITE SOAP WORKS, JAFFNA.

உ
சிவமயம்

# அகில உலக இந்து மாநாடு

# WORLD HINDU CONFERENCE

## 21 - 4 - 1982 — 25 - 4 - 1982

**Hinduism aims at the Unity of Mankind**

**FREEDOM**
**HONOUR**



**BROTHERHOOD**
**GOODWILL**

**The three Worlds are the dancing hall of Siva**

# மில்க்வைற் செய்தி சிறப்பிதழ்

வெளியிடுவோர்:

**மில்க்வைற் தொழிலதிபர், சிவதர்மவள்ளல், சிவநெறிப் புரவலர், சமாதான நீதவான்,**

**க. கனகராசா அவர்கள்**

கௌரவ ஆசிரியர்: க. சி. குலரத்தினம் அவர்கள்

உ
சிவமயம்






திருநாவுக்கரசுநாயனுர் தேவாரம்

**சித்தத் தொகைத் திருக்குறுந் தொகை**

திருச்சிற்றம்பலம்

சிந்திப் பார்மனத் தான்சிவன் செஞ்சுடர்
அந்தி வான்நிறத் தானணி யார்மதி
முந்திச் சூடிய முக்கண்ணி னுடி
வந்திப் பாரவர் வானுல காள்வரே.

திருச்சிற்றம்பலம்

தன்னை நினைப்பவர்கள் மனத்து உறைந்தருளுபவரா கிய சிவனும், செந்நிறம் பொருந்திய ஒளியோடு கூடிய அந்திக்காலத்து வானத்தின் நிறம் பொருந்தியவரும், அழகுநிறைந்த பிறைச்சந்திரனை முந்துறச் சென்னியிலே சூடிக்கொண்டவருமான முக்கண்களையுடைய சிவபெருமானின் திருவடிகளை வாழ்த்துபவர்கள் வானுலகை ஆள்வார்கள்.

---




## அன்புடைமை

மனைவி மக்கள் உற்ருர் உறவினர் நண்பர் முதலியோரிடத்து விருப்பமுடைமை. யாதும் ஊரே யாவரும் கேளிர் என்ற முறையில் உலகத்தவர் மீதும் அன்பு கொள்ளல் எனினும் அமையும். அன்புப்பிடி நன்ருக அகலித்து அகன்ற உலகத்தையும் அணைத்துக்கொள்ளும்.

**அன்பீனும் ஆர்வம் உடைமை அதுஈனும்**
**நண்பென்னும் நாடாச் சிறப்பு.**

உற்ருரிடத்தே செய்யும் அன்பானது பிறரிடத்தும் விருப்பமுடைமையை வருவிக்கும். அவ் விருப்பம் நட்பு என்று சொல்லப்படுவதாகிய எய்துதற்கரிய சிறப்பினை உண்டாக்கும்.

**KINDNESS (Love)**

Love begets a longing in others (for acquaintance) which ends in the glory of endless grace called affection.

---

## 1982 ஏப்ரல் மாத நிகழ்ச்சிகள்

| | | | |
|---|---|---|---|
| 4 | ஞாயிறு | — | ஏகாதசி விரதம், ஆயிலியம் யோகசுவாமிகள் குருபூசை |
| 5 | திங்கள் | — | பிரதோஷ விரதம் |
| 6 | செவ்வாய் | — | திருக்கோணேஸ்வரம் கொடி |
| 8 | வியாழன் | — | பூரணை விரதம் |
| 9 | வெள்ளி | — | பெரிய வெள்ளி |
| 13 | செவ்வாய் | — | தெல்லிப்பழை துர்க்கையம்மன் பொங்கல் |
| 14 | புதன் | — | துந்துபி வருடப்பிறப்பு, மருதடி விநாயகர் தேர் |
| 17 | சனி | — | நடேசர் அபிடேகம் |
| 19 | திங்கள் | — | நீர்வேலி கந்தசுவாமி கொடி, திருநாவுக்கரசுநாயனுர் குருபூசை |
| 20 | செவ்வாய் | — | ஏகாதசி விரதம் |
| 21 | புதன் | — | பிரதோஷ விரதம் |
| 23 | வெள்ளி | — | அமாவாசை விரதம் |
| 25 | ஞாயிறு | — | கார்த்திகை விரதம் |
| 26 | திங்கள் | — | கீரிமலை அம்மன் கொடி |
| 27 | செவ்வாய் | — | மட்டக்களப்பு ஆனைப்பந்தி சித்தி விநாயகர் கொடி |
| 28 | புதன் | — | நல்லூர் கைலாசபிள்ளையார் கொடி சீரணி நாகம்மை கொடி |

---

## *Welcome to you all*

May we extend to you all a very hearty welcome with folded hands to this session of the World Hindu Conference meeting in this beautiful city, pleasing to the eye and soothing to the mind. It is the capital of Sri Lanka, reputed to be one of the countries connected with the oldest epic called Ramayanam, the Adi Kavyam of sage Valmiki.

— *Milk White News*

"The world is my country,
All mankind are my brethren,
To do good is my religion,
I believe in one God and no more"

— *Thomas Paine*

"Let all here be happy,
let all be healthy,
let all see the face of happiness
let no one be unhappy,
Peace! Peace! Peace!

— *Radhakrishnan*

---

**நன்மையைக் கொண்டே தீமையைப் போக்கலாம்**

உ
சிவமயம்

உலகெ லாமுணர்ந் தோதற் கரியவன்
நிலவு லாவிய நீர்மலி வேணியன்
அலகில் சோதியன் அம்பலத் தாடுவான்
மலர்சி லம்படி வாழ்த்தி வணங்குவாம்.

"ஞானிகளாலும் உணர்தற்கும் ஓதுதற்கும் அரிதாயிருப்பவர், நிலவு உலாவிய நீண்முடியிலே கங்கையைத் தரித்தவர், அளவில்லாத சோதியுருவினர், திருவம்பலத்திலே ஐந்தொழிலருள் ஆனந்தக் கூத்தை இயற்றுபவர், அவர்தம் உலகெல்லாம் நிறைந்து விளங்குகின்ற திருவடிகளை வாழ்த்தி வணங்குவோமாக."

## Chidambaram the heart of the Saiva World

"Chidamparam has been famous for centuries in South Indian history. Saiva saints visited the temple and sang the praises of Natarajah. The temple is dedicated to one of the five symbols. The symbol of earth at Kanchipuram, the symbol of water at Jambukeswaram, the symbol of fire at Thiruvannamalai, the symbol of air at Thirukkalathy, the symbol of space (either) having no material representation, at Chidambaram. These five elements are hints of the Infinite wispers from secret sources, which speak to us of a Presence mightier than ourselves.

The universal Reality transcends the cosmic process and exeeds the categories of the empirical world. It is therefore treated as endefinable by lenguistic symbols or mental concepts. It is without form and yet is the source of all forms. From the cosmic end the Supreme Reality becomes the cosmic lord, Natarajah, the Lord of Dance.

Natarajah is the manifestation of the Lord of the cosmos. He is the perfect image of becoming as distinct from pure being. He symbolizes rhythm, action, movement. God is a creator - artist"

— *Radhakrishnan*

## Hinduism in Short

Hinduism says, "Be Good - Do good. Do your duty to God and man. Be pure. Be Simple. Worship God. Surrender to him. Hate not anyone. All creatures are forms of God. Speak truth. Do not injure any living being in thought, word or deed."

— *Swami Sivananda*

## சைவச் சிறப்பு — EXCELLENCE OF SAIVISM

"செய்வினையும் செய்வானும்
அதன்பயனும் சேர்ப்பானும்
மெய்வகையால் நான்காகும்
விதித்தபொருள் எனக்கொண்டே
இவ்வியல்பு சைவநெறி
யல்லவற்றுக் கில்லையென
உய்வகையாற் பொருள்சிவ
னென்றருளாலே யுணர்ந்தறிந்தார்.

1. செய்தவினை 2. வினையைச் செய்தவன்
3. வினைப்பயன் 4. வினைப்பயனை ஊட்டுபவன்

இந்தவகையாக நான்கைச் சைவசமயம் ஒன்றே செவ்வனே விதித்துக்கூறியது என சாக்கியநாயனர் நன்றாக உணர்ந்து, வேறு கோலத்திலிருந்தும் சிவனை மறவாது வழிபட்டார்.

## Great Sayings

1. Advertisements are the only truths in papers.
2. Let your boat of life be light not heavy.
3. I iike work, it fascinates me.
4. It is impossible to enjoy idling.
5. Every quotation contributes something.
6. There is no wisdom in useless sorrow.
7. Language is the dress of thought.
8. Example is more efficatious than precept.
9. It matters not how one dies, but how one lives.
10. Questioning is not the mode of conversation.
11. The good of the law is the highest law.
12. Reason is the queen of all things.
13. I had rather be right, than be President.
14. When you have nothing to say, say nothing.
15. Never take anything for granted.
16. A Sadhu has no attachment for the world.
17. A Sadhu is free from anger, greed, pride.
18. Each element has a presiding God.
19. The best Victory is the Victory over the mind.
20. The Agamas are manuals of worship.
21. There is only one God that rules the universe.
22. The first sound in the universe was Om!
23. The first thing that pulls on life is faith.
24. The first thing to avoid is bad company.
25. Righteousness is the bedrock of religions.
26. Give, be compassionate and practice control.
27. We must learn to live with religion.
28. Yoga is the reconditioning of one's nature
29. Self knowledge is better than textual learning.
30. All the living faiths had their origin in Asia.
31. Religion reflects both God and Man.
32. Virtue and vice are two streams in mind.
33. Religion saves man from going astray.
34. Religion is not reserved for the philosophers only.
35. Higher religions are not competetive.
36. Higher religions are always complementary.
37. Religion is insight into reality.
38. Hindu culture is a measuring rod.

★ பேரும் புகழும் விரும்புபவர் மேலோராக மாட்டார் ★

# Who is Who and What is What IN HINDUISM

Agastiar = A favourite sage of Asia
Agni = God of fire
Angira = A sage
Arthanari = A combined form of Siva and Parvathy
Aswameda = Horse Sacrifice
Atharvaveda = The fourth Veda
Artha = Second basic aim of Hindu life
Asura = Enemy of the good
Avathar = Incarnation of Vishnu
Baratham = India
Bardhvasa = A sage
Bagavathy = A goddess
Baratha Varsa = India
Bavani = A form of Durga
Bhiruhu = A sage
Bhumi = Mother earth
Brahaspati = Preceptor of the gods
Bramana = A branch of the Veda
Bairavar = A form of Siva
Brahma = Four headed creator of the Universe
Chidraputra = Record keeper of Yama
Dharsan = Seeing a deity or a sage
Dana = Act of giving
Devi = The great Goddess who embodies universal energy
Dharma = Moral and religious duty. First basic aim of Hindu life.
Durga = Hindu Goddess in a terrific form
Durvasa = A sensitive sage
Dhanvantri = Physician of the Gods
Elements = Earth, Water, Fire, Air, Ether
Ghanesha = God of wisdom, who removes obstacles
Ghayatri = Verse from Rig-Veda repeated in meditation
Hara = Name of Siva
Hari = Name of Vishnu
Indra = Rain God. Guardian of the East direction
Jiva = An individual soul
Kali = Hindu Goddess in a distroying form and mood
Kama = Pursuit of Love, third basic aim of Hindu life
Karthigeya = God of War (Murugan)
Krishna = Eigth Incarnation of Vishnu
Linga = Sign or symbol of Siva, main object of worship in Sivan temples
Manthra = A group of sounds that are repeated or recited during worship or meditation
Moksha = Release from life to escape birth and death. The Fourth aim of Hindu iife.
Nandi = Bull mount of Siva
Narayana = Vishnu as supreme being
Parvati = Goddessess, gracious and benovelent
Prasad = Sacramental food
Puja = Ritual worship of images of Hindu Gods
Pujari = A Priest of a temple
Prithiri = Personification of the earth
Rama = Seventh incarnation of Vishnu, hero of Ramayana
Rudra = Component of Siva, the bestower of healing herbs.
Salagrama = Sacred ammonite representing Vishnu
Siva = The supreme Hindu God
Saivism = The oldest faith. Religion and philosophy
Sankya = A system of philosophy
Valmiki = Author of Ramayana
Vishnu = One of the triad, who appears in various incarnations for the good of the devotees
Vaisnava = Devotees and worshipers of Vishnu
Vedanta = A school of Hindu philosophy
Vyasa = Author of Mahabaratha who compiled the four vedas
Yajur = The third Veda
Yugas = The four ages

## *Hinduism as a Universal Religion*

"The spade of the Modern Archaeologist has revealed remains all over the world, in China and Japan in the Far East, in Central and Southern America in the Far West, and in many of the islands of the PacificOcean which leads us to infer that a religion which should have been the same as the one which we follow in this country even today was prevalent all over the world.

There was only one religion for man then and therefore there was no need for giving a particular name to this religion. We know it only as ancient Dharma which gives to people the gifts of wisdom.

Hinduism is the only religion which is Catholic and Universal in the strict sense of the term. We have no quarrel with any other faith, in fact, to speak of an alien faith is a contradiction in terms. We welcome all we do not believe in conversion which is horizontal. Hinduism has not been a proselytising faith. If Hinduism spread to other lands it was because the people of those lands invited our religion and accepted it willingly.

T. M. P. Mahadevan

★ குற்றமுள்ளவன் ஓட்டைப் பானைபோல் உதவமாட்டான் ★

## பனையை மறக்கவில்லை

காசிக்குப் பிரயாணமான மில்க்வைற் தொழிலதிபர் சென்னையில் இரண்டு நாட்கள் தங்கியபோது தமிழ் நாட்டாரின் பனையபிவிருத்தியை நேரிலறிவதற்கு ஆங்காங்கே சென்று பலவிடங்களை அறிந்துகொண்டார்.

தமிழ்நாட்டில் பனையபிவிருத்தி பெரிய அளவில் நடைபெறுகிறது. பனைக் கூட்டுறவுச் சங்கங்களின் தொகை 1610 அவற்றின் உறுப்பினர் தொகை 3,50,000 அவற்றின் உற்பத்திப் பொருள்களின் பெறுமதி 15 கோடி ரூபா அவற்றின் விற்பனை வருமானம் 18 கோடி ரூபா.

தமிழ்நாட்டுப் பனைவளம் 49,962 சதுர மைல் பனை வெல்லக் கூட்டுறவுச் சங்கம் 1430. ஆண்டு தோறும் உற்பத்தியாகும் வெல்லம் 7,51,000 மணங்கு.

## பனையன்பர்களுக்குப் பெரிய வரவேற்பு

தொழிலதிபர் கனகராசா அவர்களும், அண்ணா தொழிலகம் நடராசா அவர்களும், மில்க்வைற் செய்தி ஆசிரியரும் பனையபிவிருத்தி பார்க்கப் போனவிடத்துப் பெரிய வரவேற்புக்குள் மூச்சுத்திணற வேண்டியவராயினர். ஒருமணி நேரத்துள் பட்சணங்கள், பணியாரங்கள், இனிப்புகள், பானங்கள் எல்லாம் பனையிலிருந்து தயாரிக்கப் பெற்றுப் பரிமாறப் பெற்றன. இவையாவும் அங்கே நன்றாக விலை போகின்றன. பதநீர் போத்தல்களில் பக்குவமாக அடைக்கப்படுகிறது. ஒரு நாளில் 10,000 போத்தல் அடைக்கிறார்கள். ஒரு போத்தல் பதநீர் 40 சதமாக 3 லட்சம் ரூபா வரையிற் கிடைக்கிறது.


## பனையபிவிருத்தி நிலையம்

தமிழ்நாட்டில் பனையபிவிருத்தி நிலையத்தாரின் சாதனைகள் அளவிலடங்கா. அவர்கள் தமக்குச் சொந்தமல்லாத பனைகள் பலவற்றை ஆயிரக்கணக்கில் ஆண்டுக்கு இரண்டு ரூபா வீதம் குத்தகைக்கு எடுத்துப் பயன்படுத்துகிறார்கள். தமிழ்நாடெங்கும் பயன்படுத்தப்படும் கந்தோர்க் குப்பைக் கூடைகளை அவர்களே செய்கிறார்கள். நாற்பது விதமான தூரிகைகளைத் துரிதமாகச் செய்கிறார்கள். இத்தூரிகைகள் 60 சதம் முதல் ஆறு ரூபா எழுபத்தைந்து சதம் வரை விலையுள்ளனவாகும். அயலில் உள்ள வைத்தியசாலைகளுக்கு வேண்டிய 2000 பாண் செய்கிறார்கள். இந்திய சுதந்திர வைபவத்தில் அரசாங்கத்தின் தேவைக்காக ஒரு தொன் நிறையுள்ள இனிப்புக்களைப் பனம்பாணிகொண்டு செய்து விநியோகித்தார்கள். நாள்தோறும் ஒரு தொன் இனிப்புச் செய்கிறார்கள். இதற்கு 2000 கிலோ பதநீர் காய்ச்சுகிறார்கள். இவற்றால் 10 லட்சம் ரூபா கிடைக்கிறது. பனம்பொருளபிவிருத்தியில் பெரிதும் ஈடுபட்டுள்ள இராவணப்பாசெட்டியார் ஒருவர் எமக்குச்செய்த உபசரிப்பு பெரியது.

## யாழ்ப்பாணத்து மூளை

''எங்கள் ஆற்றல்வாய்ந்த இயக்குநர் இவர்'' என்னும் கருத்தில் (He is our Dynamic Superintendent) என்று ஒருவரைக் காண்பித்து, அறிமுகஞ்செய்தார்கள். அவர் உடனே இருக்கைவிட்டெழுந்து இரண்டு கைகளையும் கூப்பித் தலைவணங்கி, ''நான் யாழ்ப்பாணத்து வடலியடைப்பைச் சேர்ந்த கனகராசா'' என்று தம்மைக் கூறிக்கொண்டார்.

தொழிலதிபர் கனகராசா பனையபிவிருத்தியில் இன்னொரு கனகராசாவைக் கண்டதும் வாரியணைத்து இங்கிருந்து கொண்டுசென்ற பனஞ்சின்னம் பொறித்த எட்டுமுழ வேட்டியை அவருக்குமேல் போர்த்து அவரைத் திணறச் செய்தார். பனம்பொருளபிவிருத்திப் பணியில் அந்தத் தொழிலகம் மிகுந்த உற்சாகமும் வேகமும் காட்டுகிறது.




இலங்கை அரசாங்க பனைச்சபை இயக்குநருள் ஒருவரும் பனையபிவிருத்தியில் பல்லாண்டுகள் பெருமுயற்சி எடுத்தவருமான மில்க்வைற் தொழிலதிபரைத் தமிழ் நாட்டுப் பனையபிவிருத்தி நிலையத்தினர் வரவேற்றுத் தங்கள் அபிவிருத்தித் தொழில்களைக் காண்பித்து மகிழ்ந்தனர்.

## மில்க்வைற் புனித யாத்திரை

மில்க்வைற் தொழிலதிபருக்கும் பாரியாருக்கும் வடபாரதத்தில் வாரணாசி என்னும் காசிக்கும் அப்பால் சென்றுவருவதற்கு ஒரு வாய்ப்புக் கிடைத்தது. சென்ற 25-2-82 முதல் 25-3-82 வரை இந்தியாவெங்கும் பார்த்து வந்த தொழிலதிபர் காசியில் கேதாரகட்டத்தில் நடைபெற்ற சைவசித்தாந்த மகா சமாஜ விழாவில், 6-3-82 சனிக்கிழமை காலை காசிப் பல்கலைக்கழகப் பேராசிரியர் மூர்த்தியவர்களின் தொடக்கவுரையினை அடுத்துப் பல நூல்களை வெளியிட்டுவைத்தார்கள். விழாவுக்குத் தலைமை தாங்கிய ஸ்ரீலஸ்ரீ காசிவாசி முத்துக்குமாரசுவாமித்தம்பிரான் - திருப்பனந்தாள் மடாதிபதி அவர்கள் தாமறிந்த வகையில் தொழிலதிபர் கனகராசா அவர்களின் சைவப்பணி, தமிழ்ப்பணி, சமூகப்பணிபற்றி ஆயிரக்கணக்கான வடநாட்டவர் தென்னாட்டவர் மத்தியில் குறிப்பிட்டருளினார்கள். தங்கள் மடத்து வெளியீடுகள் பலவற்றைத் தொழிலதிபருக்கு அன்பளிப்பாகத் தமது திருக்கரத்தால் அள்ளி அள்ளி வழங்கியருளினார்கள். சமாஜவிழாவில் கலந்துகொண்டவர்களுக்கெல்லாம் திருக்கேதீஸ்வரத்து மகாலிங்கத்தின் படமும் மில்க்வைற் செய்தி இதழ்களும் பிறவெளியீடுகளும் விநியோகமானபோது பெருவிருந்தாயிருந்தன.

**★ பொறுமையுள்ளவன் வாழ்வு சிதைவுபடுகிறது ★**



காசியில் திருப்பனந்தாள் மடத்து அதிபதி ஸ்ரீலஸ்ரீ முத்துக்குமாரசுவாமித் தம்பிரான் தலைமையிலும் ஆதரவிலும் நடைபெற்ற சைவசித்தாந்த சமாஜ விழாவில் மில்க்வைற் தொழிலதிபருக்குப் பெரிய இடத்தார் பெருங் கௌரவமளித்து அவர்தம் தமிழ்ப்பணி, சைவப்பணி, சமூகப்பணிகளை வெகுவாக வாழ்த்தினர்.

## காசி சிவனுக்கே உரிய பூமி

அரிச்சந்திரன் சத்தியந் தவறுதவன் என்பதை உலகத்தவருக்கு எடுத்துக்காட்டுவதற்கு முனைந்த கௌசிகர் என்னும் விசுவாமித்திரர் அவனைப் பலவித சோதனைகளுக் காட்படுத்தியதால் அவன் நாடுநகரமிழந்தபின், காசியில் தங்கியது அந்த இடம் சிவனுக்கு உரியது. என்றதால் என்பர். காசி சிவனுக்குரிய இராசதானியாகையால் எந்த அதிகாரியும் அரசனும் அதனை வேறொருவனுக்குத் தானம்பண்ணவோ கொடுக்கவோ முடியாது. அது ஒரு சுதந்திர நாடு (Free State).

## சப்தரிஷிகள்

கங்கையோடும் காசியோடும் சம்பந்தப்பட்டவர்களுள் சப்தரிஷிகள் முதன்மைபெற்றவர்கள். அகத்தியர், புலத்தியர், அங்கிரா, கௌதமர், வசிட்டர், காசிபர், மார்க்கண்டேயர் ஆகிய எழுவரும் கங்கைக்கரையில் ஆச்சிரமங்கள் அமைத்து வாழ்ந்து தமது ஆச்சிரமத்தை வளம்படுத்த வேண்டும் என்று கங்கையை வேண்டிக்கொண்டார்களாம். கங்கையும் அவர்கள் ஆச்சிரமங்களை நனைத்துப் பாய்ந்தாள்என்பர்.

காசியில் விசுவநாதர் கோயிலில் அர்த்தசாமப் பூசை என்றால் பக்தர்கள் முண்டியடித்துக்கொண்டுபோய் இடம் பிடித்துக்கொள்வது வழக்கம். பக்திபூர்வமாக நடைபெறும் பூசைக்குப் பொன்னும் பொருளுமுபகரித்துவருபவர் நாட்டுக்கோட்டைச் செட்டிமார் என்பதை நினைக்கும்போது நமக்கும் பெருமையுண்டாகாமல் இருக்க மாட்டாது. அர்த்தசாமப் பூசையில் சப்தரிஷிகள் நினைவாக நடைபெறும் பூசையில் பூசாரிமார் எழுவர், எடுபிடியாளர் இருவர் ஒன்பதின்பர் தம்வயமிழந்து மந்திரமோதுதலும் பூசைசெய்தலும் உருக்கொண்டு உடம்பு பதறுதலும் எல்லாம் பக்திமயமாய் பரபரப்பாயிருக்கும், குங்குமத்தை எறிந்து ஆசீர்வதிக்கும்போது அதனை வரப்பிரசாதமாகப் பக்தர்கள் ஏற்றுக்கொள்வர்,

## காசிக்குப் போய்வந்தவர்

காசிக்குப் போய்வந்தவரை வணங்கினாலும் போதும் என்று மனவமைதி கொள்பவர் சைவர். சைவப்பெருமக்களோடு காசிப்பதி நெருங்கிய தொடர்புகொண்டுள்ளது. காசிவிசுவநாதர் விசாலாட்சி, அன்னபூரணி எல்லோருடைய இதயத்திலும் இடம்பெற்றுள்ளார்கள். காசி விசுவநாதரோடு அடுத்தகட்டத்தில் கோயில்கொண்டுள்ளவர் கேதாரநாதர். கேதாரநாதரைத் திருஞானசம்பந்தமூர்த்திநாயனார் அருமையாகப் பாடியருளியுள்ளார்.

காசிக்குப் போய்வந்தவர் மனம்மாறிப் பரிசுத்தராகி இருப்பர். பொய்பேசுவதில்லை. வட்டி வாங்குவதில்லை. களவெடுப்பதில்லை. கோபித்துக் கொள்வதில்லை. வீண்வம்புக்குப் போவதில்லை, என்றெல்லாம் சங்கற்பம் பூண்டுகொள்வர். நல்ல மனிதராகித் தெய்வாம்சம் பெறுவர்.

இன்னும் இலை, காய், பழம் என்பவற்றில் ஏதாவது ஒவ்வொன்றை விட்டுவிடவேண்டும் என்றொரு நியதியும் உண்டு.

## கங்காஸ்நானம்

இந்துநாகரிகம் எனவழங்கும் சனாதன தர்மத்தில் எழுபதுவீதம் சைவ வாழ்க்கை என்பதை எல்லோரும் ஏற்றுக்கொண்டுள்ளார்கள். சைவ வாழ்வில் பண்டிகைகள், நோன்புகள், விழாக்கள் நிறையவுண்டு. ஆண்டுதோறும், மாதந்தோறும், வாரந்தோறும் வருகின்ற விழாக்கள் சைவாசார அநுட்டானங்களைப் பேணிப் பாதுகாப்பதற்குப் பெருவாய்ப்பாகப் பெட்டகங்களாகப் பெரியோர்களால் எமக்கு விதிக்கப்பெற்றவை. எமது முன்னோர் அளித்த அருஞ்செல்வங்களுள் அவர்கள் கண்ட அனுபவங்களே தலைசிறந்தவையாகும். அவற்றில் நாம் கொள்ளும் நம்பிக்கையும் அவற்றைநாம் கைக்கொண்டொழுகுவதும், எம் பிற்சந்ததியாருக்கு அவற்றைவிட்டுப் போவதும் எமக்கு வாழ்வளிப்பதோடு நம் தலையாய கடமையாகவும் அமைந்துள்ளதாகும். தைப்பொங்கல் மங்கலகரமாக நிறைவேறியபின் ஒருவரையொருவர் காணும் விழாவில் பால்பொங்கிற்று என்று கேட்கும் வழக்கத்தில், தீபாவளியில் கங்காஸ்நானம் ஆயிற்று என்று கேட்கிறோம். ஆயிரம் மைலுக்கு அப்பாலுள்ள கங்கையில் நாம் நீராடிவந்ததாகக் கருதுமளவுக்குக் கங்கைநீர் எங்கள் கிணறுகளிலும் நீர்த்தொட்டிகளிலும் வந்து நிறைந்து நம்மைப் புனிதமாக்கியதாய பாவனையோடு கூடிய நம்பிக்கையே கங்காஸ்நானமாயிற்று என்ற குசல விசாரணையாகும்.

நாகரிக மாந்தர் உண்பதற்கும் உடுப்பதற்கும் முன்னர் நீராடுதல் வழக்கம். அது நியதியுமாகும். நீராடும் போது கங்கையின் நினைவாகவே பெரியவர்கள் நீராடுவார்கள். தாங்கள் நீராடும் நீர் கங்கா தீர்த்தம் என்ற நினைப்பு பாவனையாயிருந்தாலும் பரிசுத்தத்தின்பாற் படுத்திவிடுகிறது.

★ மன உறுதிப்பாடு உயிரை ஓம்புகிறது ★

''கங்கேச யமுனைச் சைவ
கோதாவரி சரஸ்வதி
நர்மதே ஸிந்து காவேரி
ஜலேஸ்மின் சந்நிதிம் குரு:''

இவ்வாறு ஒரு ஸ்லோகம் பக்திபூர்வமாகக் கூறப் பெறுகிறது.

## கங்கை என்னும் கடவுள் திருநதி

கங்கை என்னும் பெயர் எங்கள் நாட்டில் பொதுவாக எல்லா ஆறுகளுக்கும் வழங்குகிறது. மகாவலி கங்கை, களனிகங்கை, மாணிக்ககங்கை என்றெல்லாம் அவை வழங்குகின்றன. ஆனால் சிறப்பாகக் கங்கை என வழங்கும் நதி வடபாரதத்தில் பிரவாகிக்கின்றது.

இராமாயண காலத்துக்கு முன்பே கங்கை புகழ்பெற்றிருந்தது. இராமன் கங்கையைக்கடந்து காட்டுக்குப் போன கதையில் கங்கையின் பெருமை பேசப்பெறுகிறது. இராமாயணத்தைத் தமிழிற்றந்த கம்பர் ''கங்கை என்னும் கடவுள் திருநதி'' என்றும் ''ஆயகங்கை அரும் புனல்'' என்றும் ''தள்ளும் நீர்ப் பெருங்கங்கை', என்றும் ''தூய கங்கை'' என்றும் ''ஆழநீர்க் கங்கை'' என்றும் பலவாறாகப் புகழ்வர். கங்கையைப் பிரத்தியட்சப் பிரம்மம் என்பர். இராமகிருஷ்ணர் அதைப் பிரம்ம ஹரி என்று போற்றினர்.

கங்கையைக் கடப்பதற்கும் கங்கைக்கரையோரத்தைக் காண்பதற்கும் அன்றுபோல் இன்றும் கணக்கிறந்த நாவாய்கள் உள்ளன. சேவை மனப்பான்மையுள்ள ஓடக்காரர் குகன்வழியில் வாழ்கின்றார்கள்.

கங்கையில் எங்குமில்லாத அளவில் கழிவுகள் அழுக்குகள் சேர்தல் உண்மைதான். ஊரகணநீர் உரவுநீர் சேர்ந்தாலும் பேரும் பிறிதாகித் தீர்த்தமாம் என்பர். கங்கையிற் சேரும் கழிவுகள் நீரோட்டத்தில் மிதந்து உடனடியாகக் கடலிற் சேர்கின்றன. கங்கையில் விடப்பட்ட பாவங்கள் உடனடியாகக் கடலிற் சேர்வதால் கங்கை பாவந்தாங்குவதில்லை. கடலிற் சேர்ந்த பாவங்கள் சூரியனாற் காய்ந்து போகின்றன. சூரியனிடஞ் சேர்ந்த பாவங்களை மேகங்கள் எடுத்துக்கொள்கின்றன. அவை மழையோடு பூமியில் சேருகின்றன. பூமியில் வந்த பாவங்களைப் பயிர் பச்சைகள் தாவரங்கள் எடுத்துக்கொள்கின்றன. இப்படியே பாவம் ஒருவரிடமும் தங்காமல் சுற்றிக்கொண்டு போகிறது. இதை மனிதர் தங்கள் கர்ம வினைக்குத் தக்கதாக எடுத்துப் போகின்றனர்.

கங்கை புனித நதியாயும் புண்ணிய நதியாயுமிருப்பதால் காசியில் இறப்பதைப் புண்ணியப்பேறு என்று கருதி அங்கே உடல் விடுத்தவரின் பிரேதத்தைச் சிலர் சலசமாதி என்று கங்கையில் விடுக்கின்றார்கள். சிலர் கங்கைக்கரையில் அரிச்சந்திரன் மயானத்தில் அரைகுறையாகத் தீயில் எரித்தபின் கங்கையில் தள்ளிவிடுகிறார்கள்.

## அற்புதமான பாலம்

கங்கையின் இருகரைகளையும் இணைப்பதற்கு நவீன முறையில் பொறியியல் வல்லார் புதுமையான பாலம் அமைத்துள்ளார்கள். காசிப் பெரியாரான மதன்மோகன் மாளவியா அவர்களை நினைவுசெய்யும் முகமாக நிலவும் பாலத்தில் இரண்டு அடுக்குகள் உள்ளன. மேலடுக்கால் மோட்டார் வாகனங்கள் போக்குவரத்துப் புரிகின்றன. கீழடுக்கால் புகைவண்டிகள் கங்கையைக் கடக்கின்றன. ஆற்றிநூடே ஓடங்கள் போவதற்கு இடையில் எவ்வித மான தடையுமின்றி அமைந்த நீளமான அதியற்புத நவீன பாலம் இது.

## பாவத்தைப் போக்கும் கங்கை

கங்கையில் நீராடினால் பழைய பாவங்கள் நீங்கிவிடும் என்பது நம்பிக்கை. இதை வலியுறுத்தும் பழைய கதையொன்றைச் சமாஜ அன்பர் பழநிச் செட்டியார் புகைவண்டியில் கூறிக்கொண்டு வந்தார்.

ஒருநாள் கங்கையில் படிதவறி விழுந்தவனைக் கங்கை இழுத்துக்கொண்டு போனது. அருகில் நின்றவர்கள் எல்லோரும் பதறிக் குளறினார்கள். அங்கேயிருந்த சந்நியாசி ஒருவர் அவர்களைப் பார்த்து ''உங்களில் பாவஞ்செய்யாதவன் ஒருவன் கங்கையிற் குதித்தால் நீர் நின்றுவிடும். எனவே கங்கையில் இழுபட்டுப்போனவனை இலகுவாக இழுத்துவரலாம்'' என்றார்.

அங்கே நின்றவர்கள் ஒவ்வொருவரும் ஆளை ஆளைப் பார்த்தனர். அவர்களில் நட்டாமுட்டியாய ஒருவன் ஒருவரையும் பாராமல் துணிச்சலோடு ஆற்றில் குதித்தான். நீரோட்டம் நின்றது. அவன் ஆறடித்துப்போனவனை இலகுவாக இழுத்துவந்தான்.

இதைக்கண்டு ஆச்சரியப்பட்டவர்கள் எப்படி என்று கேட்டார்கள். அவன் சொன்னான். நான் செய்யாத பாவம் இல்லை, ஆனால் முன்னர் ஒரு பெரியவர் என் பாவங்கள் தீரவேண்டுமானால் கங்கையில் நீராடச் சொன்னார். அவர் சொன்னதை நம்பி நீராடினேன். பாவங்கள் நீங்கிவிட்டதாக நம்பி மேற்கொண்டு பாவஞ்செய்யாமல் இருந்தேன். நான் புனிதன் என்ற நம்பிக்கையோடு இப்போது ஆற்றிற் குதித்தேன். ஆற்றோட்டம் நின்றது. இவனை இழுத்துவந்தேன். இவ்வளவும்தான் எனக்குத் தெரிந்த விடயம்'' கதை ஏதோ கற்பனை போல இருந்தாலும் கருத்து நன்றாக இருப்பதால் நாம் இதனை மனங்கொள்ளல் நல்லது.

## காசியோ காசி

காசியில் கங்கைப் பிரவாகத்தைப் பார்த்தவண்ணம் இருக்கலாம். அலுப்புத்தட்டாது. அழகும் அமைதியும் ஆனந்தமும் உண்டாகும். காசி எங்கும் சிவலிங்கத்துக்குக் குறைவில்லை. கங்கைப் பேராறு காசியைத் தொட்டுப் பாயுமிடங்களில் 64 இடங்களில் படிக்கட்டுகள் வரிசையாகக் கட்டியிருக்கிறார்கள். படிவழியே மேலே ஏறிப் போனதும் நல்ல நிழல் மரங்கள் உண்டு. எங்கும் லிங்கங்கள், நந்திகள் உண்டு. மாடங்கள் கோபுரங்களில் எங்குப் பார்த்தாலும் முத்தலைச் சூலம் அழகாக விளங்குகின்றது. சூலத்தோடு நந்திக்கொடி, உடுக்கை எழுதிய கொடியும் பறக்கிறது.

★ குற்றமுள்ளவன் ஓட்டைப் பானைபோல் உதவமாட்டான் ★

இரண்டு பகலும் ஓரிரவும் புகைவண்டிப்பிரயாணம் அலுப்பில்லாமல் செய்தபின்னர், காசிப்புகைவண்டி நிலையத்தைக் காணலாம். அது பழைய பெயரில் வாரணசி எனவே வழங்குகிறது. வாரணை, அசி என்னும் ஆறுகளுக்கிடைப்பட்ட நிலப்பரப்பாகையால் வாரணசி எனப் பெயர்பெற்றுள்ளது. வாரணசிப் புகைவண்டி நிலையம் மிகப்பெரிது. வசதியானது. வருவோரை வரவேற்கு முகமாக அமைந்துள்ள கூர்நுனிக் கோபுரத்தில் தர்மசக்கரம் பொறிக்கப்பெற்றுள்ளது. கோபுரம் விமானம் போல அமைந்துள்ளது.

## ஹரித்துவாரம்

காசியைத் தொட்டுக்கொண்டுபோகும் கங்கை ஆழமானது அகலமானது வேகமானது. ஆனல் அரித்துவாரத்தில் அது இன்னும் புனிதமானது வேகமானது. அங்கே தான் அது அதிரவருகிறது. அங்கே தெளிவாகப் பளிங்கு போலத் தெரிகிறது. படிக்கட்டுகள் பாலங்கள் எங்கும் பாதுகாப்புக்காக இருப்புச்சங்கிலிகள் கம்பங்கள் தொடுத்திருக்கிருர்கள்.

அரித்துவாரம் நிறையக் கோயில்கள் உண்டு. கோயில் நகரம் எனவே அதனைக்கொள்ளவேண்டும். எங்கெங்கே பார்த்தாலும் சிவன்கோயில்கள். லிங்கங்கள் நந்திகள் இல்லாத இடங்களே இல்லை. குங்குமமும் உருத்திராக்கமும் மிகுந்த இடத்தில் ஆறுமுக உருத்திராக்கம் குறைவுதான். நேபாளம் திபத் முதலிய நாட்டுப்பெண்கள் அங்கே பலவிதமான கம்பளி ஆடைகள், மணிமாலைகள், புலிப்பற்கள், சாளக்கிராமங்கள் விற்கிருர்கள். சிலர் புன் சிரிப்புத்தவழ நல்லதமிழ் பேசுவதைக் கேட்கும்போது புல்லரிக்காமல் விடாது. ஆங்கிலந்தெரிந்த வடநாட்டவர்கள் விடாக்கண்டராய் இந்திபேசும்போது ஏழை வியாபாரிகள் சூதுவாதின்றி நல்ல மனசோடு தமிழ்பேசும் போது புல்லரிக்காமல் என்ன செய்யும். அச்சா என்று அவர்கள் உச்சரிப்பதே எல்லோருக்கும் உரிய மொழியாகி விடுகிறது.

அரித்துவாரத்தில் கங்கைப்பிரவாகம் அதிகம் என்பதோடு அங்கேதான் சத்திரத்தின் அருமையும் உண்டு. மலைமேல் சண்டிதேவி கோயில் உண்டு. அதனை ஆதி சங்கரர் அமைத்தார் என்பர். அங்குள்ள மகரவாகினி கங்கா கோயில் புதுமையானது. முதலை வாகனத்தையுடைய கங்காதேவி ஆலயம் அது. அங்கே தமிழ்நாட்டு வணிகப்பெருமக்களாய நாட்டுக்கோட்டைச் செட்டிமார் அமைத்த சத்திரம் மூன்றுமாடிகளைக் கொண்டுள்ளது.

சிவபெருமானைப் புறக்கணித்துத் தக்கன் யாகஞ் செய்த இடத்தை அங்குள்ளவர் தட்சமந்திர் என்று காண்பிக்கிருர்கள்.

## திரு. வி. க. நூற்றுண்டு விழா

தமிழ்த்தென்றல், தமிழ்முனிவர் திருவாரூர் வி. கலியாணசுந்தரனர் நூற்றுண்டு விழா 26-8-82 முதல் 26-8-83 வரை கொண்டாடப்பெறும் என்று சென்னை நக்கீரர் கழகத்தார் எமக்கு அறிவித்துள்ளார்கள்.

திரு. வி. க. எம்மவர். அவர் எமக்கும் உரியவர். சொந்தமானவர், எம்மவரான மேலைப்புலோலி தசாவதானம் நா. கதிரைவேற்பிள்ளை அவர்கள் உருவாக்கிய உத்தமர்களுள் திரு. வி. க. அவர்களும் ஒருவர்.

திரு. வி. க. அவர்கள் தமது பத்திரிகையாலும், நூல்களாலும், பேச்சாலும் உருவாக்கிய உத்தமர்கள் பல்லாயிரவர். பல்லாயிரவர் நெஞ்சில் இடம்பெற்றுள்ள தமிழ்ப்பெரியார் நினைவு என்றென்றும் நிலவிநிற்கும் என்பது உறுதி. வாழ்க அவர் திருநாமம்.



## மில்க்வைற் தாபகர் தினம்

மில்க்வைற் தாபகர் வீ. மு. கந்தையாபிள்ளை அவர்களின் நினைவுதினம் ஆண்டுதோறும் வெகுவிமரிசையாகத் தொழிலாளர், முதலாளி, உற்ருர், உறவினர், அயலவர், நண்பர்கள் மத்தியில் நடைபெறுதல் வழக்கம்.

இவ்வாண்டு 25-2-82 முதல் 24-3-82 வரை காசி யாத்திரை செய்து மீண்ட மில்க்வைற் தம்பதிகள் 27-3-82 ல் தங்கள் இல்லத்தைச் சேர்ந்த வள்ளுவர் மண்டபத்தில் தாபகர் தினம் கொண்டாடுவதற்கான பூர்வாங்க ஏற்பாடுகளைத் தொழிலாளரே முன்னின்று செய்துவைத்தார்கள். அன்றைய தினம் மில்க்வைற் மனையில் தாபகர் தினமும், சிரார்த்த தினமும், காசியால் மீண்ட தொழிலதிபர் செய்த மகேஸ்வர பூசையும் ஒன்ருக இணைந்து எல்லோரையும் அன்புப் பிடியில் இணைத்தன.

## தம்பதிகள் வாழ்க



நவாலி கிழக்கைச் சேர்ந்த திரு. திருமதி காங்கேசு தம்பதிகளின் புதல்வன் சுகுமார் மில்க்வைற் தொழிலகத்தில் உத்தியோகம் பார்ப்பவர். இவர் 20-3-82 சனிக்கிழமை ஆனைக்கோட்டை உயரப்புலத்தைச் சேர்ந்த தம்பித்துரை தம்பதிகளின் புதல்வி புவனேஸ்வரி அவர்களைத் திருமணம் செய்துகொண்டார். மணமக்கள் எல்லாப்பேறுகளும் பெற்றுப் பெருவாழ்வு வாழ்வாராக.

உ
ஓம்
கணபதி துணை



வக்ர துண்ட மஹா காய
சூர்ய கோடி ஸமப்ரப
நிர்விக்னம் குரு மே தேவ
சுபகார்யேஷு ஸர்வதா.

வளைந்த துதிக்கையும், பருத்த உடலும், கோடி சூர்யர்களை யொத்த ஒளியுங் கொண்டு விளங்கும் ஹே கணபதியே, நான் தொடங்கும் நற்செயல்களெல்லாம் என்றும் தடையின்றி நிறைவேறுவதாக.

மண்ணுல கத்தினிற் பிறவி மாசற
எண்ணிய பொருளெலாம் எளிதின் முற்றுறக்
கண்ணுத லுடையதோர் களிற்று மாமுகப்
பண்ணவன் மலரடி பணிந்து போற்றுவாம்.

ஓம்

ஓம் ஈசாவாஸ்யமிதம் ஸர்வம்
யத்கிஞ்ச ஜகத்யாம் ஜகத்
தேன த்யக்தேன புஞ்ஜீதா
மாக்ருத: கஸ்ய ஸ்வித்தனம்.

இவ்வுலகில் உள்ளவை அனைத்தையும் ஆக்கியவர் கடவுள்; எனவே அவரை நினைந்து கிடைத்தவற்றைப் பற்றின்றி நுகருக. எவரது உடைமையையும் விழையற்க.

குருர் பிரம்மா, குருர் விஷ்ணு
குருர் தேவோ மஹேஸ்வர:
குருஸ் ஸாட்சாத் பரப்பிரம்ம
தஸ்மை ஸ்ரீகுரவே நம:

குருவே பிரமன், குருவே விஷ்ணு, மஹேஸ்வரனும் பரப்பிரமமும் குருவே. இத்தகைய குருவுக்கு எண்ணற்ற வணக்கங்கள்;

ஸ்வஸ்தி: ப்ரிஜாப்ய: பரிபாலயந்தாம்
நியாய்யேன மார்கேண மஹீம் மஹீசா
கோபிராம் மணேப்ய: சுபமஸ்து நித்யம்
லோகா: ஸமஸ்தா ஸுகினோ பவந்து.

அரசு நீதி தவறாமல் குடிகள் மீது ஆட்சி நடத்தி வருவாராக. நீதி வழியே செல்வதனால் எல்லா மனைகளி லும் சீரும் செல்வமும் கொழித்து விளங்குக. ஆவினங் களும் பிரம்ம ஞானிகளும் சுகமும் அமைதியும் பெற்றுச் செழித்து வாழ்க. உலக மனைத்தும் சுகம் பெற்று ஓங்குக;

வாழ்க அந்தணர் வானவ ரானினம்
வீழ்க தண்புனல் வேந்தனும் ஓங்குக
ஆழ்க தீயதெல் லாமர னாமமே
சூழ்க வையக முந்துயர் தீர்கவே.

நமஸ்தே ஸதே தே ஜகத் காரணாய
நமஸ்தே சிதே ஸர்வ லோகாஸ்ரயாய
நமோ அத்வைத தத்வாய முக்தி ப்ரதாய
நமோ ப்ரம்மணே வியாபினே சாஸ்வதாய.

உலகத்துக்குக் காரணமாயுள்ள சத்திற்கு வணக்கம்; உலகமனைத்தையும் காத்தருளுகின்ற சித்ரூபியான கடவுளுக்கு வணக்கம்; அத்வைத ரூபியும் என்றென்றும் நிலைத்திருப்பவரும், முத்தியளிப்பவரும் எங்கும் உள்ள வருமான பரப்பிரம்மத்திற்கு வணக்கம்.

## Grass roots of Hinduism

"Dharma is the source of wealth, it is the source of happiness. Everything is obtained by Dharma and the world is but an essence of it."

All Hindus believe in the trinity, Brahma the creator, Vishnu the preserver, and Siva the destroyer. The Hindus have common practices, netuals and festivals. They all believe in pilgrimage to temples and sacred places and have faith in the efficacy of prayer and meditation. They have common beliefs too. To the Hindu the spiritual values of truth - satya and non - violence - Ahimsa come first".

— Mahamana Jaya Chamraj Wadiyar

## Agastya

### The Pioneer of Hindu Culture Abroad

The earliest record of the Hindus are the Vedas. The authors of the vedas were Rishis who saw beyond the normal range of the vision of the ordinary people. The Rishis had developed their intuitive powers to such an extent that they were able to have a true vision of the world and happinings, not only in their life - time but also for years to come. They were sages and seers.

Agastya was one of the seers and he was the first to cross the Vindhyas and carry the lamp of vedic culture. He is said to have carried the Indian culture to South East Asia. There are legends in Indo - China and Indonesia about Agastiya. He is regarded as the first grammarian of Tamil language.

— Dr. Manu G. Bhagat

★ சுயநலமுற்றவனுக்கும் கடவுளுக்கும் வெகுதூரம் ★

## சிவநடனம் சொக்க தாண்டவம்

சிவபெருமான் ஆன்மாக்கள் உய்யும் பொருட்டுத் திருநடனஞ் செய்யும் அற்புதத் திருக்கோலம் நடராஜ மூர்த்தம். அவர் ஆடியருளிய அற்புதக் கூத்துக்கள் பல. அவற்றுள் ஒன்று சொக்கதாண்டவம் எனப்படும். இது சுந்தர தாண்டவம் எனவும் பெயர் பெறும் என்றும், சாந்திக் கூத்தின் ஒன்ருய சுத்த நிருத்தம் எனப்படும் என்றும் கூறுவர். இதைப்பற்றி இளங்கோவடிகள் தமது சிலப்பதிகாரத்திற் குறிப்பிட்ட இடத்தில் உரையாசிரியர் அடியார்க்கு நல்லார் இது நூற்றெட்டுக் கரணங்களைக் கொண்டது என்று விளக்குவர்.

விராட் புருடனின் இருதய ஸ்தானமாய சிதம்பரத்திலே பொன்னம்பலத்திலே திருக்கூத்தாடுகின்ற இறைவன் துவாதசாந்தம் எனப்படும். மதுரையிலே வெள்ளியம்பலத்திலே பதஞ்சலி முனிவரும் வியாக்கிரபாத முனிவரும் வேண்ட ஆடியருளிய நடனமே சொக்கதாண்டவம் என்பர். இவ்வைபவத்தைப் ''பதஞ்சலிக்கருளிய பரம நாடக'' என்று மாணிக்கவாசக சுவாமிகள் போற்றுவர். இதையே திருஞானசம்பந்தமூர்த்தி நாயனரும் தமது தேவாரத் திருமுறையில், ''கொட்டிசைத்த ஆலவாய்'' எனப் பாடியருளுவர். ''இருந்தமிழ்க் கூடற் பெருந்தவர் காண வெள்ளியம் பலத்துட் டுள்ளிய ஞான்று'' என்று கல்லாடர் போற்றுவர்.

சிவபெருமான் மெய்ஞ்ஞானப் பேரொளி வடிவாகத் தோன்றி முயலகனின் முதுகில் வலது திருவடியை ஊன்றி. இடது திருவடியைத் தூக்கி, பத்துத் திருக்கரங்களும், அவற்றின் வலப்பாகத்தமைந்த ஐந்தில் அபய அந்தத்திலே சூலமும் ஏனைய நான்கில் உடுக்கை, அம்பு, வாள், மழு என்பனவும்; இடத்திருக்கரம் ஐந்தில் வரத அந்தத்தில் பாம்பும் ஏனைய நான்கில் அக்கினி, வில், கேடகம், தண்டு என்பனவும்; திருநீலகண்டத்தராய் சங்க குண்டலம் பூண்டு, செஞ்சடையினராய், சிவந்த திருமேனியில் திருநீறு பூசி; சிவகணங்கள் மொந்தை தண்ணுமை முதலியன முழக்கவும் திருநந்தி தேவர் மத்தளம் கொட்டவும். திருமால் இடக்கை இசைக்கவும், தும்புருவும் நாரதரும் பாட்டிசைக்கவும், பஞ்சதுந்துபிகள் ஒலிக்கவும், கலைமகள் சுருதிகூட்டவும், நான்முகன் யாழ்தடவிச் சாமகீதம் பாடவும். தேவர்கள் பூமழை பொழியவும், உமாதேவியார் ஒதுங்கிநிற்கவும் இறைவன் திருநடனம் ஆடியருளினர்.

பதஞ்சலி, வியாக்கிரமபாதர் ஆகிய முனிவர் இருவருக்காக ஆடியருளிய திருக்கூத்தினை ஏனைய முனிவர்களும் தேவர்களும் கந்தர்வரும் அவுணரும் யோகியரும் கிம்புருடரும் மற்றும் பிறரும் கண்டு மகிழ்ந்தனர். பதஞ்சலியும் வியாக்கிரபாதரும் இறைவனை வெகுவாகத் துதித்தனர்.

''அடியரேம் பொருட்டு வெள்ளி
யம்பலத் தாடல் போற்றி
பொடியணி தடந்தோள் போற்றி
புரிசடை மகுடம் போற்றி
கடியவிழ் மலர்மென் கூந்தல்
கயல்விரு பாகம் போற்றி
நெடியதற் பரமா னந்த
நிருத்தனே போற்றி போற்றி.

## உபநிடதத்தின் மகிமை


உபநிடதம் வேதசிரசு. வேதப்பொருள். அது தேவார திருவாசகத்தோடு அடைவுடையது. அதிக வியாபகமானது. வித்தைக்குரிய பெருநூல்கள். மூன்றனுள் ஒன்ருனது. அதை முஸ்லிம் பேரரசர் முயற்சி எடுத்துப் பாரசீகத்தில் மொழிபெயர்த்து வெளியிட்டார். கிறிஸ்தவ தொண்டர் ஒருவர் ஒருலட்சம் ரூபா முதலீடு செய்து ஆங்கிலத்தில் மொழிபெயர்த்தார்.

சத்தியம் என்பது மனதால் கூட மற்றவருக்குத் துன்பஞ் செய்யாமை.

சத்தியத்திலிருந்து தவறலாகாது. தர்மத்திலிருந்து தவறலாகாது.

நல்லதைச் செய்வதிலிருந்து தவறலாகாது.
கடமையைச் செய்வதிலிருந்து தவறலாகாது.
அன்னையைத் தெய்வமாகக் கருதவேண்டும்.
அப்பாவைத் தெய்வமாகக் கருதவேண்டும்.
ஆசிரியரைத் தெய்வமாகக் கருதவேண்டும்.
விருந்தினரைத் தெய்வமாகக் கருதவேண்டும்.
ஆசாரமில்லாததைச் செய்தலாகாது.
சிரத்தையில்லாமல் தானஞ் செய்தலாகாது.

விவேகமும் நற்குணமும் உள்ளவருக்கு உபநிடதம் உடனடியாக விளங்கும். அது ராஜ கட்டளை போலவும், குரு உபதேசம் போலவும், நண்பன் ஆலோசனை போலவும் ஏற்றுக்கொள்ள வேண்டியது. அதைக் கட்டாயம் உபாசித்தல் வேண்டும். திருநான்மறை முடிவு என்று ஒளவையார் சொன்னது இதைத்தான் என்பர்.



## ஸ்ரீ இராமகிருஷ்ண பரமஹம்சர்

பகவானின் 147ஆம் ஜனனதின விழா மட்டக்களப்பு கல்லடி உப்போடையில் 25-2-82 வியாழக்கிழமை வெகு விமரிசையாகப் பக்திபூர்வமாகக் கொண்டாடப்பெற்றது. கல்லடி உப்போடை சுவாமி ஜீவனனந்த அவர்களின் சேவையும் பணியும் இராமகிருஷ்ண மடங்கள் எங்கும் புகழ்பெற்றுள்ளன. பிள்ளைகளை மனிதராக்குவதில் இவர் கையாளும் முறை எல்லோராலும் பாராட்டப்பெற்றுள்ளது.

★ தர்மத்துக்கு முன் எதுவும் தலையெடுக்க மாட்டாது ★

## கங்கையைச் சடைமேல்வைத்த என்னும் திருமுறைத்திரட்டு

இம்முறை கங்கைக் கரையில் பக்தி விசுவாசத்தோடு நடைபெற்ற சென்னைச் சைவசித்தாந்த மகாசமாஜத்தின் எழுபத்தாறும் ஆண்டு விழாவின் நினைவாக அவர்கள் கங்கையைச் சடைமேல்வைத்த என்னும் திருமுறைத் திரட்டு ஒன்றை வெளியிட்டார்கள்.

சிவபெருமான் அபிடேகப் பிரியரானபடியாலும், விழா கங்கைக் கரையில் நடைபெற்றபடியாலும் இவ் வெளியீடு பொருத்தமாயிருந்தது. இதனை வெளியிட்டு வைத்தவர் யாழ்ப்பாணம் மில்க்வைற் தொழிலதிபர் சிவநெறிப்புரவலர் திரு. க. கனகராசா அவர்கள்.

மூவர் தேவாரப்பதிகங்களில் எங்கெங்கே கங்கைபற்றி வந்துள்ளதோ அவற்றையெல்லாம் தேடிமுத்துக்குளித்தாற் போற் குளித்துப் பொறுக்கித் திரட்டியமை பெரிதும் பாராட்டப்பெற வேண்டியதாகும்.

கொன்றைச் சடைமுடிமேல் பொறையார் தரு கங்கைப் புனலுடையான், கொன்றை மலர்கூடக் கங்கை புனைந்த சடையார், கங்கை தங்குமுடியார், கங்கை தங்கு சடையார், கங்கை ஒளிர்புன் சடை, வீழ்தருகங்கை கரந்தார், அலைபுரிந்த கங்கை தங்கும் அவிர்சடை, கங்கை சேர் வார்சடையான், கங்கை அங்கே வாழவைத்த கள்வன், கங்கை நீர்கொண்ட சடையினர், கங்கை தனைக் கரந்த கறைக்கண்டன் என்பனபோன்ற நூற்றெட்டுத் தொடர்கள் கொண்ட நூற்றெட்டுத் தேவாரப் பாடல்கள் இத்திரட்டில் இடம் பெற்றுள்ளன.

சிவ பூசைமேற் கொள்ளும் சைவாசார சீலர்கள் உடையவருக்கு அபிடேகஞ் செய்யும்போது இத்தகைய பாடல்களைப் பாடிக்கொண்டே அபிடேகப் பிரியனை நீராட்டுதல் பொருத்தமாக அமையும்.

## God

(Sri Aurobindo)

God is the only being.

God is the one stable and eternal Reality.

God is one but he is not bounded by his unity.

As the absolute He stands behind every relative; as the Eternal He supports every transient; as the Universal He manifests Himself in every particular

The eternal and universal self of every human being is God.

In God all things find their secret truth and their absolute reconciliation.

God is there not only in silence, but in the action

The godhead in us is our spirit moving towards its own conceated perfection.

God is a great and cruel Fortuner because He loves.



## சேரவாரும் செகத்தீரே

— தாயுமான சுவாமிகள் —

காடுங் கரையு மனக்குரங்கு
கால்விட் டோடவதன் பிறகே
யோடுந் தொழிலாற் பயனுளதோ
யொன்றும்ப் பலவா யுயிர்க்குயிரா
யாடுங் கருணைப் பரஞ்சோதி
யருளைப் பெறுவதற் கன்புநிலை
தேடும் பருவ மிதுகண்டீர்
சேரவாருஞ் செகத்தீரே.

சைவ சமயமே சமயஞ்
சமயா தீதப் பழம் பொருளைக்
கைவந் திடவே மன்றுள்வெளி
காட்டு மிந்தக் கருத்தை விட்டுப்
பொய் வந்துழலுஞ் சமயநெறி
புகுத வேண்டா முத்திதருந்
தெய்வ சபையைக் காண்பதற்குச்
சேரவாருஞ் செகத் தீரே.

காக முறவு கலந்துண்ணக்
கண்ட ரகண்டா காரசிவ
போக மெனும்பே ரின்ப வெள்ளம்
பொங்கித் ததும்பிப் பூரணமா
யேக வுருவாய்க் கிடக்குதையோ
வின்புற் றிடநா மினியெடுத்த
தேகம் விழுமுன் புசிப்பதற்குச்
சேர வாருஞ் செகத் தீரே.

உலகத்தவரே! மனமாகிய குரங்கு காட்டினும் மேட்டினும் ஓடித்திரிய, அதன்பின்னே ஓடும் தொழிலால் ஒரு பயனும் இல்லை. ஒன்றாகிப் பலவாகி உயிர்க்குயிராகித் திருநடனஞ் செய்தருளுகின்ற கருணைப் பரஞ்சோதியின் திருவருளைப் பெறும் பொருட்டு அன்பு நிலையைத் தேடுவதற்குரிய சமயம் இதுவாதலால் எல்லீரும் சேரவாருங்கள்.

உலகத்தவரே! பல சமயங்களுள் சைவசமயமொன்றே சற்சமயமாகும். சமயங்களுக்கெட்டாத அநாதிப் பரம் பொருளைக் கைவசமாம்படி பொற்சபையில் வெளிப்படையாகக் காட்டி நிற்கும் இதனை விட்டுப் பொய்மேலிட்டு உழல்வதற்கேதுவாகிய புறச்சமய மார்க்கங்களில் நுழைய வேண்டாம் வீடுபேறென்னும் முத்தியினைக் கொடுக்கின்ற தெய்விகம் பொலிகின்ற பொன்னம்பலத்தைச் சேவிப்பதற்கு எல்லீரும் ஒன்று சேர வாருங்கள்.

(தொடர்ச்சி 13ஆம் பக்கம்)

★ தியானமும் ஜபமும் தீவினை வேகத்தைக் குறைக்கும் ★

# உலகத்திற்கு ஒரு சமயம்

உலகிலுள்ள சமயங்களுக்கெல்லாம் முற்பட்டதான மூத்த சமயம் சைவசமயம். அது முக்கண்ணனான சிவபெருமானை முழுமுதற் கடவுளாகக் கொண்ட சமயம். சிவனை முதலாகக் கொண்டதால் அது சைவம் எனப் பெயர்பெற்றது. அது மனிதரை மேம்பட்ட நிலைக்கு உயர்த்துவதற்கு உறுதுணையான நெறி. அதனைச் சைவ நெறி எனவும் வழங்குவர். அது பெரியவர்கள் தம்மை மறந்து தலைவனை நினைந்து நினைந்து தாம் பெற்ற அநுபவங்களைக் கொண்டு வளம்பெற்றுள்ளது.

பெரியவர்கள், முனிவர்கள், ஞானியர் என மனித நிலைக்கு மேற்பட்ட நிலையை அடைந்தவர்கள் தாம்கண்ட கேட்ட உணர்ந்த அநுபவித்த தெய்விக சம்பந்தங்கள் சம்பவங்களை வேதங்கள், உபநிடதங்கள், இதிகாசங்கள், புராணங்கள் முதலிய பெருநூல்களில் கூறியுள்ளார்கள். அடியார்கள், நாயன்மார்கள், ஆரவர்கள் முதலான பெரியவர்கள் தமக்கு உணர்த்தப்பெற்ற உண்மைகளை எமக்கு உணர்த்துவதற்காகத் திருமுறைகளைப் பாடியுள்ளார்கள்.

மனிதருக்கு உயர்வும் உய்தியும் உதவக்கூடிய அநுபவங்கள் குருசிட பாரம்பரியமாக வளர்ந்து வந்துள்ளன. என்றும் அழியாது வளர்ந்து வழங்கிவந்த தொன்னெறி, தர்மம் சாத்திரம் பேணிக்காக்கப்பெற்றுள்ளன. என்றும் நிலவிப் பயன் தருவதைச் சனாதன தர்மம் என்பர். அது இன்றும் நிலவி எமக்குப் பயன்தருகின்றது. அது எம் முன்னோர் எமக்களித்த அருஞ்செல்வமாகவே, அதனை நாம் பரிசுத்த மனத்தினராய்ப் பக்குவமாகப் பேணிக் காத்து எம் பின்வரும் சந்ததியினருக்கும் பயன்பட வழி வகுத்துவிடுதல் வேண்டும்.

உயிரினங்களுள் மனிதகுலம் ஒன்றே சிந்திக்கவும் நினைக்கவும் மனம் என்னும் கரணம் கைவரப்பெற்றுள்ளது. சிந்தனைசெய்ய மனம் அமைத்தவர் வந்தனை செய்யவும் வழிகண்டனர். வழிகண்டமனத்தவர் நினைப்பதற்கு மந்திரங்கள் பிறந்தன. மந்திரங்கள் நினைப்பவரைக் காப்பாற்றும் மகிமை பொருந்தியவை.

சிந்தனையின்றிச் செய்யும் அலுவல்கள் நன்மை பயப்பதில்லை. எண்ணித்துணிந்து செய்யும் காரியங்கள் அநுகூலமடைகின்றன. சிந்தித்துச் செயலாற்றும் விவேகசக்தி மனித குலத்துக்கு மாத்திரமே அமைந்துள்ளது. எனவே தான் மனிதர் மேல்நோக்கி உயர்வடையவும் உய்திபெறவும் வழிவகைகளை அவாவுகின்றனர். அவர்களுக்கு வகுக்கப்பெற்ற வழிவகைகளே சமயம், தர்மம், நீதி என்பனவாகும்.

சமயம், தர்மம், நீதி என்பனவற்றைச் சிந்திக்கலாம். ஆனால் அவற்றில் நம்பிக்கை கொள்வதோ, அவற்றுக்கு விசுவாசமாக வாழ்வதோ அரிய செயல்களாகும். நீதியை அறிய விசுவாசத்தோடு வாழ்பவன் சமயி. அவன் தர்மம் அறிந்தவன். தர்மம் அறிந்தவன் பிசகு செய்யவே மாட்டான். அவன் தான் வாழ்வதைப் போலப் பிறரும் வாழ வேண்டும் என நினைப்பான். யான் பெற்ற இன்பம்பெறுக இவ்வையகம் என்பது அருளாளன் ஒருவன் கண்ட அநுபவ வாக்கியம். இனி தர்மத்தைப்பற்றி அறிய ஆசை என்றும், அறஞ்செயவிரும்பு என்றும் ஆன்றோர் கூறுவர்.

தர்மம் என்பது இருமையும் இன்பம் பயப்பது. அது தனிப்பட்ட மனிதனுக்கானதும், குடும்பத்துக்கானதும், சமூகத்துக்கானதும், நாட்டிற்கானதும், உலகத்துக்கானதும் எனப்பலவாக விரியும். எந்தத் தருமத்தையும் நன் மனசுடன் செய்தல் வேண்டும் என்பர். தர்மம் வலி குன்றினால் எல்லாம் வலி குன்றித் தேய்ந்து அழியும். தர்மம் தலைகாக்கும். தர்மஞ் செய்தவர் தர்மவான். தர்மவான் சத்தியம் நேர்மை தவறாதவனாவன்.

தனிப்பட்டவர் தர்மம் பிரம்மச்சரியத்திலும் இல்லறத்திலும், வானப்பிரஸ்தத்திலும், துறவுக்காலத்திலும் அந்தந்த ஆச்சிரம நெறிக்கு அமைவாகச் செய்தல்தகும். தர்மம் என்பது அத்திவாரம் போன்றது. அத்திவாரம் பிழைத்தால் அடுக்கு வீடு பிழையாகும். அதேபோல் தர்மம் பிழைத்தால் பொருள், இன்பம், வீடு என்பனவும் பிழையாகும். வள்ளிக்கொடியில் கிழங்கு உண்டாதல், செந்நெல் நல்ல விளைவைத் தருதல், வேட்டுவர் அம்பு இலக்கை அடைதல், தேன்வதையில் தேன்நிறைதல் முதலியன யாவும் தர்மம் தழைத்ததால் உண்டாவன என்று கலித்தொகை என்னும் சங்கநூல் கூறுகிறது.

நாம் சில தர்மங்களை நாள்தோறும் செய்தல் வேண்டும். சில தர்மங்கள் சம்ஸ்காரங்கள் என்னும் அநுட்டானங்களாய் நமக்கு உய்வைத் தருவனவாய் அமைந்துள்ளன. சில தர்மங்கள் ஆண்டுக்கொருமுறை செய்வனவாயுள்ளன. சில தர்மங்கள் வாழ்நாளில் ஒருமுறை செய்வனவாயுள்ளன.

சந்தியாவந்தனம், இறைவழிபாடு, நாளாந்தக் கடமைகள் என்பன தினந்தோறும் செய்யப்பெற வேண்டியவை. சிராத்தம், தர்ப்பணம் முதலியன எம்முன்னோர் பொருட்டு ஆண்டுதோறும் செய்ய வேண்டியவை. திருமணம் போன்ற தருமம் ஆயுளில் ஒருமுறை செய்ய வேண்டியதாகும்.

தர்மத்தைப் பற்றி ஏராளமான நூல்கள் கூறுகின்றன. அவற்றுள் தர்மசாஸ்திரங்கள் என்னுந்தொகுதி முக்கியமானவை. அவை வேதங்களை அடிப்படையாகக் கொண்டு முனிவர்களாற் செய்யப்பெற்றவை. அவை ஆஸ்திக தர்மங்கள் எனப் பெயர்பெற்றவை. ஆஸ்திக தர்மங்களுள் ஆறு தர்மசாஸ்திரங்கள் சிறப்பாகக் கூறப்பெறுவன. அவற்றைச் சட்தர்சனம் என்பர். வேதத்தை ஏற்றுக்கொள்ளாத பௌத்தர், சமணர் முதலானோரும் தங்கள் நூல்களைத் தருமத்தின் பெயரினாலேயே வழங்குவர். வேதத்தையும் இறைவனையும் ஒத்துக்கொள்ளாதவர்களை நாம் நாஸ்திகர் என்கிறோம். எனவே அவர்களின் தர்மம் நாஸ்திக தர்மம் எனப்படும்.

சமணர், பௌத்தர் கூட்டத்தைச் சேர்ந்த சாருவாகர்கள் என்போர் அழகாகப் பேசுபவர். சாருவாகர் ஆரம்பித்து வைத்த சாஸ்திரத்தையே அசுரர்கள் நன்றாக ஆராய்ந்து அறிந்தார்கள்.

(தொடர்ச்சி 13ஆம் பக்கம்)

**பணிவிடை செய்பவனே இறைவழிபாடு செய்பவன்**

# Religion

1. Religion! what a treasure untold! Resides in that heavenly word! More precious than silver and gold! Or all that this world can afford.

—William Cowper

★ ★ ★

2. The highest flights of charity, devotion, trust, patience, bravery to which the wings of human nature have spread have been for religious ideals.

William James

★ ★ ★

3. When one compares the deeply religious and spritual person with the best and bravest of those who are not religious one seas, it must be confessed that the former possesses something which others lack.

— J. B. Pratt

★ ★ ★

4. Without religious root there can be no real sincere morality, just as without roots there can be no real flowers.

— Leo Tolstoy

★ ★ ★

God is not to be gained by weighing the feeble arguments of reason for or against His existence. He is to be gained only by a self transcending absolute consecration, aspiration and experience.

— Aravindar

(12ஆம் பக்கத் தொடர்ச்சி)

## உலகத்திற்கு ----

கடவுள் ஒருவர் இருக்கிறார். ஒன்றாய் உள்ள அவர் ஆன்மாக்களுக்கு அருள் செய்வதற்காகப் பலவாய் உடனாய் இருப்பர். உலகத்தைப் படைத்துக் காத்துக் காரியங்களைச் சாதிப்பதற்கு அவர் மூர்த்திகளை நியமித்துள்ளார். அம்மூர்த்திகளுக்குச் சக்தி தேவிகளும் இருக்கிறார்கள். இவர்களைவிட உலகில் சுபீட்சம், நல்வாழ்வு முதலியவற்றுக்காகக் காரியங்கள் பார்க்கும் அதிகார தெய்வங்கள் இருக்கிறார்கள். மழைபெய்வதற்கு, காற்று வீசுவதற்கு, ஒளியும் வெப்பமும் உண்டாவதற்கு அதிதேவதைகள் வருணபகவான், வாயுபகவான், சூரியபகவான் முதலிய திருநாமங்களோடு இருக்கிறார்கள்.

மனிதருக்கு விதிக்கப்பெற்ற தருமங்களுள் கடவுள் வழிபாடு மிகவுஞ் சிறந்தது. இந்தப்பிறப்பின் பயன், கல்வியின் பயன் கடவுளைத் தொழும்பெரும் கடமையே யாகும் என்று திருவள்ளுவர் கூறியுள்ளார். வேதங்கள், சாஸ்திரங்கள், ஆகமங்கள் முதலியன கூறியுள்ள அரிய கருத்தைத் திரட்டி ஆறுமுகநாவலர், "இந்தச் சரீரம் நமக்குக் கிடைத்தது நாம் கடவுளை வணங்கி முத்தியின்பம் பெறும் பொருட்டேயாம்" என்று கூறியுள்ளார்.

கடவுளை வணங்கும் முறை வழிபாடு எனப் பெயர் பெறும். கடவுள் ஒருவர் இருக்கிறார் என்று ஒத்துக் கொண்ட சில மதத்தினர் கடவுளுக்கு உருவம் இல்லை என்பதை வற்புறுத்தி அவரைப் பிரார்த்தனை மூலம் வணங்குவர். நல்லொழுக்கத்தோடு வாழ்ந்தால் அதுவே வழிபாடாகும் எனவும் கருதுவர். சிலர் கடவுளுக்கு வடிவம் இல்லை என்று கருதிக்கொண்டே தங்கள் மதங்களுக்குச் ஒரு சில அடையாளங்களைக் கொண்டு அவற்றை மதிப்பர்.

உலகிலுள்ள எல்லாச் சமயங்களிலும் பார்க்கப் பழமையான சமயம் சைவ சமயம். சைவ சமயத்தில் கடவுள் வழிபாடு உருவ வழிபாட்டில் நிகழுகின்றது. உருவமில்லாத இறைவனுக்கு உருவம் அமைத்து, பெயரில்லாத அவருக்கு ஆயிரந்திருநாமம் வழங்கி அவரிடம் அருள் வேண்டி வணங்கும் முறை சைவ சமயத்தவர் முறையாகும். எங்கும் நீக்கமற நிறைந்திருக்கும் இறைவனைத் திருக்கோயிலில் நிறைவாகக்கண்டு வணங்குபவர்கள் சைவ சமயத்தவர்.

உலக வரலாற்றிலே தமிழர்களே முதன்முதலாகப் பெரிய கோயில்களை அழகாகக் கட்டினார்கள் என்று ஐரோப்பிய நிபுணர்கள் உவகையோடு எழுதியுள்ளார்கள் தென்னாடுடைய சிவன் எந்நாட்டவருக்கும் இறைவன். சிவன் செம்மேனியுள்ளவர்: ஆதியும் அந்தமும் இல்லாதவர். சோதியாய்த்தோன்றும் திருவேயானவர்.

அமெரிக்கக் கண்டம் எங்கும் முன்னர் பெரிய சிவன் கோயில்களும், சிவலிங்கங்களும் இருந்த அழிவுச்சின்னங்களை அகழ்வாராய்ச்சியாளர் கண்டு, அவை 7000 ஆண்டுகளுக்கு முன்கட்டப்பெற்றனவாகலாம் எனக் கூறுவர். ஐரோப்பாக்கண்டத்தில் வடக்கே நோர்வே நாட்டிலும் தெற்கே கிரீட் தீவிலும் சிவவழிபாட்டுச் சின்னங்கள் காணப்பெற்றுள்ளன. மத்திய கிழக்கில் சிரியா முதலிய பிரதேசங்களில் இடபவாகனராய இறைவன் திருக்கரத்தில் மழுவாயுதம் தாங்கியுள்ள அமைப்புக் கண்டுபிடிக்கப் பெற்றுள்ளது. பாபிலோனியாவின் பல பகுதிகளிலும் சிவலிங்கங்கள் கண்டுபிடிக்கப்பெற்றுள்ளன. இப்பால் தூர கிழக்கு நாடுகள் தீவுகள் எங்கும் சிவலிங்கங்களும், சிவ வழிபாட்டுச் சின்னங்களும் கண்டுபிடிக்கப்பெற்றுள்ளன.

சைவ சமயம் உலகத்திலேயே பழமை வாய்ந்தது என்பதோடு தலைசிறந்ததுமாகும். சைவத்திலே உலக வழிபாட்டு முறைகள் யாவும் அடங்கியுள்ளன. அதிலே உருவ வழிபாடு, அருவ வழிபாடு, யோகநெறி, ஞான நெறி என்பன யாவும் உள்ளன. கடவுள் வழிபாட்டு முறைகள் யாவும் இந்த நான்கனுள் எல்லா மதங்களின் வழிபாட்டு முறைகளும் அடங்கும்.

(11ஆம் பக்கத் தொடர்ச்சி)

## சேரவாரும்......

உலகத்தவரே! காகம் தனக்கு உணவு கிடைத்தபோது தன் இனக் காகங்களோடு கலந்து உண்ணக் கண்டீர்கள். சிவானுபவம் என்னும் பேரானந்தப் பெருக்கானது பொங்கி வழிந்து நிறைவாகி ஏகரூபமாகக் கிடக்கிறது. அந்தோ! நாம் இனியாவது சுகமடைதற்பொருட்டு, எடுத்த இந்தச் சரீரம் விழுமுன்பே பருகுவதற்கு ஒன்று சேர வாருங்கள்.

# காசியில் குமரகுருபர சுவாமிகள் கோயில்

காசியிலிருந்து கங்கையிலிறங்கி நீராடுவதற்குப் பல விடங்களில் படிக்கட்டுகள் அமைத்திருக்கிருர்கள். அவை எல்லாமாக அறுபத்துநான்கு இடங்களில் அமைந்துள்ளன. அவை ஆங்காங்கே எழுந்தருளியுள்ள இறைவன் திரு நாமத்தை முன்னிட்டும், இறைவனை வணங்கி அருள் பெற்ற பெரியவர்கள், பெயரை முன்னிட்டும் வழங்குவன வாகும்.

கங்கையிலிருந்து படிக்கட்டு வழியே ஏறிச் செல்லும் போது எங்கெங்கும் சிவலிங்கங்களும் நந்திகளும் உண்டு. அவற்றைத் தாண்டி மேலேபோனல் கோயிலும் ஊர் மனையும் உள்ளன.

படிக்கட்டுகளைக் கொண்ட ஊர்களுக்குப் பெயர்கள் காட் (Ghat) எனவே வழங்கும். விசுவநாதர் காட், கேதார நாதர் காட், ஜானகி காட், நாரதர் காட் என் பனவும் இன்னும் பலவும் அங்கே உள்ளன.

கேதார காட் என்னும் இடத்தில் கேதாரநாதர் கெளரியம்பாளுடன் எழுந்தருளியுள்ளார். அங்கேதான் ஆதிகுமரகுருபர சுவாமிகள் திருமடம் அமைத்துள்ளார் கள். டெல்கி நகரையாண்ட பாதுஷா என்னும் பேர ரசன் நிலமும் பொன்னும் உபகரிக்க அவற்றைப் பயன் படுத்திக் குமரகுருபரசுவாமிகள் மடம் அமைத்தார்கள்

மடம் பெரியது. மடத்தின் ஒருபகுதியில் குமரகுருபர சுவாமிகளின் கோயில் உண்டு. அங்கே அவர் பூசித்த சிவலிங்கம் செப்புப்பேழையுள் உண்டு. அன்றி அவரின் திருவுருவம் சிங்கத்தில் ஏறியவண்ணம் கருங்கல்லாற் செய்யப்பெற்றுப் பிரதிட்டை செய்யப்பெற்றுள்ளது.

மடத்துள் இருக்கின்ற இச்சிறிய கோயிலைப் பூசித்து வருபவர் ஒருவர் மெளனசுவாமி. அவர் எவருடனும் பேசுவதில்லையாம். அவர் பெயர் கந்தசாமி என்றனர். அவர் நல்ல உத்தியோகம் பார்த்தபின் தவக்கோலந் தாங்கிச் சடைவளரத் தொண்டு செய்கிருர். மடத்தில் தினமும் தொண்டர்கள் உண்டபின் எஞ்சியுள்ள உணவை அள்ளிக்கொண்டுபோய் வெளியே ஆற்றங்கரையில் படிக் கட்டுகளில் யாத்திரிகளிடம் கைநீட்டும் திருக்கூட்டத் தவருக்கு வயிறுநிறைய ஊட்டுகிருர்.

காசி மடத்தில் மில்க்வைற் தொழிலதிபருக்கு நடை பெற்ற சிறப்பைப் பார்த்து நின்றவர், தமது உடைக்குள் மறைத்து வைத்திருந்த ஏதோ ஒருநூலை அவருக்கு அன் பளிப்புச் செய்தார். விழா நிகழ்ச்சிகளை எழுதிக்கொண்டு இருந்த எம்மருகே வந்து அப்பியாசக் கொப்பியைப்பற்றிப் பென்சிலையும் பெற்று எழுதினுர்;

''கங்கைப் பக்கம் ஆறுமுகசுவாமி வள்ளி தேவயானை யுடன் இருககிருர். மாலையில் தெரிசனை காட்டுவேன் சந்திக்கவும். நாம் வெளியிட்ட காசிமகிமை நம்மிடம் இருக்கிறது. வெளியே காட்டாதீர்கள். எல்லாரும் கேட் பார்கள். பிரதிகள் செலவாகிவிட்டன''

அன்றுமாலை அவரிருப்பிடம் சென்றதும் அவர் எங்கோ மறைத்துவைத்திருந்த திறப்புக் கோவையை எடுத்து விரைவாக நடந்து சென்று இருட்டுமூலையில் சுப்பிரமணியர் ஆலயத்தைத் திறந்து அவரைத் தெரிசிக்க வைத்துக் காசி பற்றிய நூலையும் உபகரித்து வாழ்த்தினுர்கள்.

# கோலி பண்டிகை

காசியில் ஒருவாரம் ஆரவாரங்களிடையே தங்கி எல்லாப் படிக்கட்டுகளையும் ஏறி இறங்கிச் சிவலிங்கங்கள் இருந்தவிடமெல்லாம் வணங்கி, வேதமோதிய வண்ணம் இருந்தவர்களை நமஸ்காரஞ் செய்து, கேதாரகட்டத்திலே குமரகுருபர சுவாமிகள் கட்டிய காசிமடத்திலே, நூற் றுக்கு மேற்பட்டவர்களிடையே திருப்பனந்தாள் மடாதி பதி ஸ்ரீலஸ்ரீ காசிவாசி முத்துக்குமார சுவாமித்தம்பிரான் சுவாமிகள் அருள் நோக்குப்படும்படி உண்டு உலாவி உறங்கிய நாம் அன்று மாசிமகத்திற்கு அடுத்தநாள் கூட்டைவிட்டு வெளியேருமல் உள்ளேயே அடைபட்டுக் கிடந்தோம்.

வெளியே குழந்தைகளும் இளைஞர்களும் கூட்டங் கூட்டமாகப் பேராரவாரமும் கூக்குரலும் கும்மாளமும் குதூகலமும், கோடிக்குக் கோடி, மூலைக்கு மூலை, சந்துக்குச் சந்து இளைஞர் கூட்டம் குங்குமக் குளம்பும், நீரும் உடை யெங்கும் சிவிறிகொண்டும் கையாலும் அள்ளி அள்ளித் தெளித்து விளையாடினர். சிலர் கையில் தட்டங்கள் ஏந்தி உண்டியல் திரட்டினர். உண்டியலிடுவோர் சில சமயம் உபத்திரவமின்றித் தப்பி அப்பாற் சென்றுல் மற்ற வளை வில், கோடியில், சந்தில் மற்றெருரு கூட்டம் வழிமறிக் கும். குங்கும் தோய்க்கும்.

அன்று மாலை முக்கியமான முடக்குகள் மூலைகளில் பெரிய மரக்குற்றிகளை அடுக்கி நெருப்பிட்டுக் கொளுத்தி, எரியும் நெருப்பில் பழைய உடைகள், பண்டங்கள், பாண்டங்களை ஆகுதி செய்து சுட்டுப் பொசுக்குவர். கோலிப் பண்டிகையோடு குளிர்போய்விடும் என்பர்.

அடுத்த நாள் அதிகாலையில் நீராடிப் புத்தாடை அல்லது வெள்ளாடை அணிந்து குழந்தைகள் முதல் பெரியோர் வரை கையில் குங்குமம் ஏந்திச் சென்று, பெரியவர்களை வரிசையாக நமஸ்கரித்து ஆசீர்வாதம் பெறுவர். நமஸ்கரிப்பவரும் ஆசீர்வாதம் செய்பவரும் பரஸ்பரம் கட்டித் தழுவி அச்சா என்று உரக்கக்கத்தி இன்னும் ஏதோ தங்கள் மொழியில் சொல்லிக் குதூ கலிப்பர்.

குதூகல விழாவில் குங்குமத்துக்குப் பஞ்சம் இல்லை; மாடு, எருமை, ஒட்டகம், கழுதை, நாய் எல்லாப் பிராணிகளுக்கும் குங்குமம் பூசி எங்கள் மாட்டுப் பொங் கல் தோற்றுப்போகுமளவில் மிருகங்கள் எல்லாம் புனித மாயுலாவும். பாபுஜி, மாதாஜி நமஸ்தே நமஸ்தே என் னும் ஒலி வீதிவாய்க் கேட்கும்.

# மலைநாட்டில் ஒரு பெருவிழா

மலைநாட்டுக் குயில்வத்தைச் சிவாலய வருடாந்த உற்சவங்கள் 2-4-82 முதல் 6-4-82 வரை வெகு சிறப்பாக நடைபெற்றன. சகலவிதமான பூசைகள், கிரியைகள், உற்சவங்கள் யாவற்றையும் மலையக மக்கள் உற்சாகத் தோடு பக்திபூர்வமாக முன்னின்று நடாத்திவைத்தார்கள்.

★ *May we never hate each other* ★

## அனந்தராம சாஸ்திரிகள்

சென்னைச் சைவ சித்தாந்த சமாஜத்தார் நூற்றுக் கணக்கானோர், இலங்கையிலிருந்து சென்ற எங்கள் ஐவரையும் உடன் கொண்டு, திருப்பனந்தாள் மடாதிபதி ஸ்ரீலஸ்ரீ காசிவாசி முத்துக்குமாரசுவாமித் தம்பிரான் சுவாமிகள் தலைமையிற் காசிக்குச் சென்றபோது, அறிஞர்கள், ஆராய்ச்சியாளர் கூட்டம் கூட்டமாகப் புகை வண்டிப் பெட்டிகளில் நல்ல விடயங்களையே பேசிக் கொண்டனர்.

பேராசிரியர் மு. அருணாசலம் அவர்கள் பலதுறைகளில் நுணுக்கமான ஆராய்ச்சியாளர். சிறந்த எழுத்தாளர், பேச்சாளர், வாயாடி, கண்டனப்புலி. வாய்மொழி இலக்கியம் முதல் சைவசித்தாந்தம், ஆகமம் எது வேண்டுமானாலும் மணிக்கணக்காகப் பேசுபவர். நூற்றுண்டு இலக்கியம் என்னும் வரிசையில் தொகுதி தொகுதியாக ஆயிரக்கணக்கான பக்கங்களைக்கொண்ட ஆராய்ச்சி நூல்களை ஆணித்தரமாக எழுதி காந்தி வித்தியாலயம் திருச்சிற்றம்பலம் என முத்திரை பொறிப்பவர். முன்னரும், இன்றும் சித்தாந்தம் என்னும் திங்கள் இதழுக்கு ஆசிரியர். ஆங்கிலத்திலும் அருமையாக எழுதுபவர்.

நண்பர் மு. அருணாசலம் அவர்களை முன்னர் திருவிடைமருதூரில் கண்டு பழகிய பின் மீண்டும் காசிப் பயணத்திற்கண்டு கலந்து பேசியபோது தாம் 1947-ஆம் ஆண்டில் காசிப் பல்கலைக் கழகத்தில் பேராசிரியராயிருந்த போது பழகிய அனந்தராம சாஸ்திரிகளைப்பற்றி இரசனையோடு குறிப்பிட்டார்.

காசிப் பல்கலைக்கழகப் பேராசிரியர்கள் தமக்கு வேண்டிய மேலதிக மேலறிவைப் பெறுவதற்கு உதவியாக உபகாரியாக கலாநிதியாக களஞ்சியமாக இருந்தவர் அனந்தராம சாஸ்திரிகள். திலகர் எழுதிய குறிப்பைச் சிரமேற்கொண்டு வடதுருவம் பார்ப்பதற்குச் சென்றவர். ரஷ்ய கப்பலொன்றிற் சென்றபோது கடுங்குளிர். எங்கும் பனியுறைந்து பிரயாணம் தடைப்பட்ட போதும் அதிகாலையில் நீராடி அநுட்டானஞ் செய்தவர். அதனைக் கண்டு ரஷ்ய கப்பலதிகாரி விறைத்துப் போனதும் உண்டு.

அனந்தராம சாஸ்திரிகள் பிரான்ஸ் நாட்டுக்குச் சென்றபோது, அங்கே பேராசிரியர் யூலியன் வின்சோன் சாஸ்திரிகள் சமஸ்கிருத சுலோகங்கள் சொல்லக்கேட்டு மகிழ்ந்து, அவற்றை ஒலிப்பதிவு செய்துகொண்ட பின், சன்மானமாகப் பெருந்தொகை பணம் உதவியபோது சாஸ்திரிகள் அதனை வாங்க மறுத்து, ''வித்தையை இங்ஙனம் விற்பதற்கு நான் விரும்பவில்லை'' என்றாராம். பின்னர் அப்பணத்தை முதலீடு செய்து தகுதியானோருக்குப் புலமைப் பரிசில் கொடுங்கள் என்று கூறினாராம்.

## உலோகோபகாரியின் பவளவிழா

உலகத்துக்கு உபகாரியாய்ப் பாலப்பருவம் முதல் இன்று வரையும் உழைத்துவரும் காஞ்சிப் பெரியார் இன்று தம் மனத்தால் உலக நன்மையைக் கருதியவாறு இடையிடை உபதேசங்களும் செய்கின்றார்கள். உலகெலாம் போற்றும் ஒப்பற்ற பெரியார் சகல கலைகளையும் அறிந்தவர். சாஸ்திரங்கள் உணர்ந்தவர். அன்பு ததும்பப் பேசுபவர். மனத்தைக் கொள்ளை கொள்ளும் கண்ணொளி உடையவர். புன்முறுவல் பூத்த முகத்தவர். எவரையும் விரும்புபவர். பொருட்பற்றில்லாதவர். தமக்குக் காணிக்கையாகக் கிடைப்பனவற்றைப் பிரதிஷ்டை, கும்பாபிஷேகம், ஆலயப் புனருத்தாரணம், புத்தகப் பதிப்பு முதலியவற்றுக்கு வாரி வழங்குபவர். வேதம் வல்லவர்கள், இதிகாசம் வல்லவர்கள், புராணம் வல்லவர்கள் நன்கு வாழ வேண்டுமென்று உளங்கொண்டு பண்டிதரானோருக்குப் பல வகையான பரிசுகள் பட்டுகள் பாராட்டுக்கள் வழங்குபவர். வைரம் இழைத்த தோடா, வைரம் இழைத்த மோதிரம், தங்க மோதிரம் யாவும் வகை வகையாக வழங்குபவர். புலவர்களுக்குப் பொன்னாடை போர்த்துப் பாராட்டுபவர். சாந்தியே உருவானவர். தியானமே முயற்சியாயுள்ளவர். பல்லாயிரக்கணக்கான பக்தர்கள் அவரை ஜகத்குரு என்று பணிகின்றார்கள்.

பதின்மூன்றும் வயதில் மடாதிபதியாகப் பீடாரோகணஞ் செய்த பெரியாரின் ஞானச் செங்கோலாட்சி தொடங்கி எழுபத்தைந்து ஆண்டுகள் நிறைந்துவிட்டன. தமது பொறுப்புக்களைப் புதுப் பெரியவரிடம் உரியவேளையில் உபகரித்துவிட்டு, முழுநேரமும் சிவத்தியானத்தமரும் முதுகண்ணராய பெரியவர் முக்கண்ணராய சிவனெனவே எழுந்தருளியுள்ளார். அவரின் அருளுபதேசங்கள் ஆயிரமாயிரமான பக்கங்களில் அச்சிடப்பெற்று உலகமெங்கும் வியாபகமுற்றுள்ளன. அவர் காலத்தில் நாம் வாழ்ந்தோம் என்னும் பெரும்பேறு கோடிக்கணக்கான இந்து மதத்தவருக்குப் பெரிய வரப்பிரசாதமாகும்.

## ஸ்ரீ ஜகத்குரு அவர்களின் பீடாரோகண பொன்விழா நினைவு

ஜகத்குரு சங்கராசாரிய சுவாமிகள் என்னும் காஞ்சிப் பெரியார் மடாதிபதியாகப் பீடாரோகணஞ் செய்த ஆண்டு 1907 ஆகும். எனவே அவரின் பீடாரோகண பொன்விழா 1957-ஆம் ஆண்டு வெகு விமரிசையாகப் பதினைந்து நாள்கள் கொண்டாடப் பெற்றதோடு விழா நினைவாக சமஸ்கிருத பாடசாலையொன்றும் ஆரம்பிக்கப் பெற்றது. ஜகத்குரு அவர்களின் நீண்ட காலச் சேவைக்காகப் பல்லாயிரவர் தங்கள் வீடுகளில் பிரார்த்தனை செய்து மிருத்தியுஞ்ஜய மந்திரபாராயணமுஞ் செய்தார்கள்.

தமது பதின்மூன்றும் வயதில் பீடாதிபதியாகிய பெரியவர் தமது பள்ளிப் படிப்பைப் பற்றிப் பலமுறை கூறியுள்ளார். ஆரம்ப வகுப்புக்களில் எல்லாப் பாடங்களிலும் சைபர் வாங்கிய மொக்குத்தனம் படிப்படியாகக் குறைந்து எல்லாப் பாடங்களிலும் பரிசுபெற்ற நல்ல காலமும் வந்ததென்பர். கிறிஸ்தவ பாடசாலையில் படித்து பைபிள் பாடத்திலும் முதற் பரிசு பெற்றுள்ளார் என்பர். தந்தையார் இவருக்குப் படிப்பு வராதது கண்டு சங்கீதத் துறையில் தோய்த்ததும் உண்டு.

பீடாதிபதியானதும் தகுதிக்கேற்ற கல்வி, ஆசார நியமம் ஆதியன பயில்வதற்கு மகேந்திர மங்கலம் என்னும் வளம்மிக்க இடத்துக்குச் சென்றார். அங்கே இவருக்

(தொடர்ச்சி 18ஆம் பக்கம்)

# நிகண்டிற் கண்ட சிவன் திருநாமங்கள்

1. **சிவன்:**
சுகத்தோடு கூடினவன், விகாரமில்லாதவன், நல்லோர் மனத்திற் கிடப்பவன், நன்மையுடையவன், நன்மை கொடுப்பவன், ஒளியுடையவன், முத்தி கொடுப்பவன்.
2. **சங்கரன்:**
சுகஞ்செய்பவன்.
3. **இறையோன்:**
எங்குந்தங்குவோன்.
4. **சம்பு:**
சுகஞ்செய்பவன்.
5. **சதாசிவன்.**
எப்பொழுதும் நன்மைசெய்பவன்.
6. **பேயொடாடி:**
பேயோடு ஆடுபவன்.
7. **அரவணிந்தமூர்த்தி:**
பாம்பணிந்த வடிவமுடையவன்.
8. **புராந்தகன்:**
முப்புரங்களை அழித்தவன்.
9. **பூதநாதன்:**
பூதங்களுக்குத் தலைவன். உயிர்களுக்குத் தலைவன்.
10. **கங்கை வேணியன்.**
கங்கையைத் தரித்த சடையினன்.
11. **கங்காளன்;**
முழுவெலும்பு தரித்தவன்.
12. **கடுக்கையங்கண்ணி சூடி:**
கொன்றைமாலையணிந்தவன்.
13. **மங்கையோர் பாகன்:**
தேவியைப் பாகத்திலுடையவன்.
14. **முன்னோன்:**
எல்லார்க்கும் முன்னானவன்.
15. **மகேச்சுரன்:**
மேலான ஐசுவரியமுள்ளவன், ஈசுவரர்களுள் மிக்கோன்.
16. **வாமதேவன்:**
மேலான தேவன், இடப்பாகத்தில் தேவியையுடையவன்.
17. **நீலகண்டன்:**
கரிய கழுத்தினையுடையவன்.
18. **மாதேவன்;**
மேலான தேவன். பெரிய ஒளிமயமானவன்.
19. **நிருமலன்:**
மலமில்லாதவன்.
20. **குன்றவில்லி:**
மலையாகிய வில்லையுடையவன்.
21. **சூலபாணி:**
சூலந்தரித்த கையினன்.
22. **ஈசானன்:**
மகா சாமர்த்தியமுள்ளவன்.
23. **பசுபதி:**
ஆன்மாக்களைக் காப்பவன்.
24. **சுடலையாடி:**
சுடலையில் ஆடுதலுடையவன்.
25. **காலகாலன்:**
யமனுக்கும் முடிவுசெய்தவன்.
26. **கபாலி;**
தலையோட்டினைத் தரித்தவன்.
27. **உருத்திரன்:**
பகைவரை அழுவிப்போன்.
துக்கத்தை நீக்குபவன், தீங்கினை நீக்குவோன், பந்தத்தினின்று நீக்குவிப்பவன், பிரபஞ்சத்தைத் தன்வயமுடையவன், எல்லாச் சொற்களாலும் ஏத்தப்படுபவன், பிரமஞானத்தைப் போதிப்பவன், மௌன சமாதியைப் போதிப்பவன், உயிர்களின் அறியாமையைக் கரைப்பவன், ஆன்மாக்களால் அடையப்படுபவன், தமோகுணத்தை வசப்படுத்தியவன், உயிர்களின் அஞ்ஞானத்திற்கு இரங்குபவன், எவ்வுலகுக்கும் அச்சங்கொடுப்பவன்.
28. **கைலையாளி:**
கைலாசமலையில் வசிப்பவன்.
29. **ஆலமர் கடவுள்:**
கல்லாலின்புடை இருந்த கடவுள்.
30. **நித்தன்:**
பிறப்பற்றவன்.
31. **ஐம்முகன்:**
ஈசானம் முதலாய ஐந்துமுகத்தினன்.
32. **பரசுபாணி:**
மழுவாயுதந்தரித்த கையினன்.
33. **அந்திவண்ணன்:**
செந்நிறமுடையவன்.
34. **முக்கண்ணன்:**
மூன்று கண்களுடையவன்.
35. **அழலாடி:**
அழலிலாடுதலுடையவன்.
36. **பாண்டரங்கன்:**
பாண்டரங்கக் கூத்தன்.
37. **சந்திரசேகரன்:**
சந்திரனைச் சிரபூஷணமாயுள்ளவன்.
38. **ஆனந்தன்:**
பெருமகிழ்ச்சியுடையவன்.
39. **அனந்தன்:**
அளவிலடங்காதவன். அழிவில்லாதவன்,

(தொடர்ச்சி 17ஆம் பக்கம்)

★ *May we live in health and strength* ★

## சிவானந்த தபோவனம் ரிஷிகேஷ் விஜயம்

காசிக்குச் சென்ற மில்க்வைற் தொழிலதிபர் தமது பாரியாரும் நண்பர்களும் சூழ மேலும் வடக்கே சென்று ரிஷிகேசத்தில் சுவாமி சிவானந்தரின் சமாதியை வணங்கிச் சத்சங்கத்தமர்ந்து துறவிகளையும் வணங்கி ஆசீர்வதிக்கப் பெற்றுர். தம்மை உருவாக்கியவை சுவாமி சிவானந்த ரின் உபதேசங்கள் என்று அடிக்கடி கூறிக்கொள்ளும் தொழிலதிபர், சிவானந்தரின் நூல்களிலிருந்தும் உப தேசங்களிலிருந்தும் அரிய கருத்துக்களை ஆயிரமாயிரமாக அச்சிட்டு விநியோகித்து வருவதைத் தபோவனத்தினர் அறிந்து, தொழிலதிபருக்கு மகத்தான வரவேற்பளித் தனர். ஒருமாத காலமாவது உண்டு உறங்கித் தங்கிப் போகுமாறு பெரியவர்கள் செய்த முன் ஏற்பாட்டைத் தொழிலதிபர் ஏற்றுக்கொள்ளத் தயங்கினுர்; திருக்கத வங்கள் தாளிடப்பெற்றவை யாவும் திறக்கக் கட்டளை பிறந்தது. தொழிலதிபருக்கு நூல்கள், படங்கள், மாலை கள், பிரசுரங்கள் யாவும் அள்ளி அள்ளி வழங்கினர்; தபோவனத்துச் சுவாமிகள் தொழிலதிபர் உடலில் மின் சாரம் பாய்ச்சினுற்போலத் தங்கள் ஆசீர்வாதத்தைப் பாலித்தருளினுர்கள்.

---

## காசியைப்பற்றிய பழமொழிகள்

சென்னையிலிருந்து காசிக்குப்போகும் கங்காகாவேரி கடுகதி வண்டி இரண்டு பகலும் ஓர் இரவும் ஓடுகின்றது; உண்பதும் உறங்குவதும் வண்டியிலேதான். நல்ல வசதி யாகப் போகும்போது கூடப்பிரயாணஞ் செய்தவர்கள் காசியைப்பற்றிப் பேசினுர்கள். சிலர் பழமொழிகள் கூறி னுர்கள்.

காசியில் காகம் பறப்பதில்லை.
காசியில் பல்லி சொல்வதில்லை.
காசியில் பூ மணப்பதில்லை.
காசியில் பிணம் நாறுவதில்லை.
பசுமாடு எவரையும் முட்டுவதில்லை,

---

(16ஆம் பக்கத் தொடர்ச்சி)

### நிகண்டிற் கண்ட........

40. ஆதி:
உற்பத்திக்குக் காரணன்.

41. தந்தியுரியோன்:
யானைத்தோல் போர்த்தவன்.

42. நம்பன்:
விரும்பப்படுபவன்.

43. தற்பரன்:
ஆன்மாவுக்கு மேலானவன்.

44. நீறணிந்தோன்:
விபூதியணிபவன்.

45. நந்தி:
மகிழ்ச்சியுடையவன்.

46. ஈச்சுரன்:
மகாமகிமையுடையவன்.

47. ஏறூர்ந்தோன்:
இடபவாகனத்தினன்.

48. நக்கன்:
சங்காரகருத்தன், நிருவாணி.

49. ஞானமூர்த்தி:
அறிவுருவாயுள்ளவன்.

50. வரன்:
மேலானவன்.

51. மறைமுதலி:
வேதத்திற்கு முதல்வன்.

52. ஈசன்:
எல்லா மேன்மையுமுள்ளவன்.

53. மானிடமேந்தி:
மானை இடப்பக்கத்திலேந்தியவன்.

54. சோதி:
ஒளிவடிவாயுள்ளவன்.

55. பிரமன்மாற்கரியோன்:
பிரம விஷ்ணுக்களாலறியப்படாதவன்.

56. தாணு:
அசைவில்லாதவன், ஊழியிலும் நிலைபெறுபவன்.

57. பிஞ்ஞகன்:
தலைக்கோலமுள்ளவன், சங்காரகர்த்தன்.

58. பினைகபாணி:
பினைகவில்லையேந்தியவன்.

59. பரமன்:
மகிமையுடையவன்.

60. எண்டோளன்;
எட்டுப்புயமுடையவன்.

61. பர்க்கன்:
ஒளியுடையவன்.

62. பவன்:
எல்லாவற்றையும் பிறப்பிப்பவன்.

63. யோகி:
யோகமுடையவன்.

64. பகவான்:
மகிமை, வீரியம், புகழ், திரு, ஞானம், வைராக்கியம் என்னும் ஆறும் உள்ளவன்.

65. ஏகன்:
முக்கியமுடையவன்.

66. அரன்:
முடிவில் எல்லாவற்றையும் அழிப்பவன், மலத்தினை அழிப்பவன், உயிர்களுக்கு உயர்நிலையளிப்பவன்.

67. உமாபதி:
பார்பதிக்கு நாயகன்.

---

# அருள் விருந்து

ஆதாரம்: தர்மசங்கரம்

1. முகமலர்ச்சி மேலான அணி.
2. அதிதிருப்தி பெரிய தரித்திரம்.
3. தேவைகளைப் பெருக்குதல் கேடு.
4. அறிவு ஓங்கினல் பேச்சுக் குறையும்.
5. இன்பம் மனநிலையில் உண்டாகிறது.
6. செய்யும் தொழில் எல்லாம் மேலானவை.
7. நன்மைக்குத் தலைவணங்குதல்வேண்டும்.
8. ஒழுக்கத்தால் சக்தி தூய்மையாகும்.
9. உலக விடயத்தால் மனம் சிதறுகிறது.
10. சிற்றியல்புகளை வெல்லுதல் பெரிய வெற்றி.
11. சோதனைகளைச் சமாளித்தலே பண்பாடு.
12. செலவில்லாத கொடை முகமலர்ச்சி.
13. தற்பெருமை கொண்டவன் தாழ்ந்தவன்.
14. அன்பும் நலனும் கடவுட் தன்மைகள்.
15. இனியதில் இனியது இன்சொல்.
16. அமைதி அருள்நாட்டத்துக்கு வழி.
17. கடவுள் எல்லோருக்கும் சொந்தம்.
18. அன்பு தோல்வியை அறியமாட்டாது.
19. ஊக்கம்குன்றிய செயலில் நன்மையில்லை.
20. மௌனத்தைவிட மேலான நண்பன் இல்லை.
21. சுயநலம் நீங்கினல் தெய்விகம் தலைகாட்டும்.
22. பணிவிடை செய்பவன் உள்ளம் ஆலயமாகும்.
23. பக்தனின் பாங்கு குழந்தையின் எளிமை போன்றது.
24. அடக்கம் உள்ள சமூகம் முன்னேறுகிறது.
25. பிறருக்கு நன்மைசெய்தலே சமயநெறி.

## சிவனை வழிபடுவோம்

கண்ணுதல் ஆலயம் நோக்கும் கண்களே கண்கள்
கறைக்கண்டன் கோயில்புகும் கால்களே கால்கள்
பெண்ணொரு பாகனைப் பணியும் தலைகளே தலைகள்
பிஞ்ஞகனைப் பூசிக்கும் கைகளே கைகள்
பண்ணவன்தன் சீர்பாடும்நன்னாவே நல்நா
பரன்சரிதை யேகேட்கும் செவிகளே செவிகள்
அண்ணல்பொலங் கழல்நினைக்கும் நெஞ்சமேநெஞ்சம்
அவனடிக்கீழ் அடிமைபுகும் அடிமையே அடிமை.

— வரதுங்கராம பாண்டியன்

## Worship of God

God the upholder, of the Universe from the very eternity, the iluminator of all activities, is the only object of adoration. He is all truth and justice, and bestows His blessings like rainy clouds, nourishes like the cow, and we should therefore always pray, adone and act upon His laws, which are perfect for all times.

— The Path of Emancipation Ram Lal

(15ஆம் பக்கத் தொடர்ச்சி)

### ஜகத்குரு........

கென அமைக்கப்பெற்ற பர்ணசாலையில் வாழ்ந்து சாஸ்திரங்கள் பலவற்றைச் சிரத்தையோடு தக்கவர்களிடம் பயின்று வந்தார். வேதாந்தம், வியாகரணம், தர்க்கம், மீமாம்சை முதலிய பதினன்கு துறைகளையும் சாங்கோபாங்கமாகக் கற்றுத்தெளிந்தார். இவற்றையெல்லாம் மூவாண்டு பயின்று பெரியவரானர். தமிழில் சைவம் வைணவம் ஆகிய சமயநூல்களை நன்ருக அறிந்ததோடு ஆங்கிலம், பிறெஞ்ச் மொழிகளையும் அறிந்துகொண்டார். இந்திய மாநில மொழிகளான மலையாளம், தெலுங்கு, மஹாராஷ்டிரம் முதலியவற்றையும் பொது மொழியாய இந்தியையும் கற்றுக்கொண்டார். வெறும் மொழியறிவு மாத்திரம் பெற்றவர் என்னமல், அவர் வரலாறு புவியியல் விஞ்ஞானம், புதைபொருளாராய்ச்சி, கல்வெட்டாராய்ச்சி முதலிய துறைகளையும் நன்கறிந்தார். இவற்றுக்கெல்லாம் மேலாகப் பிராணுயாமம் பயின்று நீண்ட நேரம் மூச்சை அடக்கி நிறுத்தவும் அப்பியாசஞ்செய்து பெருவெற்றி கண்டுள்ளார். பிரமசாரியம், வைராக்கியம் ஆகியவற்றல் இவர் முகத்திலும் உடம்பிலும் ஒளிபிறந்தது. கனிவு, குழைவு, உள்ளத்தூய்மை, காந்தி என்பன அவரின் தேகசுத்தியையும் மனச்சுத்தியையும் காட்டின. இருபதாம் ஆண்டுப் பராயத்தில் அவர் பெரியவராய் இருந்தார்.

## பத்ராயு கண்ட பரமசிவன்

சத்யோஜாதம் வாமதேவம், அகோரம், தத்புருஷம், ஈசானம் என்னும ஐந்து திருமுகமுடையவரும், சந்திரன், சூரியன் ஆகிய கண்களையுடையவரும், பினகம் என்னும் வில்லை ஏந்தியவரும், சந்திரனைச் சடையில் தரித்தவரும் தொங்குகின்ற சடைகளையுடையவரும், கோடிசூர்யப் பிரகாசமுள்ளவரும், யானைத்தோலைப் போர்த்தவரும், கங்கையைத்தரித்தவரும், சிறந்த பாம்புகளை மாலையாகவும் கங்கணமாகவும் உடையவரும், திருக்கரத்தில் திரிசூலத்தையும், கோடரி, மான் ஏந்தியவரும் அபயம் வரதம் ஆகிய திருக்கரங்களோடு கூடியவருமாவர்.

## கேட்டு மனங்கொள்க

வேதம் உபநிடதம் ஆகியவற்றை எல்லோரும் படித்தறிய முடியாது. ஆனல் அவற்றைக் கேட்பதற்கு வசதியாகத் திருக்கோயில்கள் உள்ளன. வேதமறிந்த நல்ல குருக்கள் உலக நன்மையின்பொருட்டு ஆறுதலாக வேதமோதுவர். துவாதசி நாளில் உபநிடதம் ஓதக்கேட்டல் நன்று என்றும், பிரதோஷ காலத்தில் ஸ்ரீருத்ரம் ஓதக் கேட்டல் நன்று என்றும் பெரியவர்கள் எழுதியுள்ளார்கள். உபநிடத பாராயணம் பந்தி போசனத்தின்போது நன்மை பயக்கும், புண்ணியத்தைத்தரும். உணவு கொள்ளுவதன் முன், உணவூட்டிய இறையருளுக்கு ஒருநிமிட நன்றிப் பிரார்த்தனை செய்தல் நம் கடமை.

★ *God is imperishable and immortal* ★

## வேதம் வகுத்தவர் - தொகுத்தவர்

நம்பியாண்டார் நம்பிகள் திருமுறைகளைத் தொகுத்தாற்போல ஆயிரக்கணக்கான ஆண்டுகளுக்கு முன் பராசர முனிவரின் மைந்தர் வாதராயணர் வேதங்களைத் தொகுத்தார். அதனால் அவருக்கு வியாசர் என்னும் பெயர் உண்டானது. சிலர் அவரை வேதவியாசர் எனவும் அடைகொடுத்து வழங்குவர்.

காசியில் விசுவநாதர் அந்தத் திருக்கோயிலை விட்டு விலகாதவர். எனவேதான் அத்திருத்தலத்திற்கு அவிமுக்தம் என்று பெயர். அங்கேயுள்ள மண்டபத்திலமர்ந்து வியாசர் வேதங்களைத் தொகுத்தார். அவரே பிரமசூத்திரம் என்னும் வேதாந்த சூத்திரத்தையும், இதிகாசங்களில் ஒன்றுன மகாபாரதத்தையும் செய்தார். அது அவர் பெயரால் வியாசபாரதம் என வழங்குவது. அவர் பதினெட்டுப் புராணங்களைச் செய்து வேதவாக்கியப் பொருளை வலியுறுத்தினர். அவரின் தவப்புதல்வனே சுகப்பிரமம் என்னும் பெரிய முனிவர்.

திருஞானசம்பந்தமூர்த்தி நாயனர் உமாதேவியாரிடம் ஞானப்பால் உண்டு பெறற்கரிய சிவஞானம் பெற்ருர். வியாசர் காசியில் அன்னபூரணியிடம் ஞானப்பிச்சை கேட்டார். எங்கும் எல்லாவற்றிலும் நிறைந்தவளே! சங்கரருக்கு விருப்பமானவளே! அன்னபூரணி! ஞானவைராக்கியம் உண்டாகும்பொருட்டு அடியேனுக்கு பிச்சைகொடு அம்மா என்ருர். பிராட்டி ஞானப்பிச்சை கொடுத்தாள். ''அன்னபூர்ணே சதா பூர்ணே சங்கர ப்ராண வல்லபே! ஞான வைராக்கிய ஸித்யர்த்தம் பிக்ஷம் மே தேஹி பார்வதி''.

அன்னம்பாலிக்கும் என்னும் திருமுறை ஓதி உணவுண்பவர்போல் பலர் அன்னபூர்ணே என்னும் சுலோகம் பாடி உண்பதும் வழக்கமாகும்.

## சைவசமய நெறி

திருக்கைலாய பரம்பரைத் தருமபுரவாதீனத்திலே தம்பிரான் சுவாமிகள் என்னும் பதவியில் அமர்ந்த பெரியவர்கள் பாடங்கேட்டதற்கு ஒரு பாரம்பரியமும் வரன்முறையும் உண்டு. அது சைவசமய நெறி என்னும் நூலில் போதிய தாடனமும் பயிற்சியும் இல்லாதவர்களுக்கு மேலிடத்தவர் பாடஞ்சொல்லிக் கொடுப்பதில்லை என்னும் வழக்கமாம்.

மதிப்புவாய்ந்த இந்நூலைச் செய்தருளிய மகான் மறைஞானசம்பந்தர் என்பவராவர். அவர் உமாபதி சிவாசாரியரின் குருவாயிருந்த மறைஞானசம்பந்த சிவாசாரியாரின் வேருனவர்.

சைவசமய நெறிக்கு மேலிடத்தவர் மெச்சும் வகையில் உரையெழுதிப் பதிப்பித்தவர் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் அவர்களாவர். அவர்களின் பதிப்பு 1955ஆம் ஆண்டு வரையில் எட்டுமுறை வெளிவந்துள்ளது. இன்று அது கிடைத்தற்கரியதாய்விட்டது.

## பரதநாட்டியம்

முன்னெரு காலத்தில் இயல், இசை, நாடகம் என்னும் முத்துறை பெருகி முத்தமிழ் எனப் பெயர்பெற்ற தமிழில் எத்தனேயோ இயற்றமிழ் நூல்களும், இசைத்தமிழ் நூல்களும், நாடகத்தமிழ் நூல்களும் இருந்தன. ஒருகாலத்தில் இசைநாடகங்கள் காமம் பயப்பன எனக் கருதிய புறச்சமயத்தவர் சூழ்ச்சியால் அந்நூல்கள் மறைந்தொழிந்தன. அற்புதமாக அவயவங்களை அசைத்து மெய்ப்பாடுகளையும் சுவைகளையும் காண்பிக்கும் அபிநயக் கலையும் ஆதரிப்பாரின்றி அழிந்தது. பல்லவர், சோழர், பாண்டியர், நாயக்கர் பக்திமீதூரப்பெற்று எழுப்பிய கருங்கற் கோயில்களில் ஆடற்கலை ததும்ப அற்புதச்சிலைகளை வடித்துப்போனமை பிற்காலச் சந்ததியாருக்குப் பெரிய வரப்பிரசாதமாயிற்று. அறுபத்துநான்கு கலைகளுள் பரதக்கலையும் ஒன்று.

பரதம் என்பது பாவம், ராகம், தாளம் என்னும் மூவங்களின் குறிப்பாகவுள்ள ப, ர, த என்பனவமைய உண்டானதாகும். பாவம் என்பது எடுத்துக்கொண்ட பொருளுக்கு இயைந்த தன்மையைப் பாவகம் தோன்ற நிகழ்த்திக் காட்டுதலாகும். இதனை அபிநயம் எனவும் கூறுவர், இதில் வீரம், அச்சம், இழிப்பு, வியப்பு, இன்பம் அவலம், நகை, வெகுளி, நடுவுநிலை என்னும் ஒன்பது சுவைகளும் அவை சம்பந்தமாக உள்ளத்தில் நிகழும் குறிப்பும், அக்குறிப்பின் புறத்தே வெளிப்பட்டுத் தோன்றும் மெய்ம்மயிர் சிலிர்த்தல், கண்ணீர்வார்தல், நடுக்கமுறுதல், மேனிவெயர்த்தல், தேற்றம், களித்தல், விழித்தல், வெதும்பல், சாக்காடு, குரற்சிதைவு என்னும் மெய்ப்பாடுகள் அடங்கும். அபிநயம், வெகுண்டோன் முதலாக, ஐயமுற்ருேன், சோம்பினேன், களித்தோன், உவந்தோன், அழுக்காறுற்ருேன். இன்பமுற்ருேன், தெய்வமுற்ருேன், ஏஞ்ஞையுற்ருேன், உடன்பட்டோன், உறங்கினேன், துயிலுணர்ந்தோன், செத்தோன், மழையில் நனைந்தோன், பனித்தலைப்பட்டோன், வெயில்தலைப்பட்டோன், நாணமுற்ருேன், வருத்தமுற்ருேன், கண்ணேவுற்ருேன், தலைநோவுற்ருேன், அழற்றிறம்பட்டோன், சீதமுற்ருேன், வெப்பமுற்ருேன், நஞ்சுண்டோன், அபிநயம் என இருபத்துநான்காகும். இவை யாவும் உரையாசிரியர் அடியார்க்கு நல்லார் காட்டிய பாக்களால் அறியக் கிடக்கின்றன.

இராகம் என்பது இசை. அது சுரம் எனவும் வழங்கும். தமிழில் பண் என அதிகமாக வழங்கியதும் அதுவே யாகும். பண்ணின் திறமறிந்தவர் பாணர். பாணர் கையில் பலவித யாழ்கள் இருந்தன. இசை ஏழுவகைப் படும். அவை குரல், துத்தம், கைக்கிளை, உழை, இளி, விளர், தாரம் என்பனவாகும்.

தாளம் என்பது சச்சபுடம், சாசற்புடம், சட்பிதா, புத்திரிகம், சம்பத்துவேட்டம், உற்கடிதம் என்னும் பஞ்ச தாளமும்; துருவம், மட்டியம், ரூபகம், சம்பை, திரிபுடை, அடதாளம், ஏகதாளம் என்னும் சப்த தாளமும் பிறவுமாம்,

★ *By that Being the whole universe is filled* ★

# உள்ளம் பெரும் கோயில்

**★ விமானம் ★**

உள்ளமாகிய மனமண்டலம் சிவபெருமான் உறையும் கருவறை என்னும் கர்ப்பக்கிருகமாகும். ஊனுலாகிய உடம்பு ஆன்மாவின் ஆற்றலைக் குறைத்துவைத்துள்ள இடமாகும், வள்ளலாகிய தலைவனைச் சென்று வழிபடுவதற்கு வாய் கோபுரவாசலாகும். நன்றாக அறிந்து தெளிவு பெற்றவர்களுக்குச் சீவனே சிவலிங்கம், வஞ்சனைகளைச் செய்யும் ஞானேந்திரியங்கள் ஐந்தும் ஒளி பொருந்திய விளக்காகும்.

''உள்ளம் பெருங்கோயில் ஊனுடம் பாலயம்
வள்ளற் பிரானார்க்கு வாய்கோ புரவாசல்
தெள்ளத் தெளிந்தார்க்குச் சீவன் சிவலிங்கம்
கள்ளப் புலனைந்தும் காளா மணிவிளக்கே.

இவ்வாறு திருமூலநாயனார் கண்டு சொன்னவற்றைப் பின்வந்த திருமுறையாசிரியர்கள் பலரும் பின்மொழிந்துள்ளார்கள். அவர்களுள் திருநாவுக்கரசுநாயனார் மிக வற்புதமாக எடுத்து விளக்கியுள்ளார்.

அந்தணர் வேள்வியின் அவிசான உணவுக்குப் பதிலாக அன்பர்கள் அடியார்கள், தோத்திரப் பாடல்களைப் பாடி வழிபட்டால் அப்பாடல்கள் பாலவிசு ஆக அமையும் என்பர் திருமூலநாயனார்,

உடம்பு பிரமத்தின் இருப்பிடம் என்பதை ''பிரம்மபுரே தஹரம் புண்டரீகம்'' என்பர். உடம்பே திருக்கோயில், உள்ளுறையும் உயிரே இறைவன் என்பதை ''தெஹோ தேவாலய! ப்ரோக்தோ ஜீவோ தேவ: ஸநாதந'' என்பர். இங்கே ஸநாதந என்பது ஆதி தேவன் என்பதைக் குறிக்கும். ஆதிதேவனை ஆதிபகவன் என்பர் திருவள்ளுவர்.

இத்தகைய ஆப்தவாக்கியங்களையும் அவற்றின் அற்புதமான அருங்கருத்துக்களையும் அருங்கலை விநோதர்களான சிற்பிகள் நன்குணர்ந்திருந்தார்கள். சிற்பிகள் அழகுள்ள திருக்கோயில்களையும் அற்புதமான திருவுருவங்கள் என்னும் விக்கிரகங்களையும் சமைத்தார்கள்.

எங்கும் எதிலும் வியாபித்திருக்கும் இறைவனை, ஆலயத்தின் ஆதிமூலத்தானத்து அமைத்த திருவுருவில் எழுந்தருளச் செய்வதற்கான வழிமுறைகளை ஆகமங்கள் அருமையாகக் கூறுகின்றன. மூலஸ்தானம் என்னும் கர்ப்பக்கிருகத்தில் இறைவனின் ஸாந்நித்தியமும் சைதந்யமும் ஒளிவிட்டுப் பொலிவதைச் சில்பரத்தினம் முதலான சாஸ்திர நூல்கள் வலியுறுத்திக் கூறுகின்றன. ''திருக்கோயில் உள்ளுறையும் திருமேனி தன்னைச் சிவனெனவே நினைந்தவர்க்குச் சிவனுறைவனாங்கே'' என்பது சிவஞானசித்தியார். அதற்கு முதல்நூலாய சிவஞானபோதம் ''ஆலயந் தானும் அரனெனத் தொழுமே'' என்று வற்புறுத்துகிறது.

மக்கள் மகிழ்ச்சியும் மனநிறைவும் அடையுமிடம் ஆலயம். ஆலயத்தின் பல்வேறு பகுதிகளும் உடம்பின் பல்வேறு அங்கங்களும் ஒத்திருப்பதைப் பழைய நூல்களும் சரீரப்பிரம்ம ஐக்கிய தேவாலய இரகசியம் முதலான நூல்களும் கூறுகின்றன.

பழைய திருக்கோயில்களில் கர்ப்பக்கிருகம் சாதாரணமாக ஆறு பாவங்களாக அமைந்திருக்கும். நிலமட்டத்திலிருந்து மேல்நோக்கி எழும்பும் அமைப்பில் அதிஷ்டானம், பாதம், பிரஸ்தரம். கண்டம், சிகரம், ஸ்தூபி என்பன அமைந்திருக்கும். இவையனைத்திற்கும் அடித்தளமாக அமைவது உபபீடம் எனப்படும்.

சிலசமயம் இவை கீழிருந்து உபவீதம், அதிஷ்டானம், பாதம், பிரஸ்தரம், கண்டம், அல்பநாஸி, மகாநாஸி, சிகரம், ஸ்தூபி என்னும் அமைப்பிலும் அமைவதுண்டு.

இவ்வமைப்பை உடம்பினுறுப்புக்களோடு ஒப்பிட்டு ஆராயும்போது சரணம், முழங்கால், உதரம், கை, புஜம், கழுத்து, நேத்திரம், நாசி, முகம், சிகை என்பனவற்றை ஒக்கும் என்பர்.

இவ்வாறாக மண்டபத்தின் சுவர்களின் இருபக்கத் தூண்களுக்கும் நடுவில் தாழியும் பூங்கொடியும் அலங்காரமாக அமைவதைக் கும்பபஞ்சரம் என்பர். இன்னும் சிகரத்தின் முகப்பில் யாளி அல்லது முதலையின் முகம் செதுக்குவதை நாஸிகை என்பர். நாஸிகை பெரிதாயமையின் அது மகாநாஸிகை எனவழங்கும். அன்றேல் அல்பநாஸிகை எனப் பெயர்பெறும். இனி ஆலய அமைப்பையும் உடலமைப்பையும் ஒப்பிட்டுப் பார்க்கும்போது பின்வரும் ஒற்றுமைகள் புலனாகும்.

| | | | | |
|---|---|---|---|---|
| உபபீடம் | — | சரணம் | — | பாதம் |
| அதிஷ்டானம் | — | ஜானுமண்டலம் | — | முழங்கால் |
| பாதம் | — | கரம் | — | கை |
| பிரஸ்தம் | — | புஜம் | — | தோள் |
| கண்டம் | — | கிரீவம் | — | கழுத்து |
| சிகரம் | — | முகம் | — | சிரசு |
| ஸ்தூபி | — | சிகை | — | முடி |

இவ்வமைப்பில் மகாநாஸிகை, அல்பநாஸிகை என்பன கண் மூக்கு முதலியனவற்றைக் குறிப்பனவாகும். இன்னும் கும்பபஞ்சரம் என்பது வயிறு அல்லது கொப்பூழ் எனவும் பொருள்தரும். ஆலயத்தில் காணப்பெறும் மூலஸ்தானம் மாத்திரம் பிராஸாதம் எனப் பெயர்பெறும். ஆனால் மனித உடம்பு முழுவதும் பிராஸாதம் எனப்படும்.

இவை புருடனின் நின்ற கோலத்தின் ஒற்றுமையாகும் இதைவிடப் புருடனின் கிடந்த கோலத்திலும் ஒற்றுமை காண்பதும் உண்டு. நீளப்பாட்டில் பார்க்கும்போது கர்ப்பக்கிருகம், அந்தராலம், முகமண்டபம், மகாமண்டபம், பிராகாரம், துவஜம், கோபுரம் முதலியவை குறிப்பிடத்தக்கனவாகும்,

திருக்கோயில் ஆகம முறைப்படி அமையும்போது, கர்ப்பக்கிருகம், அந்தராலம், முகமண்டபம், மகாமண்டபம், பிராகாரம், கோபுரம் ஆகிய முக்கிய அங்கங்களைக் கொண்டமையும்.

இவ்வாறாக அமையும் திருக்கோயிலில் கர்ப்பக்கிருகம் தலையையும், அந்தராலம் கழுத்தையும், முகமண்டபம் தோளையும், மகாமண்டபம் வயிற்றையும், பிராகாரங்கள் கைகால்களையும், கோபுரம் பாதத்தையும், தூபிகள் விரல்களையும் குறிக்கும் என்பர்.

(தொடர்ச்சி 21ஆம் பக்கம்)

## மங்களம்

''எந்த மூர்த்தியானது பிரம்மாவினுடைய முதன்மையான படைத்தலுக்கு விஷயமானதோ, எந்தமூர்த்தியானது முறைப்படி ஹோமஞ்செய்த உணவை அடைவிக்கிறதோ, எந்த மூர்த்தியானது எஜமான ரூபமுடையதோ, பகல் இரவு செய்கின்ற மூர்த்திகளை யாது இயக்குகின்றதோ, சுரேத்திரேந்திரிய விஷய சப்தத்தைக் குணமாகவுடைய யாதொரு மூர்த்தியானது உலகத்தைப் பரவியிருக்கின்றதோ, எந்த மூர்த்தியை எல்லா ஆன்மாக்களும் முதற்காரணம் என்று சொல்லுகிறார்களோ, எந்த மூர்த்தியினால் ஆன்மாக்கள் உயிருடையவர்களோ, அவ்வித இந்திரியங்களுக்குப் புலப்படத்தக்க எட்டுவித உடல்களுடன் கூடிய பரமேஸ்வரன் உங்களைக் காப்பாற்றுக''.

''மழைவ ழங்குக மன்னவ னோங்குக
பிழையில் பல்வள மெல்லாம் பெருகுக
தழைக வஞ்செழுத் தோசை தரையெலாம்
பழைய வைதிக சைவம் பரக்கவே''

காளிதாஸ சாகுந்தலம்
மொழி பெயர்ப்பு: சச்சிதானந்த தீட்சதர்

## திருவிளையாடற் புராணம்

தென்னாடுடைய சிவன் என்றும் தென்பாண்டி நாடே சிவலோகம் என்றும் முன் வாதவூரர் பாடியருளியவண்ணம் சிவபெருமானின் அறுபத்துநான்கு திருவிளையாடல்களை அதியற்புதமாகக் கூறும் புராணம் பரஞ்சோதி முனிவர் செய்த திருவிளையாடற் புராணமாகும். பாண்டி நாட்டில் திருவாலவாய் என்னும் மதுரையிற் கோயில் கொண்டுள்ள மீனாட்சி சுந்தரேஸ்வரர் மகிமை பெருமைகளைப் பரஞ்சோதி முனிவர் பழகு தமிழிற் பக்திபரவசத்திற் பாடியருளியுள்ளார். திருவிளையாடற் புராணமும் சைவத்தின் ஒரு கண்.

## உபதேச காண்டம்

கந்தபுராணத்தைத் தமிழிற் பாடியருளிய கச்சியப்ப சிவாசாரியர் தொடாதுவிட்ட உபதேசகாண்டத்தைத் தமிழ்செய்தவர் குகநேரியப்ப நாவலர். அதற்கு இராமலிங்கத் தம்பிரான் சுவாமிகளின் மாணாக்கராய வடிவேலு முதலியார் பொழிப்புரை எழுதி 1897ஆம் ஆண்டில் வெளியிட்டார்.

கந்தபுராணச் சங்கரசங்கிதைச் சிவரகசிய காண்டத்தின் ஏழாவது பகுதியாய உபதேசகாண்டம் திருவெண்ணீறு, உருத்திராக்கம், திருவைந்தெழுத்து, சிவதர்மம், சிவபுண்ணியம், சிவபுராண சிரவணம், சிவபூஜை என்பனவின் மகிமையைக் கூறுவதாகும்.

## தலபுராணங்கள்

பழைய புராணங்களின் வேறுய்த் தமிழ்நாட்டிலுள்ள தேவாரம் பாடப்பெற்ற தலங்கள், தேவாரத்திற் குறிக்கப்பெற்ற வைப்புத்தலங்கள் என வழங்குந்தலங்கள் இவற்றின் சிறப்பையும் மகத்துவத்தையும் தமிழிலேயே பாடிய புராணங்கள் பல தலபுராணங்கள் என தமிழ்நாட்டிலும் ஈழநாட்டிலும் உள்ளன. தலபுராணங்கள் ஊர பிமானத்தை உண்டாக்கியதோடு அவ்வக்கோயில் உற்சவங்களைப்பற்றியும் மக்களுக்கு எடுத்துவிளக்கின.

## பெரியபுராணம்

திருத்தொண்டர் புராணம் என்றும் மாக்கதை என்றும் வழங்கும் பெரியபுராணம் தனிப்பெருமை வாய்ந்த தமிழ்ப்புராணம். அறுபத்துமூவரான தனியடியார்கள் வரலாற்றையும் ஒன்பது வகையினரான தொகையடியார் வரலாற்றினையும் பக்திச்சுவைநனி சொட்டச் சொட்டச் சேக்கிழார் சுவாமிகள் பாடியருளிய புராணம் பன்னிரண்டாந் திருமுறையெனப் போற்றப்பெற்று வருகின்றது. அடியார்கள் வரலாறு என்பதைவிட அது அருங்கலைக்களஞ்சியமாகவும் ஞானப்பேழையாகவும் சித்தாந்த சாத்திரக் கொள்கலனாகவும் சிறப்பிடம் வகிக்கின்றது.

(20ஆம் பக்கத் தொடர்ச்சி)

உள்ளம்....

திருக்கோயிலின் அதிஷ்டானம், பாதம், பிரஸ்தரம், கண்டம், சிகரம், கலசம் ஆகிய ஆறு அங்கங்களையும் கொண்டமைவதை ஷடங்கங்கள் என்றே ஷட்வர்க்கங்கள் என்றே வழங்குவர். வைணவ ஆகமங்களுக்கு அமைய அமைக்கும் ஆலயங்களில் மேலதிகமாகப் பாதம், பிரஸ்தானம் என்பனவற்றை விமானத்தில் அழகு ததும்ப அமைத்து அஷ்டாங்கங்கள் என வழங்குவர்.

முற்காலத்தில் விமானங்கள் சிறப்பிடம் வகித்தன. முற்காலத்து விமானங்கள் உயரமான அமைப்பினை உடையவை. அவை நாகரம், திராவிடம், வேசரம் என்னும் சில்ப மரபுகளில் அமைக்கப்பெற்றுவந்தன. நாகரமரபினமைந்த விமானங்களின் சிகரம் சதுரமாயிருந்தன. திராவிட அமைப்பில் சிகரம் எண்கோணமாயிருந்தன. வேசர விமானச்சிகரம் வட்டவடிவாயிருந்தன.

விமானங்களைப் பொறுத்தமட்டில் மற்றொரு அம்சம் அமைந்திருந்தது. கர்ப்பக்கிருகத்தில் எழுந்தருளும் தெய்வமூர்த்தத்துக்கமைய விமானமும் அமைந்தது. தெய்வமூர்த்தம் சாத்வீக அம்சமுள்ளதாயின் நாகரவிமானமும், ராஜச அம்சமுள்ளதாயின் திராவிட விமானமும் தாமச அம்சமுள்ளதாயின் வேசர விமானமும் அமைந்தன என்பர்.

## Divine Life for children

Harichandra was a king who always spoke the truth. His queen was Chandramati. Visvamitra was a sage and he tested the king in many ways. Harichandra was sent out of his kingdom, he was separated from his queen. His son died of snake-bite. Harichandra never spoke a lie. God was pleased with his truthfulness. His son came back to life. He went back to his kingdom with his queen. His name became very popular. He lived very happily.

— Adapted from Sivananda Swami

★ உண்மையை நாடுபவனுக்கு மௌனம் உதவுகிறது ★

## சைவ புராணங்கள்

தமிழிலக்கிய வரலாற்றை நூற்றுண்டு வரிசையில் வரன்முறையாக எழுதிவரும் பேராசிரியர் மு. அருணசலம் அவர்கள் பதினுரும் நூற்றுண்டு இலக்கிய வரலாற்றை மூன்று பெரும் பாகங்களாக எழுதி ஆங்காங்கே பதினைந்து சைவப்புலவர்கள் பாடிய நாற்பது சைவபுராணங்களை முகஞ்செய்வர். ஐம்பதாயிரம் பாடல்களில் சைவத்திறன் பேசிய பதினுரும் நூற்றுண்டுத் தமிழர் வாழ்விற் பொற்காலமாயிருந்தது.

இப்புராணங்களைவிட இன்னும் பல புராணங்கள் சிவபராக்கிரமம், சிவதருமம், சிவபுண்ணியம் முதலிய சிறப்புக்களைக் கூறுகின்றனவாகும். இன்னும் திருவைந்தெழுத்து, திருநீறு, உருத்திராக்கம், தியானம், யோகம், சோடசக் கிரியைகள், சிவபூசை, நித்தியகன்மங்கள் ஆதிய சைவசமய வரன்முறைகளையும் அற்புதமாகக் கூறுகின்றன.

இப்புராணங்கள் பெரும்பாலும் காப்பியப் போக்குள் ளனவாயுள்ளன. மதிநலம்வாய்ந்த மன்னர்கள் சிலர் புலமையாளராய்ப் புராணங்கள் செய்து மக்கள் மத்தியிற் பெருஞ்சிறப்புப்பெற்றிருந்தனர். வரகுணபாண்டியன், வரதுங்கராமபாண்டியன், அதிவீரராமபாண்டியன் ஆகிய சகோதரர்கள் மூவருமே பெரும்புலவர்களாயிருந்தமை சைவத்தமிழ் நாகரிகத்தின் சிறப்பு எனலாம். தமிழிலக்கிய வரலாற்றில் புராணங்களும் சிறப்பிடம் பெற்றுக் கொண்டமை சைவசமயத்திற்குப் பொற்காலமாயிற்று. அருணகிரிநாதரே அதனைப் பொற்காலம் என்றருளினுர்.

சைவபுராணங்கள் இலக்கியச்சுவை ததும்ப இயற்றப் பெற்றமை ஒரு சாதனையாகும். சைவசமய உண்மைகளை வலியுறுத்தியவாறே இலக்கியச்சுவை ததும்பச் செய்தமை மனுேதத்துவ நிபுணரான புலவர்க்கேயுரிய தனியாற்றலாயிற்று. தெய்வத்தை வேண்டிப்பாடும் பாடல்கள் பல தோத்திரங்கள்போல அமைவனவாயின. அவை மக்களுக்கு மனச்சாந்தியையும் ஆறுதலையும் அளித்தன.

தந்தைவழியில் மைந்தர்கள், அண்ணன் வழியில் தம்பிமார், கணவன் வழியில் மனைவி, ஆசிரியர் வழியில் மாணுக்கர் என்ற திறத்தில் சைவத்தமிழ்ப் புராணங்கள் கிளை கிளையாக உருவான செய்தி உளங்கொள்ளத்தக்கதொன்ருகும்.

## புராணப்படிப்பு

சைவசமயத்திற்கு முதல்நூல்களான வேதங்கள் சிவாகமங்களை எல்லோரும் படிப்பதில்லை. அவை எல்லோருக்கும் விளங்கமாட்டா. எனவேதான் வேதாகமக் கருத்துக்களை விரித்துரைக்கும் புராணேதிகாசங்களை எல்லோரும் படித்தல்வேண்டும் - கேட்டல்வேண்டும் என்னும் நியதியும் நிலவியது.

வயதுவந்தோர் கல்வி, முதியவர் கல்வி என்றெல்லாம் எழுத்துவாசனையில்லாதவர்களுக்கு அமைக்கப்பெறும் கல்விமுறைகளிற் பார்க்கப் புராணப்படிப்பு மிகமேலானது. எனவேதான் ஆறுமுகநாவலர் போன்ற பெரியவர்கள் அதனைப் பேணிப் பாதுகாத்து நல்லதொரு வரன்முறையையும் பாரம்பரியத்தையும் உண்டாக்கிப்போனுர்கள்.

கோயில், மடம்போன்ற தூய சூழலில் குத்துவிளக்கேற்றி ஒருவர் படிக்க மற்றெருவர் பாடல்களுக்குப் பயன் சொல்லும் முறை படிப்பறிவில்லாதவர்களுக்கும் பயன் தந்து அவர்களைப் பக்குவப்படுத்திப் பக்தர்களாக்கிவந்தது.

புராணப்பிரவசனம் என்னும் புராணப்படிப்புமுறையால் மக்களிடையே நல்லொழுக்கம், நல்லாசாரம், தெய்வபக்தி, சமூக ஒற்றுமை, சமூகப்பற்று, பிறர்நன்மை, கூட்டுறவு, திருப்தி, மனச்சாந்தி, தன்னம்பிக்கை முதலிய நல்லியல்புகள் வளர்ந்துவந்தன. புராணப்படிப்பு நல்லவர்களை உருவாக்குவதோடு நல்லறிவையும் நயமாகக் கூறுகிறது. உலக அமைப்பு, உயிர்களின் பிறப்பு, யோகம், நோன்பு, வழிபாடு, உடலமைப்பு, வைத்தியம், நாடி, விசாரணை, மந்திரம், தோத்திரம், சகுனம், நவக்கிரகங்கள், அவற்றின் போக்கு, புண்ணியம், பாவம், புண்ணிய பாவங்களின் பயன், இன்பதுன்பங்களின் இயல்பு என்பனவெல்லாம் புராணங்களில் உள்ளன. புராணம் படித்தல் கேட்டல் மக்களுக்கு அச்சம் தவிர்க்கும் கவசமாயும் இருந்தன.

முற்காலத்து மன்னர்களும் புரவலர்களும் வள்ளல்களும் புராணப் பிரசங்கியருக்கு, மாகதர்களுக்குப் பொன்னும் பொருளும் இன்ன பிறவும் நிலமும் கொடுத்துபசரித்தனர். கோயில்களில் பலவகை மண்டபங்களுள் புராண மண்டபமும் இருந்தது. இற்றைக்கு 2000 ஆண்டுகளுக்கு முன்பே புராணம் படித்து விளக்கும் வழக்கம் நிலவியதாக இளங்கோவடிகள் சிலப்பதிகாரத்திற் குறிப்பிடுகின்ருர்.

## India's Cultural Relations with Africa

India had trade links with the countries on her West coast before Menaean inscriptions dating back to the 14th century B. C. Excavations at Ur dating back to the 6th and 7th centuries B. C. revealed Amazonite heads which could only come from the Nilgiri Hills of South India. Flenders Petric discovered portraits of Indian men and women at memphis. Indian boats were drifted to the Red Sea long before Christ was born. The Indians knew the Eastern Coast of Africa and the Nile. River Nile was known to the Hindus as Krishna and part of Tanzenia as Chandrastan. Trophical Africa was known as Salmalidwipa. Santha Dwipa Island of shells became Zank and later Zanzibar. Periplus noticed large Hindu ships off Eastern Africa. Hindu setttlements were found in the North Coast of Socotra. When Vascodagama reached the East Coast of Africa he found Hindu Merchants at a number of ports. He was guided by Indians to South India. Sir Harry Johnslon wrote about East Africa as the America of the Hindus. Sir Winston Chrchill wrote "It is the Indian Trader who penetrated in the early beggining of trade and opened up the first slender means of communication. It is the Indian Banker who supplies perhaps the larger part of capital yet available for business-men and enterprise."

Dr. Ravindra Ramdas

★ செருக்கும் பொருமையும் நம்மை உருப்படவிடா ★

# புத்தகுரு கண்ட சிவவழிபாடு

முன்னமொரு புத்தகுரு கண்ட சிவ வழிபாட்டின் சிறப்பைப் பெரியபுராணம் சாக்கிய நாயனார் புராணம் எனக்கூறுகிறது. பின்னரொரு புத்தகுரு பதினைந்தாம் நூற்றாண்டின் நடுப்பகுதியில், இற்றைக்கு 530 ஆண்டுகளுக்கு முன் பின்னாக வாழ்ந்து கருதிய சிவவழிபாட்டு முறையை அவர் தாமியற்றிய செலலிஹினி சந்தேச என்னும் மைனாவிடு தூதிற் பாடியின்புறுவதை அறியலாம்.

தொட்டகமுவ ஸ்ரீ இராகுல என்பார், கோட்டே என்னும் ஜெயவர்த்தனபுர நகரில் அரசு வீற்றிருந்த ஆறும் பராக்கிரமபாகு என்னும் மன்னனின் முதன் மந்திரியாரின் அபிலாசையைச் சித்திரித்து, மன்னனின் புதல்வியாய உலகுடைய தேவிக்கு ஆண்குழந்தை பிறத்தல் வேண்டும் என்னும் பிள்ளைவரங்கோரிய பிரார்த்தனையை, இலங்கையின் காவல் தெய்வமாகக் கல்யாணபுரமென்னும் கழனியாவில் எழுந்தருளிய விபீடன ஆழ்வாரிடம் விண்ணப்பிக்குமாறு மைனாவைத் தூதுவிடுத்தார்.

தூதுவிடுத்த செல்லப் பிராணியாய மலைநாட்டு மைனாவிடம் இவ்வாறு செல்வாயாக, இதனைக் காண்பாயாக, இதனைச் செய்வாயாக என்றெல்லாம் இன்றியமையாதனவாகக் கூறிய புத்தகுரு ஈஸ்வர தேவாலயம் என்னும் சிவன் கோயிலையும் அங்கேயுள்ள தலவிருட்சத்தையும் குறிப்பிடுவர்.

திருக்கோயிலில் கர்ப்பூரவொளியும் புகையும் கொடியும் மேலெழுதலைக் கூறுவர். சங்கும் மிருதங்கமும் ஒலிக்கும் சத்தம் முழக்கம் போலதிரும் என்பர். ஆலயமணியும் கண்டாமணிகளும் ஒலிக்கும் ஓசை காற்றில் மிதந்துவரும் என்பர். அடியார்கள் பக்திபூர்வமாக வழிபட்டு உருக்கமாகத் தமிழில் திருமுறைகளை ஓதுவார்கள் என்பர்.

ஐவகை வாத்தியங்கள் திருக்கோயில் அதிகாலைப் பூசையின்போது ஒலிக்கும் என்பர். சூரியன் உதிக்குமுன்பே நீ நித்திரைவிட்டெழுந்து விடுதல்வேண்டும். உதயகிரியில் கதிரவன் ஒளிவீசி எழுவதன்முன் ஈஸ்வரனுக்குக் காலைப் பூசை நடைபெறுவதைக் கவனித்துப்பார் என்பர்.

இவ்வாறு சிவவழிபாட்டின் சிறப்பைக்கூறும் புத்தகுரு, சூரியவம்சம் என்றால் என்ன என்றும், பராக்கிரமபாகு திருவுடைய மன்னனாகையால் திருமாலை ஒத்திருந்தான் என்றும் கூறுவர். வருணதேவன், சூரியதேவன் இலங்கைக்கு ஆதரவாயிருப்பதைக் கூறுவர். முழங்கும் பெருங்கடல் அகத்தியமுனிவரின் உள்ளங்கையில் ஒரு துளியாய் இருந்ததைக் குறிப்பிடுவர். விஷ்ணுவை முன்னிட்ட தேவர்கள் மந்தர மலையை மத்தெனநாட்டிப் பாற்கடலைக் கடைந்த கதையை நினைவுபடுத்துவர். அரம்பையர் அனைய மகளிர் மெல்லென நடந்து ஏழிசையமையக் கீதம் பாடுவதைக் குறிப்பர். இலக்குமி சரஸ்வதி என்னும் இருவரின் ஒளியிருந்த குண்டலங்களைக் குறிப்பர். இன்னும் இந்திரலோகத்து எழில்பெற அமைந்த கற்பகவிருட்சம், காமதேனு, சித்தாமணி ஆகியவற்றைப் பாடுவர்.

தேவ தேவனுய்க் கழனியாவில் கோயில் கொண்டிருந்த விபீடணன் புகழை விரித்துப் பாடுவர். மூவுலகையும் வென்ற இராமபிரானின் நண்பன் விபீடணன் என்பர். மூன்று வேதங்களையும் முறையாகக் கற்றுணர்ந்த புலஸ்திய முனிவர் வழிவந்தவன் விபீடணன் என்பர்.

# அருவம்

இறைவன் ஊரிலான் பேரிலான் குணம் குறியிலான் வடிவிலான். அவன் அருவமாயுள்ளவன். அருவமாயுள்ள அவனை இப்படியன் இந்நிறத்தன் இவ்வண்ணத்தன் இவன் இறைவன் என்று எழுதிக்காட்ட முடியாது. ஆனால் அவனருள் பெற்றால் அவனைக் காணமுடியும். அருள் பெற்ற அடியார்கள் அவனைக் கண்டுள்ளார்கள். கண்ணால் நானும் கண்டேன் காண்க என்றும், புவனியில் திருவடி தீண்டினன் காண்க என்றும் மாணிக்கவாசக சுவாமிகள் கண்டு பாடியருளியுள்ளார்.

அங்கிங்கெனாதபடி எங்கும் பிரகாசமாய் ஆனந்த மூர்த்தியாகி, அருளொடு நிறைந்ததை எளிதிற்கண்டு கொள்ளமுடியாது. அந்தப் பேரொளிப் பிழம்பு அன்படியார் பொருட்டு அருளையே திருமேனியாகக்கொண்டு காட்சிகொடுத்துள்ளது. இறைவனுக்கு உருவம் இல்லை; பெயரில்லை, என்றறிந்ததும், பலவாய உருவங்களைக் கற்பித்தும், பேராயிரம் பரவியும் அடியார்கள் தொழுவார்கள்.

திருக்கோயில் உள்ளிருக்கும் திருமேனி தன்னைச் சிவனெனவே கருதினர்க்குச் சிவனுறைவன் ஆங்கே. ஆலயந்தானும் அரனெனத் தொழுமே என்பது சிவஞானபோதம். திருமேனியைத் தொட்டுப் பூசிப்பவர், அதற்குத் தூப தீபங் காட்டும்போது மேலே உயர்த்தியும் காட்டும்பாவனை ஒன்றுண்டு. அது கடவுளுக்கு உருவமில்லை அவர் அருவமாயுள்ளவர் என்பதையும் காண்பிப்பதற்காகவேதான். எனவே உருவவழிபாடு ஒரு படிக்கிரமத்தில் உள்ளதாகும். உச்சப்படியில் உருவம் இல்லை. அருவமே.

# மத்தியகால இந்து மறுமலர்ச்சி ஒருகுறிப்பு

மத்தியகாலத்து இந்து மறுமலர்ச்சிக்காலம் என வரலாற்றாசிரியர் குறிப்பிட்ட எல்லை 1300—1600 ஆகும். நூற்றாண்டுக் காலமாகப் படையெடுப்பாளரின் கெடுபிடிகளில் தப்பித்தவறி ஒதுங்கியிருந்த இந்துமதம் நீறுபூத்த நெருப்புப்போல நிலவியது. இந்துமதத்தைக் கைவிட்டுப் படையெடுப்பாளரின் மதத்தைத் தழுவியவர்களுக்குப் பதவிகள் அதிகாரபீடங்கள் காத்திருந்தன.

இந்தக் காலகட்டத்தில் இந்துமதத்தை விடாப்பிடியாகப் பேணிப்பாதுகாத்த செம்மல்கள் செய்த அரும்பணி பின்னர் மறுமலர்ச்சிக் காலத்துக்கு வரப்பிரசாதமாயும் வித்தாயும் அமைந்தது. பதினாறாம் நூற்றாண்டின் நடுப்பகுதியில் சமயத்துறை, இலக்கியத்துறை, சன்மார்க்கத்துறை, அரசியற்றுறை ஆதிய பல்வேறு துறைகளமைந்த இயக்கமாக ஒரு மறுமலர்ச்சி உதயமாயிற்று.

இக்காலத்திலே இராஜபுத்திரர் என்பார் தங்கள் ஆண்மையைக் காட்டினார்கள். வழிகாட்டிகளாக முன்னின்றவர்கள் அவர்கள். ஹம்மிரவிஜயம் என்னும் நூலில் வீராதி வீரனான ஹம்மிரன் என்பானின் வலிமை பேசப்பெறுகிறது. ராணாகும்பா என்பான் மறுமலர்ச்சிக்காலத்தில் மங்காத ஒளியென எங்கும் பிரகாசித்தான். ஆண்மை

(தொடர்ச்சி 25-ம் பக்கம்)

★ சுயநலம் தலைச்சுமையிலும் பெரிய மனச்சுமை ★

# சிவநடனங் கண்ட முனிவர்கள் வரலாறு

## 1. பதஞ்சலி முனிவர்

மன்று தொழுத பதஞ்சலி என்று திருமூலநாயனார் போற்றிய பெருமுனிவர் பதஞ்சலி ஆதிசேடனின் அம்சமாகப் பாம்பின் காலோடு தோன்றியவர். பெருந்தவத் தவரான அத்திரி முனிவருக்குக் கற்பிற் சிறந்த பெருந்தகைப் பெண்டிரான அனசூயை என்பாளிடம் உண்டானவர். புலிக்கால் முனிவர் என்னும் வியாக்கிரபாதருக்கு நண்பர். பதஞ்சலி முனிவரும் வியாக்கிரபாத முனிவரும் சிவபெருமானின் பரமபக்தர்கள். இருவரும் இறைவனைவிட்டு நீங்காமல் இருப்பவர்கள். இறைவன் செய்தருளிய திருநடனங்களைக் கண்டு மகிழ்ந்தவர்கள்.

## 2. வியாக்கிரபாத முனிவர்

புலிக்கால் முனிவர் எனப்பெயர்பெற்ற வியாக்கிர பாதர் மத்தியந்த முனிவரின் மைந்தராவர். மழமுனிவர் என்னும் பெயர்பெற்ற இவர் சிவபெருமானுக்கு மலர் பறித்துக்கொடுத்து வாழ்ந்தவர். காலையில் பொழுது விடிந்தபின் மலர் பறித்தால் அவற்றை வண்டுகள் பூச்சிகள் சேதப்படுத்திவிடுவதைக் கண்டார். விடியுமுன் பறிப்பதானால் மரத்தில் பனிநீர் படிந்து வழுக்குதலைக் கண்டார். எனவே கால்கை வழுக்காமலிருத்தற்பொருட்டுப் புலிநகங்கள் தருமாறு இறைவனை வேண்டி நகக்கண்களோடு பெற்றுத் தொண்டுசெய்துவந்தார். தமக்கு நண்பராய் இருந்த பதஞ்சலி முனிவரோடு சேர்ந்து சிவபெருமானின் அற்புதத் திருநடனங்களைக் கண்டுவந்தார்,

# அப்பர் அடிகளின் அனுபவம்

(Experience of the father of Saiva Thamil Nation)

நாம்ஆர்க்கும் குடிஅல்லோம், நமனை அஞ்சோம்
நரகத்தில் இடர்ப்படோம், நடலை இல்லோம்,
ஏமாப்போம், பிணிஅறியோம், பணிவோம் அல்லோம்,
இன்பமே எந்நாளும் துன்பம் இல்லை,
தாம்ஆர்க்குங் குடிஅல்லாத் தன்மைஆன
சங்கரநற் சங்கவெண் குழையோர் காதிற்
கோமார்க்கே நாம்என்றும் மீளா ஆளாய்க்
கொய்மலர்ச்சே அடிஇணையே குறுகினோமே.

Subjects we are to none
Death we fear not
Hell we suffer not
Weaklings we are not
Disease we know not
Serfs we are to none
We enjoy lasting bliss
Misery is not for us
We are servitors
Of the unique king
Shankara who is bound to none

— Translation; Sudhanandar

# உலகந்தழுவிய ஒருமதம்

என்றும் எங்கும் எல்லோரும் சுகமாகவும் சுபீட்சமாகவும் வாழவேண்டும் என்று எல்லாம் வல்ல கடவுளை முன்னிட்டு வாழ்த்தும் ஒரு சமயம் உலகுக்கொரு சமயம் இந்து சமயம். அது உலகம் உய்ய என்றே வாழ்த்துகின்றது. உலகெலாம் என்று திருமுறைகள், புராணங்கள் வாழ்த்துகின்றன. வடமொழி வல்லாரும் சுபமஸ்து நித்யம் லோகாஸ் ஸமஸ்தா ஸுகிநோ பவந்து என்று வாழ்த்துவர்.

# கோயிற் புராணமும் சிதம்பர சபாநாதர் புராணமும்

கோயில் என்பது சிதம்பரம். அங்குள்ள பொன்னம்பலம் பொலியப் பூவையாய சிவகாமசுந்தரியுடன் திருநடனம் புரிகின்றவர் சபாநாதர் - தில்லை நடராஜப்பெருமான். கோயிலைச் சிறப்பித்துப் பன்னிரு திருமுறைகளிலும் இருபத்தேழு பெரியவர்களும் பாடியருளியுள்ளார்கள்.

சந்தானகுரவர்களுள் உமாபதி சிவாசாரியர் தில்லை வாழந்தணர் திருக்கூட்டத்திலொருவராயும், அயலில் உள்ள கொற்றவன் குடி முதலியாராயும் இருந்தவர். மெய்கண்டசாத்திரங்களுள் பெரும்பகுதியை அருளியவர். வடமொழியில் பல நூல்கள் செய்தவர்.

உமாபதி சிவாசாரியர் தமிழிற் செய்த நூல்களுள் ஒன்று கோயிற்புராணம் என்பது. அது சிதம்பரத்தின் மகிமையைக் கூறுவது. அதற்கு ஆறுமுகநாவலரவர்கள் உரையெழுதி அச்சிற் பதிப்பித்துள்ளார்.

சிதம்பர சபாநாதர் பெருமையைப் புராணமாகப் பிற்காலத்திற் பாடிய பெரியவர் கோப்பாய் வடபகுதியைச் சேர்ந்த சபாபதி நாவலராவர். இவர் திருவாவடுதுறையில் மகா வித்துவானாகப் பல்லாண்டுகள் பணிபுரிந்தவர்.

# புராணங்கள்

இந்துசமயத்தில் புராணங்களும் இதிகாசங்களும் பொதுமக்கள் வாழ்வில் பெரும் மாறுதல் உண்டாக்கி வந்துள்ளன. வேதங்கள் ஆகமங்களை விளங்கிக்கொள்ள முடியாதவர்களுக்கு வேதாகமக் கருத்துக்களை விளக்குவன புராணேதிகாசங்களாகும்.

பழைய புராணங்கள் பதினெட்டு வகையாக உள்ளன, சமஸ்கிருத மொழியில் எழுந்த புராணங்கள் பல காலத்திற்குக்காலம் தமிழில் மொழிபெயர்த்துப் பாடப்பெற்றுள்ளன. கந்தபுராணம் கச்சியப்பசிவாசாரியர் தமிழிற் தந்ததைத் தமிழ்ச்சைவர்கள் பெரிய வரப்பிரசாதமாகக் கொண்டிருக்கின்றனர்.

யாழ்ப்பாணக் கலாசாரம் கந்தபுராண மூலம் என்பதை ஆறுமுகநாவலர் பாரம்பரியம் கருத்திற்கொண்டு உவந்து பேணிப் பாதுகாத்து வருகின்றது. கோயில்கள் தோறும் கந்தபுராணபடனஞ் செய்யும் பாரம்பரியம் ஒன்று பலவிடங்களில் படர்ந்து வந்துள்ளது. கந்தபுராண மடம் என்னும் பெயரிலமைந்த மடமொன்று நல்லூருக்கு மேற்கில் உள்ளது. அம்மடத்தின்பெயரால் அயலிடமுட்பட அந்த இடம் கந்தமடமெனவே வழங்கி வருகிறது.

## பிரதமர் பண்டாரநாயக போற்றிய ஈசானசிவாசாரியர்

பழநி வேதாகம வித்தியாலய அதிபர் ஈசானசிவாசாரியர் இடையிடையே ஈழம்வந்து கொழும்பு, யாழ்ப்பாணம் முதலிய இடங்களில் சைவசித்தாந்தம் பேசியவர்.

ஒருமுறை அவரை நேரிற்கண்ட முன்னுள் பிரதமர் பண்டாரநாயக அவர்கள் சுவாமிகளை வணங்கித் தம் மனையில் சிவபூசை செய்து தமக்கு உய்யும்வழி காட்டுதல்வேண்டும் எனக் கேட்டுக்கொண்டார்.

## ஊர்க்குருவியில் தேவாரம்

வீரகேசரிப் பத்திராதிபராயிருந்த ஹரன் ஐயா அவர்கள் பொதுமக்களுக்காக ஊர்க்குருவி என்னும் புனைபெயரிற் கண்டதும் கேட்டதும் இலகுவாக எழுதிவந்தார். ஈசான சிவாசாரியர் பேச்சைக் கேட்கப்போன இடத்தில் பத்திராதிபர் தம் பத்திரிகையையும் எடுத்துப்போனுர். வீரகேசரியின் சேவையையும் ஹரன் ஐயாவின் எழுத்தாற்றலையும் பாராட்டிய சிவாசாரியர் பொதுமக்களுக்குத்தேவாரம் எழுதுமாறு பணித்தார்கள். அன்றுமுதல் நாள்தோறும் ஊர்க்குருவி தேவாரம் ஒன்று எழுதுவதைத் தவிர்க்கவில்லை.

## திருக்கோணமலை மாதாஜீயின் உருக்கமான குருபூசை

ரிஷிகேசஞ் சென்று தவமேற்கொண்டு சிவானந்த தபோவனம் அமைத்துப் பிள்ளைகளுக்குப் புகலிடம் அமைத்த திலகவதியார் போன்ற தாயார் சிவானந்த சச்சிதானந்த சரஸ்வதி மாதாஜீ அவர்களின் நான்காவது குருபூசைத்தினம் 1-4-82 வியாழக்கிழமை வழிபாடு, மந்திர உச்சாடனம், ஜெபம், தியானம், அன்னதானம், உரையாடல், சொற்பெருக்கு, கலைநிகழ்ச்சி முதலியவற்றோடு நடைபெற்றது. மாதாஜீயின் நினைவு பிள்ளைகளை வளர்க்கும்.

## சென்ற நூற்றுண்டிலே நல்லூர்க் கந்தசுவாமி கோயில்

சென்ற நூற்றுண்டிலே 1807ம் ஆண்டு ஜனவரி மாதம் ஐந்தாம் நாள் நல்லூர்க் கந்தசுவாமி கோயிலில் ஒரு வைபவம். தேசாதிபதி தோமஸ் மெயிற்லந்து என்பார், அரசறிய நல்லூர்க்கந்தசுவாமி கோயில் அர்ச்சகர் ஸ்ரீலஸ்ரீ சிகிவாகனர் பாலசுப்பிரமணியர் என்பாருக்கு நியமனக் கடிதம் வழங்கினுர்; அக்கால வழக்கத்தில் அது பெருங் கௌரவமாக மதிக்கப்பெற்றது.

## புத்தகப்புதினம்

தனிநாயக அடிகள்மூலம் இலங்கை பெற்ற புகழ்வரிசையில் ஒன்று, அவர் தமிழ்நாட்டரசாங்கத்தால் குழந்தை இலக்கிய ஆராய்ச்சிக் குழுவுக்கு 1959ம் ஆண்டில் நியமனம் பெற்றதாகும்; தமிழ்நாட்டுப் பெரியார் பலர் இடம்பெற்ற குழுவில் அடிகளார் தலைவராயிருந்து பணிபுரிந்தார்.

## தமிழருக்குச் சோபனம்

இங்கிலாந்திலிருந்து 8-10-1851இல் இலங்கைக்கு வந்த ஸ்ரான்லி என்னும் பிரபுவுக்குக் கொழும்பில் ஆடம்பரமான இராப்போசன விருந்து பெரியவர்கள் அதிகாரிகள் மத்தியில் நடைபெற்றது. விருந்திற்கலந்துகொண்ட தேசாதிபதி அவர்கள் இலங்கைவாழ் தமிழருக்குச் சோபனங்கூறி மகிழ்ந்து அமர்ந்த வேளையில், தமிழ் இளைஞன் ஒருவன் எழுந்து தேசாதிபதி அவர்களுக்கு நன்றி தெரிவித்து அழகான ஆங்கிலம் பேசினுன். இளைஞனை ஆ. முத்துக்குமாரசுவாமிக்கு அடுத்தநாள் அரசாங்கத்தில் பெரிய உத்தியோகம் கிடைத்தது. சிவில் சேவைக்கு உயர்த்தப்பெற்ற இளைஞன் உத்தியோகத்தைவிட்டு நாட்டுப்பணி செய்வதற்குச் சட்டசபையில் பிரதிநிதியாகி, சேர். முத்துக்குமாரசுவாமி எனப் பெரும்புகழ் பெற்றுர்.

(23ஆம் பக்கத் தொடர்ச்சி)

### மத்திய....

மிக்க ஆளுமை உள்ளவனுயிருந்ததோடு, இயற்கைப்புலமையும் இசைவல்லமையும் உள்ளவனுய், தர்மத்தை நிலைநாட்டுந் தாராள மனப்பான்மையுள்ளவனுயும் அவன் தலையெடுத்தான். அவன் முப்பத்திரண்டு கோட்டைகளை அமைத்து நாட்டைப் பாதுகாத்தமை மத்தியகாலத்து வரலாற்றில் மகிமைபெற்ற பொற்காலமாகும்.


இக்காலத்திலேதான் தென்னுட்டில் வீரசைவம் என்னும் லிங்காயதம் நன்கு பரவிச் சிவ வழிபாட்டைப் பாதுகாத்தது. இத்தகைய இயக்கங்களே விஜயநகரப்பேரரசின் அமைப்புக்கும் ஆண்மைக்கும் உற்றதுணையாயிருந்தன. விஜயநகரப் பேரரசு முந்நூறு ஆண்டுகள்வரை இந்துசமயத்தைப் பேணிப் பாதுகாத்தது.

### கிருஷ்ணதேவராயர் ஆட்சி (1509 — 1531)

விஜயநகரப் பேரரசு வீறுகொண்டிருந்த காலத்திலேதான் வேதங்கள் முழுவதற்கும் சாயனர் தலைமையில் பாடியம் தயாரிக்கப்பெற்றது. வடநாட்டில் ராணுகும்பா என்பானை மறுமலர்ச்சியின் பிரதிநிதியெனக் கருதினுல், தென்னுட்டில் கிருஷ்ணதேவராயர் சிறப்பிடம் வகிக்கின்றுர் எனலாம். கிருஷ்ணதேவராயர் வீராதி வீரனுயும், படிப்பாளியாயும், கோயில்களை அற்புதமாக அமைத்துப் பாதுகாத்த பக்தசிரோமணியாயும் விளங்கினுர். தமிழ்நாட்டுக்கு அப்பாலிருந்துகொண்டு தமிழ்த்தொண்டு புரிந்த செம்மலாயிருந்தவர் ராயர்.

ஆமுக்தமாலியதா என்னும் பெருநூல் செய்த தெலுங்குப் புலவராயிருந்த ராயர், தமிழ்ப்புலவர்களை வெகுவாக ஆதரித்ததோடு சைவத்தையும் வளர்த்துள்ளார். தத்துவப் பிரகாசா என்பார் மெத்தப்பெரிய சைவத்தொண்டு புரிவதற்கு ஊக்கமளித்தவர் ராயர்.

இன்னும் தமிழில் சைவபுராணங்கள். வைணவ புராணங்கள், சைவசமய சாத்திரங்கள் முதலியன வெகுவாக வளர்ச்சியடைந்தன. திருவாரூர் கமலை ஞானப்பிரகாசர் என்பாரும் அவரின் மாணுக்கர்களும் சைவத்தமிழ் நூல்கள் எழுதுவதற்குப் பேராதரவு நல்கிய புரவலர் கிருஷ்ண தேவராயராவர்.



# Divine Life for Children

Swami Sivananda

Obey your parents. Speak the truth always. Be punctual. Never tell a lie. Always be neat and tidy. Be good and do good Be a hero. Help the poor and the needy. Do your daily duty well.

Learn your lessons well. Respect elders and your teachers. Serve your country. Serve society. Never shirk work. Do not put off things for tomorrow. If you do your duty well the battle of life will be won. You will be ever happy.

Be ever active. Selfless service, Sacrifice, love must be your motto. Lead and exemplary life. Be polite and courteous. Never injure the feelings of others. Never speak harsh words. Speak sweetly. Give up talkativeness. Do not abuse anybody. Do some good service everday.

## ஆறுமுகநாவலர் இங்கிலாந்திற் பெற்ற புகழ்

ஆறுமுகநாவலர் அவர்களின் சைவப்பணியை யாழ்ப் பாணத்து அரசாங்க அதிபர்கள் காலத்துக்குக் காலம் தேசாதிபதிகளுக்கு அறிக்கைகள்மூலம் எழுதிவந்தார்கள்.

நாவலர் அவர்கள் சின்னப்பிள்ளைகளுக்கு எழுதிய பாலபாடங்களில் பொய்சொல்லாதே மாமிசம் புசியாதே என்றெல்லாம் எழுதியதை வணக்கத்துக்குரிய போதகர் E. J. றொபின்சன் என்பார் தமது இந்துப்போதகர் (Hindu Pastors) என்னும் நூலில் 1867ம் ஆண்டில் எழுதினர். இந்நூல் இங்கிலாந்தில் வெளியானபோது ஆங்கிலேயர் ஆறுமுகநாவலர் அவர்களை நன்கறிந்தார்கள்.

## பென்னம்பெரிய நூலகம்

அமெரிக்க ஜனாதிபதி தோமஸ் ஜெபர்சன் பயன்படுத் திய 6487 நூல்களைக்கொண்டு ஆரம்பிக்கப்பெற்ற அமெ ரிக்க நூலகம் 1815ம் ஆண்டில் நல்லமுறையில் விரிவடை யத் தொடங்கியது. அது 1960ம் ஆண்டுக்கிடையில் 3, 53, 31, 657 நூல்களையும் ஆவணங்களையும் கொண் டமைவதாயிற்று. கிறமபோன் றெக்கோட்டுகள், படச் சுருள்கள். மைக்றோ பில்ம்கள் யாவும் அங்கே உண்டு.

பென்னம்பெரிய கட்டடங்களில் அங்குள்ள நூல்களின் வரிசை 250 மைல் நீளமானதாகும், அவற்றைக் காங் கேயன்துறையிலிருந்து கொழும்புவரை நெருக்கமாக அடுக் கலாம். அங்கே 2520 அலுவலர் பொதுமக்களுக்காக கடமையாற்றுகிறார்கள். அங்கே 3,40,000 பட்டதாரி கள் 1955ம் ஆண்டில் ஆராய்ச்சி செய்தனர். அவர் களுக்கு வேண்டிய நூல்கள் அத்தனையும் அங்கிருந்தன. இந்நூலகம் அமெரிக்காவின் ஆயிரக்கணக்கான நூலகங்க ளுக்கு வெகுவாக உதவுகின்றது.

## மாளவியா மெச்சிய நாவலரின் பாடம்

காசிப் பல்கலைக்கழகம் நிறுவிய பண்டித மாளவியா தலைமையில் பழநி வேத சிவாகம வித்தியாசாலையதிபர் ஈசான சிவாசாரியர் இந்திமொழியில் சைவ சித்தாந்தம் பேசினர். அவர் பீடிகையாகக்கொண்ட பொருள் யாழ்ப் பாணத்து நல்லூர் ஆறுமுகநாவலர் எழுதிய முதற்பால பாடத்தின் ஒரு பாடமாகும். அந்தப்பாடம் இது.

கடவுள் ஒருவர் இருக்கிறார்.
கடவுள் எங்கும் இருக்கிறார்.
கடவுள் எல்லாம் அறிவார்.
கடவுள் எல்லாம் வல்லவர்.
கடவுள் இரக்கம் உடையவர்.
கடவுள் நம்மைக் காக்கிறார்.
கடவுளை ஒருகாலமும் மறவாதே.
கடவுளை எந்நாளும் வணங்கு.

இப்பாடத்தின் மொழிபெயர்ப்பைக் கேட்ட மாளவியா ஈசானசிவாசாரியாரைக் கட்டித்தழுவி, வீழ்ந்து வணங்கி சுவாமி! இன்னும் ஏழுநாட்கள் இந்தவிடயம்பற்றித் தாங் கள் விரித்துப்பேசுதல்வேண்டும் என்று கேட்டுக்கொண் டார்.

## சாரதா கல்லூரி

சேலம் மாவட்டத்தின் சிறப்புக்களில் ஒன்று அங்கே பேரும் புகழும் பெற்று நிலவும் சாரதா மகளிர் கல்லூரி. பெண்குழந்தைகளைப் பெருமாட்டிகளாக உருவாக்கும் பெரும் பணியில் இக்கல்லூரி ஈடுபட்டுள்ள அருமையை ஒருநாளில் அறிதல் கடினம். இக் கல்லூரிக்குத் தலைமை தாங்கும் தாயார் சாரதா பிரியா என்பவராவர்.

சாரதா பிரியா அவர்களின் தலைவர் முன்னாள் நேரு அரசாங்கத்தில் நீண்டகாலம் மந்திரியாராயிருந்த உத்தம ராவர். கணவன் மறைந்தபின் அம்மையார் தியாகமனப் பான்மையில் இக் கல்லூரியின் வளர்ச்சியில் ஈடுபட்டு வருகிறார். இக் கல்லூரியின் அடிக்கல் நாட்டுவிழாவின் போது கலந்திருந்து பூசை முதலியன புரிந்தவர் இன்று மட்டக்களப்பு கல்லடி உப்போடை இராமகிருஷ்ணர் மடத்துச் சுவாமியாக எழுந்தருளி மக்கள் தொண்டு செய்துவரும் ஜீவனானந்த மகராஜ் ஆவர்.

இக் கல்லூரியைப் பார்ப்பதற்கு மில்க்வைற் தொழி லதிபர் விரும்பியபோது அவரை அழைத்துச்சென்றவர் இராசிபுரம் சிவானந்த மடத்துத் தலைவராவர்.

★ எமது எண்ணம்போல எமக்கு வாழ்வு அமைகிறது ★

# உலகம் பரவிய சைவம்

இந்துசமயத்துக்குத் தனிக்கடவுள் கிடையாது. இந்து சமயம் என்னும் கூட்டுறவு உருவாகுமுன் நிலவிய சமயம். சைவம். சைவசமயத்துக்குக் கடவுள் சிவபெருமான்.

சைவத்தின் கோட்பாடு உலகமெங்கும் ஒருகாலத்திற் பரவியிருந்தது. கடல்கடந்து வியாபித்த சமயத்திற் காலத்தால் முந்தியது சைவம். அன்பு சாந்தம் பொறுமை முதலிய நல்லியல்புகளோடு கூடிய சைவத்தில் நாளடைவில் வேறு சில தன்மைகளும் கலந்தன.

## உபநிடதத்திற் சைவம்

சுவேதாசுவதர உபநிடதம் சிவபெருமானின் பரத்துவத்தைப் பக்திபூர்வமாகக் கூறுகிறது. அருவநிலையில் சிவமே மூலகாரணம். தெய்வங்களுக்கெல்லாம் தலைமைத் தெய்வம் சிவமேகாசர். அவரே வரமளிப்பவர். அவர் கிரிவாசர். அவரைத் தவத்தின் மூலம் அறியலாம், அடையலாம்.

## வேதத்திற் சைவம்

வேதத்தில் ருத்திரன் சிவனெனவே கருதப்பெற்றார். விருஷபன், குமாரன், யுவன், உக்கிரன், ஈசன் முதலிய திருநாமங்கள் இறைவனைக் குறிப்பனவாகும். அக்கினிபகவானோடும், மருத்துவர்களோடும் உருத்திரனைத் தொடர்பு படுத்தியுள்ளனர்.

சிவபெருமான் முப்புரங்களைத் தகர்த்தமை யசுர் வேதத்திற் கூறப்பெற்றுள்ளது. வேதகாலத்துக் கருத்துக்கள் சிவனைப் போற்றும் விதத்தைச் சதருத்திரியம் கூறுகிறது. வேதங்களில் சிவன் என்னும் திருநாமம் வேறு வகைகளில் வழங்கிவந்துள்ளது. சதருத்திரியம் பசுபதி என்று போற்றும் கடவுள் சிவனைவிட வேறுகார்.

## முப்பொருள் உண்மை

பசுக்களுக்குத் தலைவர் பசுபதி என்றால் பதி பசு பாசம் என்னும் முப்பொருளுண்மை முன்னமே நிலவிவந்துள்ளது தெளிவாகும். அதர்வசிரஸ் திருநீறணியும் திறனையும் மகிமையையும் போற்றுகிறது. சிவயோகம் பாசபந்தங்களை நீக்குவது என்னும் கருத்துக் கைவல்ய உபநிடதத்திலேயே காணக்கூடியதாக அமைந்துள்ளது. துறவு வாழ்க்கை மனிதசக்தியைத் திறம்படச் செய்யுமென்பர்.

## சைவநெறி

சைவநெறி நின்றார் பலர் பிற்காலத்திற் பிறகோட்பாடுகளைப் பின்பற்றினார்கள் என்பர். இதிகாசங்கள் எனப் போற்றப்பெறுவனவுள் சிவரகசியம் பரமேதிகாசம் எனப்பெறும். இராமாயணமும் மகாபாரதமும் சிவபெருமானுக்குப் பரத்துவமும் ஏற்றமும் கொடுத்துப் பாடப்பெற்றுள்ளன. கண்ணபரமாத்மாவே சிவயோகத் தமர்ந்தும் சிவபூசை செய்தும் வாழ்வு பெற்றார் என்பர்.

## சிவபூசை

வியாக்கிரபாதர் சிவநடங் காண்பதற்கு விடியற்கால முதலாகப் பூசைசெய்து தொழுவர். அவரின் மைந்தரும், வசிட்ட முனிவரின் மருமகனுமாய உபமன்யு சிவபெருமானருளால் பால்பருகியவர். உபமன்யு முனிவர் தீட்சைபுரிந்து கண்ணனைச் சிவபூசைசெய்யப் பழக்கியவர். கண்ணன் தாமே சிவனுகச் சிவோகம்பாவனையிலிருப்ப அர்ச்சுனன் சிவபூசைசெய்தான் என்றும், அப்பூசையைச் சிவன் ஏற்றருள்புரிந்தார் என்றும் அறிதற்கிடமுண்டு.

## பாரதத்திற் சைவம்

மகாபாரதம் சைவர்க்கே உரியதான ஆகமங்களை வெகுவாகப் போற்றுகின்றது. மகாபாரதத்தைக் காய்தல் உவத்தலின்றித் தமிழில் தந்த வில்லிபுத்தூரார் சிவபரத்துவங் கூறும் இடங்கள் வெகு உருக்கமாக உள்ளன.

பாரதத்தில் சிவபரத்துவங் கூறும் பாடல்களை வேண்டுமென்றே விலக்கிவிட்டுப் பதித்தவர் கோமளேஸ்வரத்து இராசகோபாலபிள்ளை. அவர் தமது ஊர் ஈஸ்வர பரமானது கண்டு வெகுண்டு அதனைக் கோமளபுரம் என்றே மாற்றி வழங்கியவர். அவர் பதித்த பாரதத்தில் சிவபரத்துவம் மறைந்தமைகண்டு மனம்வருந்திய ஆறுமுகநாவலர் தாமே பாரதத்தை நிறைவாகப் பதித்துச் சைவ உலகத்தவரால் பாராட்டப்பெற்றார்.

## சூலம் உடுக்கை நந்தி

காசி முதலான வடநாட்டுத் தலங்கள் எங்கும் திரிசூலம், உடுக்கை, நந்தி இன்றுங் கொடிகட்டிப்பறக்கின்றன. வானளாவிய கோபுரங்களிலும் விமானங்களிலும் சிவனுக்கே உரிய சின்னங்கள் ஒளிவிடுவதைக் காணுந்தோறும் உள்ளம் பூரிக்கிறது.

இத்தகைய நிலை இற்றைக்கு இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே குசான அரசர்தம் நாணகங்களிலும் பொறிக்கப்பெற்று உலகமெங்கும் பரவின.

## அகச்சமயத்தவர்

வட இந்தியாவின் மேற்குப்பக்கத்தில் பாசுபதர் மிகுதியாயிருந்து சிவவழிபாடு செய்தனர் என்ப. அவர்கள் சிவலிங்க வழிபாடு செய்த திறனை வெளிநாட்டவர் புகழ்வர், திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார் காலத்திலும் அவர்கள் இருந்தார்கள். அவர்களை நாயனார் வெகுவாகப் போற்றுவர். சிறுத்தொண்ட நாயனார் வரலாற்றில் வரும் பைரவ மூர்த்தம் ஹர்ச சரித்திலும் வருகிறது. பைரவமும் பாசுபதமும் அகச்சமய நெறியாகும். அவை சைவத்தோடு நெருங்கியவை. இன்னும் காளாமுகர், காபாலியரும் சைவத்தோடு இணைந்த அறுவகைச் சமயத்தவராவர். திருமுறைகள் சித்தாந்த சாத்திரங்கள் போற்றும் அறுவகைச் சமயங்கள் வேறு. சங்கராசாரியர் தாபித்த அறுவகைச் சமயங்கள் வேறு.

# இலங்கையிற் கல்வி

சென்ற நூற்றாண்டிலே சேர் முத்துக்குமாரசுவாமி (இராமநாதன் துரையின் தாய்மாமனார்) சட்டசபையில் மெத்தப் பிரகாசித்த காலத்தில் ஆறுமுகநாவலர் அவர்கள் அந்தரங்க ஆலோசனைகள் கூறிவந்தார்கள். கல்வித்திணைக்களம் உருவானமை, நாட்டில் 1128 பாடசாலைகளில் 67,750 மாணாக்கர் இருந்தமை ஓரளவுக்கு சேர் முத்துக்குமாரசுவாமி அவர்களின் முயற்சியாயும் இருந்தது.

★ மனம் உவந்து கொடுப்பதில் பெரிய இன்பமுண்டு ★

# கொடுத்துமகிழ்ந்த மரம்

(ஆங்கில மூலம் - ஷெல் சில்வஸ்ரீன்)

அந்த ஊரில் நன்ருகச் செழித்துச் சடைத்து வளர்ந்து நிழல் பரப்பிய பெரிய மரம் அது. அவ்வூரில் வாழ்ந்த இளைஞன் ஒருவன் தினமும் அந்த மரத்தடியில் உலாவி இலைகளைப் பொறுக்கிக் கிரீடஞ்செய்து தலையிலணிந்து, ''நானே அரசன், நானே அரசன்'' என்று கூறி விளையாடிவந்தான்.

அதைக்கண்டு அந்த மரம் உவகைகொண்டது. அவன் அம்மரத்திலேறிப் பழங்கள் பறித்து உண்டு மகிழ்ந்து கிளைகளில் தொங்கி ஊஞ்சலாடி மகிழ்ந்ததைக் கண்ட மரம் மேலும் உவகைகொண்டது. அவன் அதன் நிழலில் படுத்து உறங்கும்போதும் மரம் மட்டிலா மகிழ்ச்சி அடைந்தது.

இளைஞன் பெரியவனுனன்; மரத்திலேறுவதைத் தவிர்த்துக்கொண்டான். ஆனுல் தாய்மை மனப்பான்மை கொண்டிருந்த மரத்துக்கு மனவருத்தம் உண்டானது. ஒருநாள் வேதனையோடு அவனை நோக்கியது. ''தம்பி! தம்பி!! நீ ஏன் என்னிடம் வருவதில்லை. நீ என்னைத் தழுவுவதைத் தவிர்த்தது ஏன்?''

அதைக்கேட்டதும் அவன் அதிசயித்து, ''நான் இப்போது பெரியவனுகிவிட்டேன். என் வாழ்க்கைக்குப் பணந்தேவை. நான் பொருள்தேடுதல் வேண்டும்; எனக்குப் பொறுப்பு உண்டு; நான் இன்னமும் விளையாட்டுப்பிள்ளையல்ல'' என்ருன். அதற்கு அந்த மரம் நெஞ்சம் உருகி, ''தம்பி! நீ என்னிடமுள்ள பழங்களை எடுத்துச் சென்று விற்றுப் பொருள்தேடலாம்'' என்று கூறி ஏராளமான பழங்களைக் கொட்டியது; அவன் அவற்றை எடுத்துப் போனதைக்கண்டு மரம் மனம் மகிழ்ந்தது. அவன் சிலநாட்கள் மரத்தடிக்குப் போகவில்லை. மரத்துக்கு மனவருத்தம் உண்டானது. அவன் எப்போ வருவானே என்று ஏங்கித் தவித்தது. ஒருநாள் அவன் அங்கே சென்ருன். ''தம்பி! தம்பி!! இங்கே வா. கொம்பர்களில் தாவி ஏறு. இனிய பழங்களைப் பறித்து உண்டு கிளைகளைப் பற்றிப்பிடித்து ஊஞ்சலாடி உவகைகொள்'' என்றது.

அதற்கு அவன் உவகைக்கு ''எங்கே இடம். எனக்கு உறைவதற்கு வீடு வேண்டும்; எனக்கு ஊஞ்சலாட விருப்பம் இல்லை'' என்ருன். அப்படியாயின் நீ என்னைப் பயன்படுத்தலாம். என் கிளைகளை வெட்டிச்சென்று வீடு கட்டி வாழலாம்'' என்றது.

அவன்,மரக்கிளைகளை வெட்டியபோதெல்லாம் மரத்துக்கு மகிழ்ச்சி. நான் இவனுக்குப் பயன்படுகிறேனே என்று அது உவகைகொண்டது. வீடுகட்டி வாழ்ந்தவன் சிலநாட்கள் மரத்தடியை மறந்திருந்தான். ஒருநாள் அவ்வழியே போனவனைக்கண்ட மரம் கூப்பிட்டது. ''தம்பி! தம்பி!! இங்கே வா. நீ ஏன் என்னை மறந்துவிட்டாய்? உனக்கு என்ன குறை? என்ன வேண்டும்?'' அதைக்கேட்டதும் அவன், ''நான் ஆற்றைக்கடந்து அடுத்த ஊருக்குப் போகவேண்டும். அங்கே வியாபாரம் செய்து பொருள்தேடவேண்டும்; எனக்குச் சொந்தமாக ஒரு வள்ளம் வேண்டும்'' என்ருன்.

அதைக்கேட்டதும் மரம் மகிழ்ச்சிததும்ப, ''இவ்வளவு தானே! நீ என்னைத் தறித்துப் பெரிய வள்ளம் செய்து கொள்ளலாம்; நீ வாழ்ந்தால் எனக்கு மகிழ்ச்சி'' என்றது. அவன் மரத்தைத் தறித்துப் பெரிய வள்ளம்செய்து வியாபாரத்தில் பொருளீட்டிவாழ்ந்தான். அவனுக்கு ஒருமுறை வியாபாரத்தில் பெருநட்டம் உண்டானது. அவன் மனம் நொந்து வாடிய முகத்தோடு மரத்தடியருகிற் சென்ருன், தறிக்கப்பட்ட மரத்தின் அடிப்பாகம் அவனை ''இங்கே வா! என்மீது அமர்ந்து மனச்சாந்தி அடைவாயாக'' என்றது.

# Education

(Viewed from Sir P. Ramanathan's writings)

A sound education must combine with the wisdom of the sages of India and the classics of its literature in Thamil and Samskritham, in order that every boy, who is bad, may have a chance of becoming good; who is impelled by mischief and passion, may control them and be helpful in good works; who looks on like cattle, and will not work, unless prodded, may be alert and take an abiding interest in the welfare of others; who is vulgar and rude, may be refined, who is narrow-minded and prejudiced may be sympathetic and tolerant; who is unable to see a situation or its development, may spot it at once, trace the causes of its origin and tendencies, and organize measures for remedying the evil, promoting the good, that may be working in it; who is not precise in thought or clear in expression, may think and speak lucidly: who unthinkingly apes the custume and manners of foreigners, may be made to establish himself and his people on the ideals and practices which have come down to us from ancient times most suitably to our needs and to conditions of the land of our birth; who is running about from pillar to post restlessly, may maintain his ground and work for the uplift of himself and the nation to which he belongs who is affected with promiscuous desires and vain thoughts may concentrate his attention and effort upon the main business of life, which is heartfelf devotion to God, perfection of whatever work one has undertaken or been given to do, and the realization of all such aims as may secure for the people both temporal and eternal happiness.

## யோகாசன விழா

அகில இலங்கை யோகாசன சபை நல்லை ஞானசம்பந்தர் ஆதீனத்தில் அன்று பெருவிழாக் கொண்டாடியது. ஒன்றே குலம் ஒருவனே தேவன் என்னும் இலட்சியம், சூரியகலை, சந்திரகலை, குழைதோடு, சிவலிங்கம், ஓங்காரம் இவற்றை விளக்கும் சின்னம் பொறித்த சபையினர், யோகாசனம் வல்ல சுவாமி சிதானந்தயோகி அவர்களை வழிகாட்டியாகக் கொண்டது. அன்றைய விழாவில் மங்கல விளக்கேற்றியும், பரிசளிப்புச் செய்தும் சிறப்பித்த மில்க்வைற் தொழிலதிபர் நாட்டில் யோகாசனத்தைப் பரப்பி வருவதைப் பெரியவர்கள் பாராட்டினுர்கள்.

கோபத்தை வென்றவனே பெரிய பலசாலியாவன்

# அகில உலக இந்து மாநாடு

அகில உலக இந்து மாநாடு என்னும் பெயருக்கு அமைய இந்து சமயம் உலகமெங்கும் வியாபகமுற்று நிலவிவந்தது. நோர்வே இங்கிலாந்து முதலாய ஐரோப்பிய நாடுகளிலும், மெக்சிக்கோ, பேரு, கொலரடோ முதலிய அமெரிக்க பிரதேசங்களிலும், பாரசீகம், பாலஸ்தீனம், முதலிய மத்தியகிழக்குப் பகுதிகளிலும்; ஆபிரிக்க பிரதேசங்களிலும்; அகன்ற இந்தியா எனவழங்கிய தெற்கு தென்கிழக்கு ஆசிய நாடுகள் எங்கும் முன்னர் இந்துசமயம் பரந்துபரவி நிலவிவந்திருந்தது என்பதை மேற்குத்தேயத்து ஆராய்ச்சியாளரே ஆராய்ந்து அறிந்து அறுதியிட்டு நூற்றுக் கணக்கான நூல்களை எழுதியிருக்கிறார்கள்.

இன்று இங்கிலாந்து, அமெரிக்கா, பிஜித்தீவுகள் முதலாய இடங்களில் சைவசமய பீடங்கள் சமயபரிபாலனஞ் செய்துவருகின்றன. தமிழர்க்கே உரியதான சைவ சித்தாந்த சாத்திர உண்மைகள் ஆங்கிலமொழியில் அச்சிடப்பெற்று உலகமெங்கும் பரவியுள்ளன.

இற்றைக்கு முப்பதாண்டுகளுக்கு முன் பின்னுகை வெளிவந்த தமிழர் சால்பு என்னும் முத்திங்கள் வெளியீடு இந்து நாகரிகம் என்றால் என்னவென்றும், அதில் எழுப்தைந்து வீதம் சைவத்தமிழ்ப் பண்பாடே விஞ்சி நிலவுகின்றது என்றும் திருமுறைகளில் பெரிதும் ஈடுபாடு கொண்டவரும் முருக உபாசகராயிருந்தவருமான கலாநிதி தனிநாயக அடிகளார் எழுதிப் பரப்பியுள்ளார். அன்றி உலகில் ஆங்காங்கே எழுந்த தமிழாராய்ச்சி மாநாடுகளிற் பேசியுமுள்ளார்.

ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே பிற்காலச் சோழர் என்று சிறப்புப் பெயர்பெற்ற சோழப் பேரரசர்கள் சைவத்திற்கும் தமிழுக்கும் தங்களை அர்ப்பணித்த காலத்திலே, வணிகப் பெருமக்கள் வீறுகொண்டெழுந்து திரைகடலோடித் திரவியந் தேடப்போன விடங்களில் தங்கள் நினைவாகச் சைவத்தையும் வைணவத்தையும் தூரகிழக்கு நாடுகளில் நிலவவிட்டார்கள்.

செட்டிமார் என்றும் நாட்டுக்கோட்டையார் என்றும், நகரத்தார் என்றும், தனவைசிகர் என்றும் பலவாறாக வழங்கிவந்த பெருவருணத்தாரின் தாராளமனப்பான்மைக் கொடைவளத்தால் உலகெங்கும் கோயில்களும் மடங்களும் சைவசமய பரிபாலனமும் தலையெடுத்து நிலவிய காலம் தமிழர் வாழ்விற் பொற்காலமாயும் இருந்தது. அந்தப் பொற்காலம் மீண்டும் பூத்துக்குலுங்கும் நாள் வந்துகொண்டிருக்கிறது.

## பாரதக் கன்று

பாரதநாட்டின் பழம்பெரும் பண்பாடே இலங்கை முழுவதிலும் பரவியுள்ளது. பாரத நாட்டின் அயல் நாடுகள் பலவற்றிலும் இலங்கையே ஒரு குட்டிப் பாரத நாடாக அதன் கன்றுபோல அதன் மடியில் பாலருந்தும் பாவனையில் அமைந்துள்ளது. இலங்கைநாடு வாயும் வயிறும் வேறாகித் தனிக்குடித்தனம் செய்கின்ற வேளையிலும் பாரதத்தைத் தாய்நாடு எனக் கருதுவதை மறப்பதில்லை. பாரதமும் இலங்கையை அணைத்துக்கொள்வதில் தவறுவதில்லை.

## வான்குடை

ஆகாய விமானத்திலிருந்து விமானிகள் குதித்துப் பூமியிலிறங்கும் வான்குடை மிதவை போலமைந்த உலகப் பரப்பை, வலித்து இழுக்கும் விமானிபோலமைந்துள்ளது இலங்கை.

இன்று இலங்கை உலகிலுள்ள இந்துப் பெருமக்கள் எல்லோரையும் இங்கே வாருங்கள் என்று அன்புப்பிடியில் பட்டு நாடாகொண்டு இழுத்து அழைத்துச் சுற்றிவளைத்துக் கூட்டுகிறது. சேரவாரும் செகத்தீரே! முந்துபண்டாரம் வழங்குகின்றார்கள் சேர முந்துங்களே!

## கும்பாபிடேகம்

இந்துக்கள் வாழ்வில் ஆலயவழிபாடு அத்தியந்த உபயோகமுடையது. அனைவருக்கும் வேண்டியது. ஆன்மலயத்துக்கு அவசியமானது. ஆன்மசக்திக்கு அப்பாலாய தெய்வசக்தி ஒன்றுண்டு என்பதை நினைக்கச் செய்வது.

ஆலயத்தில் நித்திய நைமித்திய விழாக்களின் வேறாய்க் காலத்துக்குக் காலம் நடைபெறும் கும்பாபிடேகம் ஒன்றுண்டு. அதில் பலவிதயாகங்களில் பல்வேறு பூதங்கள், திக்குப்பாலகர்கள், இருடிகள், உருத்திரர்கள், ஆதித்தர்கள் முதலானோரை மந்திரார்த்தமாகவும் மானசீகமாகவும் அழைத்துப் பந்தனஞ் செய்து தெய்வசாந்நித்தியத்தினை உறுதிப்படுத்திக்கொள்வதோடு சுத்தம், சுகம், சோபனத்தையும் உண்டாக்கிக்கொள்வர்.

## ஒருமைப்பாட்டில் உறுதிகொள்வோம்

பொதுவான வெளிநாட்டுக் கொள்கையில் மனங்கொண்ட பொதுநலவாய நாடுகளின் தலைவர்கள், அமைச்சர்கள் காலந்தோறும் ஒன்றுகூடிக் கலந்துபேசிக் கோட்பாட்டுறுதி கொள்கின்றார்களே. கூட்டுச்சேராக்கொள்கைத் தலைப்பட்டோர் காலந்தோறும் ஆங்காங்கே கூடி வலுப்பெறுகிறார்களே. அவையாவும் அரசியல் ஆட்சிமுறை.

இன்று உலக இந்துப்பெருமக்கள் ஒன்றுகூடித் தங்கள் பண்பாட்டின் பழைமையை, பாரம்பரியத்தை, பரம்புகையை, நிலைபேறுடைமையை ஆராய்வார்கள். பறங்கி வாழ்க்கை வாழ்ந்துகொண்டு இந்துநாகரிகம் படித்தறிந்தவர்கள் பலர், பறங்கிப்போக்கைவிட்டு பண்பாட்டை, சைவாசாரசீலத்தை அறிந்து அநுசரித்து வாழத் தலைப்படுவார்கள்.


உலகப் பெருநகரங்களின் நூதனசாலைகளில் இந்து சமயப் பெருநூல்கள் இன்றும் பழைய ஏட்டுருவில் எவருக்கும் பயன்படாமல் காட்சிப் பொருள்களாய்க் கிடக்கின்றன. அவற்றைப் படியெடுத்து அச்சிலேற்றி எல்லோருக்கும் பயன்படச்செய்வார்கள்.

## பட்டி மாடுகள்

தைப்பொங்கலை அடுத்துவரும் பட்டிப்பொங்கல் மாட்டுப்பொங்கல். மாடுகள் பசுவாயினும் எருதாயினும் செல்வமே. கிருஷ்ணபரமாத்மா, திருமூலநாயனார், சண்டேசுவரர் முதலானவர்கள் நல்லமேய்ப்பர்கள். அவர்கள் தங்கள் பட்டியில் மாடுகளைப் பக்குவமாகக் காத்தவர்கள்: ஓநாய், நரி, புலி பிடித்துப்போகாமலும்; வேறு பட்டியினர் சாய்ச்சுக்கொண்டு சென்று குறிசுட்டுத் தங்கள் பட்டியிற் சேர்த்துக்கொள்ளாமலும் விழிப்பாயிருந்தனர். அந்தவகையில் நம்மவர்களும் இனி விழிப்பாயிருப்பார்களாக!

*Mukti is an extremely pure state*

## பிரணவானந்தஜீ மகாராஜ்



மலேசியாவில் திவ்வியசீவன பீடாதிபதியாகப் பெரும் பணிபுரிந்த பிரணவானந்தர் 28-2-82 இல் சமாதியாயினர் அளவெட்டியைப் பிறப்பிடமாகக்கொண்ட சுவாமிகளின் பூர்வாசிரமத் திருநாமம் பொன்னையா என்பர்.

இளம்பராயம் முதலாகவே சமயப்பணிகளில் ஈடுபட்டிருந்த இவர் இமயஞ்சென்று சுவாமி சிவானந்தரின் ஆச்சிரமத்தில் பயிற்சிபெற்று தகுதியான சுவாமியென மலேசியாவுக்கு அனுப்பப்பெற்றவர்.

யாழ்ப்பாணத்துக்குப் பலமுறை வருகைபுரிந்த போதெல்லாம் மில்க்வைற் தொழிலதிபர் மனைக்கு வந்து அவர் அழைத்தவிடம் எல்லாம் சென்று உரையாற்றி அவர் பணியை வெகுவாக வாழ்த்தியவர்.

பலவின மக்கள் வாழும் மலேசியாவில் பொதுப்பணி புரிந்த பிரணவானந்த சுவாமிகளுக்குப் பெருமதிப்பு நிலவியது. மலேசியமக்கள் பலர் பொதுநலப் பணிபுரிவதற்கு அச்சாணியாயிருந்த சுவாமிகள் திருநாமம் என்றென்றும் நின்று சாதகர்களை நன்றாக ஊக்குவிக்கும். வாழ்க அவர் திருநாமம்.

## வழித்துணை விளக்கம்

சென்னையிலிருந்து சேலம் நோக்கிக் கடுகதி வண்டியிற் பிரயாணஞ் செய்தபோது, மில்க்வைற் வெளியீடுகள் பலவற்றை நெடுந்தொடர் வண்டியில் வந்த உடன் பிரயாணிகளுக்கு வரிசை நோக்கி விநியோகஞ் செய்துபோனேம்.

எங்கள் பெட்டியில் எதிர் ஆசனத்தில் ஆஜானுபாகுவாக, அதிகாரி ஒருவர் என்றெண்ணத்தக்க வகையில் அமர்ந்திருந்த பெரியார் ஒருவர், வெளியீடுகளை இருகை நீட்டிப் புன்முறுவலோடு பெற்றுப் படித்துப் பக்குவமாக மடித்துப் பெட்டிக்குள் உடனுக்குடன் வைத்துக்கொண்டார்.

மெல்ல மெல்ல உரையாடத் தொடங்கிய அவர் நாங்கள் பசு வளர்ப்பைப் பேசியபோது சுவையான சம்பவங்களைப் புள்ளி விபரங்களோடு எடுத்துக்கூறினுர். வண்டி சேலம் நிலையத்தை அடைந்ததும் எம்மைத் தம்மோடு பின்தொடருமாறு சொன்னுர்.

வெளியே சென்றதும் அவருக்குப் பெரிய மோட்டார் வண்டி காத்துநின்றது. முன் ஆசனத்தில் தாம் ஏறுமுன் எம்மைப் பின் ஆசனங்களில் வசதியாக ஏற்றிவிட்டுத் தாமும் ஏறிக்கொண்டார். வண்டியோட்டுபவனை நோக்கி, ''இந்தா அப்பா என்னை வங்கியில் இறக்கிவிட்டு இவர்களை நரசுஸ் கோப்பித் தொழிலதிபர் கையில் ஒப்படைத்துவிட்டு, இவர்களோடு நின்று இவர்கள போகவிரும்பும் இடமெல்லாம் போய்வா'' என்று பணித்தார். தாம் எம்மைவிட்டுப் போனபோது எமக்குத் தம்விபரம் எழுதிய அட்டைகளையும் தந்துபோனுர்.

மிருகவைத்தியத் துறையில் கலாநிதிப் பட்டம்பெற்ற அவர் முதுமாணிப் பட்டமும் பெற்றிருந்தார். தமிழ் நாட்டரசில் சேலம்மாவட்டத்துப் பாலுற்பத்தியாளர் சம்மேளனத்து முகாமையாளராயும், சேலம் மாநிலத்தின் பாற்பண்ணையாளர் கூட்டுறவுப் பொதுமுகாமையாளராயும் இருபெரும் அலுவலகங்களை ஒருவராய் இயக்குபவர் என்றும் அறிந்தோம். என்ன பணிவு, என்ன பெருந்தன்மை, என்ன உதவிக்குணம் என்றெல்லாம் அவரை வியந்தோம். அவருக்கு எங்கள் பணிவான நன்றி. அவர் திருநாமம் கலாநிதி R. இராதாகிருஷ்ணன் M. V. Sc. P. G.

## வழிகாட்டும் முல்லைத்தீவு மாவட்டம்

முல்லைத்தீவு விவசாய விஸ்தரிப்பு உத்தியோகத்தர்கள் பரீட்சார்த்தமாகப் பாண்டியன் குளத்தில் கோதுமை பயிரிட்டுப் பெரு வெற்றியீட்டியுள்ளார்கள். பரீட்சார்த்தமாகச் சென்ற காலபோகத்தில் ஒரு சிறிய பரப்பில் 1/200 ஏக்கர் நிலத்தில் 4 3/4 கிலோ கோதுமை விளைந்துள்ளமை வெளிநாட்டு விளைவை ஒத்துள்ளது.

வெளிநாடுகளுக்குரிய திராட்சை எங்கள் நாட்டில் பெரு வெற்றியளித்தமை போலக் கோதுமையும் எமக்கு வரப்பிரசாதமாக வாழ்வு அளிக்கும் என்பது திண்ணம்.

கோதுமைப் பயிர் தண்ணீர் நிலையாக நிற்காத இடங்களிலும், வரகு விளையக்கூடிய இடங்களிலும் உண்டாகும் என்று விவசாய உத்தியோகத்தர், மில்க்வைற் தொழிலதிபருக்கு விளக்கி இவ்விபரத்தைத் தந்தார்.

### கோதுமை

கோதுமை எமக்குப் புதியதல்ல. இன்று கோதுமை மாவாகவும், குருணலாகவும், பாணுகவும், விசுக்கோத்தாகவும், ரொட்டியாகவும், நம் உடம்போடு மிகவும் நெருங்கிப் பழகி வாழ்வளிக்கிறது.

கோதம்பை, யவை என வழங்கும் அற்புதமான தானியம், கோதுமுலு, கோதம்பம், கோத், கோதுமம் என்று பாரதப் பிரதேசங்களிலும்; ஹின்ரா, கண்டும், கேகுன் என்று மத்தியகிழக்கு நாடுகளிலும் வீற் என்று மேற்கு நாடுகளிலும் வழங்கும்.

இந்தியாவில் பெரும்பாலான மாநிலங்களிலும், ஐரோப்பிய நாடுகளிலும், அமெரிக்காவிலும் கோடிக்கணக்கானேரின் உணவுத்தானியமான கோதுமை நிரம்பிய சத்துள்ளதாகும். உடலுரமாக்கி, போஷணகாரி என்றெல்லாம் பெயர் பெற்ற கோதுமை எமக்கு அவசியம் வேண்டியதாகும். இது உயிருக்கு ஊன்றுகோல் எனவும் பெயர் பெற்றது. பலவிதமான உணவுகளைத் தயாரிக்க கோதுமை நல்ல பலம் தருவது. உணவுத் தானியங்களில் தலைசிறந்தது. நம்மவர் கோதுமை பயிரிடுவதில் நாட்டம் கொண்டால் நல்ல காலம் பிறக்கும்.

★ *By His grace only we become free from sorrows* ★

# அண்ணா கோப்பியின் தரம் இன்னும் உயரும்

## சேலத்தில் நேரடி அநுபவம்

யாழ்ப்பாணம், இணுவில், சுன்னாகம் ஆகிய இடங்களில் நிலையங்களமைந்த அண்ணா கோப்பி நாடெங்கும் நல்ல புகழ் பெற்றுள்ளது. அதன் உரிமையாளர் எஸ். பி. நடராசா அவர்கள் அண்மையில் மில்க்வைற் தொழிலதிபருடன் காசி முதலான வட நாட்டு யாத்திரையை முடித்துக்கொண்டு சென்னைக்கு மீண்டு சேலம் சென்றார். அண்ணா தொழிலதிபருக்கு மில்க்வைற் தொழிலதிபர் வழிகாட்டியாயுள்ளார்.

## நறுமணச் செல்வம் நரசுஸ் காப்பி

தமிழ் நாடெங்கும் நறுமணம் பரப்பிப் புகழ் பெற்று நிலவும் நரசுஸ் காப்பி நிறுவனத்தாருக்கு நாற்பத்து மூன்று கிளை நிறுவனங்கள் உண்டு. அவையாவும் கோப்பி மணங்கமழும் மையங்களாகும்.

சேலம் மாவட்டத்தில் பெரிய தலைமை நிறுவனத்தைக் கொண்ட நரசுஸ் தாபன உரிமையாளருக்குச் சகோதரப்பலமுண்டு. எல்லோரும் படித்தவர்கள், பண்பாடுள்ளவர்கள். நல்லவர்கள். இராம லட்சுமணர் போலப் பாண்டுரங்கன், பார்த்தசாரதி என்பர் சேலத்தில் அதிகார பீடத்தமர்ந்திருக்கிறார்கள். இருவரும் தத்தம் இருகரங்களாலும் எந்த நேரமும் தொலைபேசிகளைத் தூக்கியவர்களாய் தொழிலகத்தோடும் புறவூர்களோடும் தொடர்பு கொண்ட வண்ணம் இருக்கிறார்கள்: ஆகட்டும், நன்று, அப்படியா என்று ஊக்கப்படுத்துகிறார்கள்.

முன்னவன், பின்னவன்; அண்ணன், தம்பி; வலக்கரம் இடக்கரம் என்ற பாவனையில் தொழில் நடத்தும் இவர்களுக்குப் படித்த விவேகியர்களான உத்தியோகத்தவர், ஊழியர்கள் பக்கத் துணையாயுள்ளார்கள். தொழில் நுட்பமறிந்த நிபுணர்கள் ஒத்துதவி புரிகின்றார்கள்.

## வீடுகள் உணவுச் சாலைகள்

தமிழ் நாட்டில் வீடுகள் உணவுச் சாலைகள் எங்கும் தமிழோடு கமழும் நரசுஸ் கோப்பிச் செல்வத்துக்கு நல்ல பெயர் பரவக் காரணங்கள் உண்டு. தொன்கணக்கில், தேவை நோக்கி, நன்கு பரிசோதித்து வாங்குதல். நன்கு துப்புரவாக்குதல். மெல்லிய தோலை நீக்குதல். காயவிடுதல். இயந்திரம் மூலம் நல்ல முறையில் வறுத்தல். இவையாவும் மிகத் தூய்மையாக நிபுணர்கள் மேற்பார்வையில் நடைபெறுகின்றன. எவ்வித ஒழிப்பு மறைப்பும் அங்கே கிடையா.

## அண்ணாவுக்கு அழைப்பு

அண்ணா தொழிலதிபர் முன்னமே நரசுஸ் கோப்பி நிறுவனத்தாருக்குப் பழக்கமானவர். முன்னரே தொடர்பு கொண்டு தாம் ஒரு பயிற்சி பெற வருவதாகவும், பார்வையிட்டுப் பழகுவதற்கு வசதி செய்யுமாறும் கேட்டிருந்தார். சாதகமாக அழைப்பும் பெற்றிருந்தார்.

## தொழிலகத்துக்கு விஜயம்

மில்க்வைற் தொழிலதிபர், செய்தி ஆசிரியர் சூழ அண்ணா தொழிலதிபர் சேலம் சென்ற பிரயாணம் ஒரு தனிச் செய்தி. சென்னையிலிருந்து சேலம் பிரயாணமானதும், வழித்துணையாக வண்டியில் உடன் பிரயாணஞ் செய்த மேலதிகாரி ஒருவர் சேலத்தில் செய்த உதவியும் உபசரிப்பும், சேலத்தில் இராசிபுரம் திவ்விய சீவன சங்கத்தில் மில்க்வைற் தொழிலதிபர் பெற்ற தனியுபசரிப்பும், சாரதா மாணிக்கியர் இல்லம் பார்த்துப் பன்முகப் பணி பயின்றதும், சேலம் வர்த்தகர்கள் செய்த உபசரிப்பும் அதிகம்.

## நரசுஸ் கோப்பி

நல்ல முறையில் அரைக்கப்பட்ட நரசுஸ் கோப்பித் தூளை வழுவழுப்பான பைகளில் அடைக்கிறார்கள். பைகள் வேண்டிய அளவில் தயாரிக்கப்படுகின்றன. அச்சிடப்படுகின்றன: யந்திரம் ஒன்று நிமிடந்தோறும் 200 பைகள் தயாரிக்கின்றது. இன்னொன்று நிமிடத்துக்கு 500 பைகள் தயாரிக்குமாம். இன்னொரு பாரிய யந்திரம் ஏழு லட்சம் ரூபா பெறுமதியானது, தன்னியக்கமுள்ளது. நிமிடந்தோறும் 22 பைகளில் கோப்பித் தூளை நிரப்புகிறது.

யந்திர மயமான தொழிற்சாலையில் தூய்மையான தொழிலாளரும் கைகொடுக்கிறார்கள். தினந்தோறும் பல்லாயிரக்கணக்கான பைகளில் கோப்பித் தூள் நிரப்பப் பக்கத்துணையாகப் பயிற்சி பெற்ற தொழிலாளர் பணி புரிகின்றார்கள்: அண்ணன் பாண்டுரங்கன் B. Sc. எல்லாவற்றையும் ஆறுதலாக விளக்கி வந்தார் இடையிடை நறுமணங் கமழும் கோப்பி பருகத் தந்து உற்சாக மூட்டி வந்தார். கோப்பி தயாரிப்பதும் ஒரு கலை என்று தயாரித்துக் காட்டுமாறு பணித்தார்:

## மில்க்வைற் தொழிலதிபரை அறிந்தவர்


நரசுஸ் கோப்பி அதிபர் பாண்டுரங்கன், அண்ணா கோப்பி அதிபர் நடராசா, மில்க்வைற் தொழிலதிபர் கனகராசா இவர்கள் உரையாடி மகிழ்ந்த போது மில்க்வைற் வெளியீடுகள் எல்லோருடைய கைகளிலும் பரவின.

## சைவப் பெரியார் பூதலிங்கம்

நாகர்கோயில் ஆறுமுகநாவலர் என்னும் சைவப் பெரியாரின் தம்பியாரின் மைந்தர் பூதலிங்கம் எங்கிருந்தோ ஓட்டமாய் வந்து குதித்தார். மில்க்வைற், தொழிலதிபருக்கு முன் இருக்கமனமின்றி நின்ற நிலையிலே மில்க்வைற் சேவைகளைக் கதாகாலட்சேபம் போலக் கலகலவென அடேயப்பா பலேபலே ஆச்சுதா அம்மட்டா இம்மட்டா என்றெல்லாம் சொல்லி விளக்கினார்.

பூதலிங்கம் அவர்கள் நரசுஸ்தாபனஞ் செய்கின்ற நற்பணிகளுள் வெளியீடுகள் பிரசுரங்களைத் தயாரித்துக் கொடுக்கின்ற சைவப்பிரசாரகர். ஆண்டு வெளியீடுகள் விழா வெளியீடுகள் முதலியவற்றைப் பூதலிங்கம் அவர்களும் பாண்டுரங்கன் அவர்களும் அள்ளி அள்ளித் தந்தார்கள்.

(தொடர்ச்சி 32-ம் பக்கம்)



காசி விசுவநாதர்

## ஆறுவது சினம்

பொறுமையாய் இரு. ஆத்திரப்படாதே. கோபங் கொள்ளாதே. சினமடையாதே என்றெல்லாம் நம் பெரியவர்கள் அன்பாதரவாக எமக்குச் சொல்லியிருக்கிறார்கள். ஒரு நொடிப்பொழுதில் உண்டான ஆத்திரத்தால் ஓராயிரமாண்டுக் கால முயற்சி பண்பாடு பாரம் பரியம் எல்லாம் பறந்தோடி விடுகிறது. சில சமயம் சாம்பல் தான் மிஞ்சுகிறது. சொல்லினல் சுடுவேன். ஆனல் அது தூயவனை இராமனின் வில்லுக்கு மாசு என்று விட்டு விட்டுப் பொறுமையாய் இருக்கிறேன் என்று சீதை அனுமானிடம் சொன்னது பாரதப் பண்பாடு.

சகலகலா நிபுணரான லியனடோ டாவின்சி உலகப் புகழ் பெற்ற ஓவியரும் கூட. அவரின் ஓவியங்களை மிஞ்சி எவரும் தீட்டவில்லை என்றுகூடச் சொல்லலாம். அவர் இயேசுக்கிறிஸ்துநாதரின் இராப்போசனப் படத்தை வரைந்து கொண்டிருந்த வேளையில், யாரோ ஒருவருடன் உரையாடியபோது கொண்ட ஆத்திரம் காரணமாக அந்த மனிதனை வாயில் வந்தபடி தூற்றிப் பேசிக் கலைத்து விட்டு மீண்டும் தன் சித்திரத்தைத் தொடர்ந்தார். அவருக்கு ஒன்றுஞ் செய்ய முடியவில்லை. அதனல் மனம் நொந்த அவர், தாம் வைத மனிதனைத் தேடிக் கண்டு மன்னிப்புக் கோரி மீண்டபின் தன் வேலையைத் தொடர்ந்தார். சித்திரம் நன்ருக அமைந்தது.

(31-ம் பக்கத் தொடர்ச்சி)

அண்ணா....

### சேலத்தில் தேசிய உண்டிச்சாலை

சேலம் மாவட்டத்திலே மிகப் பெரிய உண்டிச்சாலையான தேசிய உண்டிச்சாலையிலே உடனடியாக ஒழுங்கு செய்யப்பெற்ற மதியவிருந்துபசாரத்தில் மாவட்டப் பெரியார்கள், தொழிலதிபர்கள், உத்தியோகத்தவர்கள் கலந்துகொண்டார்கள். மில்க்வைற் தொழிலதிபர் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட வைபவத்தில் நாங்கள் வட இந்தியாவில் ஒருமாத காலம் கண்டறியாத கறி வர்க்கங்கள் கனிவர்க்கங்களைக் கண்டு சுவைத்தோம். உணவின் பின்பும் பாயசத்துக்குப் பதிலாகப் பழவர்க்கத் தயாரிப்புகள், பாற்கட்டிகள் ஐஸ்கிறீம்கள் எல்லாம் எம்மைக் குண்டோதரர்களாக்கி விட்டன.

### நிலக் கடலை

சேலம் மாவட்டத்தில் நிலக்கடலை பெருமளவில் விளைகிறது. நல்ல மணிகள் உள்ள தரமான கடலையைத் தொன் கணக்கில் வாங்கித் தரம் பிரித்துக் காயவிட்டு உடைத்துத் துப்புரவாக்கி எண்ணெய் ஊற்றும் நரசுஸ் நிறுவனம் அதற்கெல்லாம் பாரிய இயந்திரங்கள் நிறுவியுள்ளார்கள். மனிதசக்திக்கு வேண்டிய அளவில் ஆண்களும் பெண்களும் வேலை செய்கிறார்கள். இரட்டை வடி முறையில் அவர்கள் தயாரிக்கும் எண்ணெய் பெருந் தொகையானது.

### பிரியாவிடை

கோப்பியைப் பற்றிப் படிக்கப்போனவிடத்து நிலக் கடலை பற்றியும் நவீன இயந்திரங்கள் பற்றியும் படித்த பின் பெரிய விருந்துபசாரத்திலும் திக்குமுக்காடிய எங்களுக்கு அகால வேளையில் தேனீர் விருந்தும் நடைபெற்றது. நாங்கள் இராசிபுரம் போவதற்கு விருப்பந் தெரிவித்தமையால் தேனீர் விருந்து நாழிகை முந்தியே நடைபெற்றது. விருந்துபசாரத்தின் பின் எம்மைத் தங்கள் மோட்டார் வண்டியிலேயே அனுப்பிவைத்த நரசுஸ் தொழிலதிபர்களின் உபசரிப்பும் உபகரிப்பும் பெரியவை. நரசுஸ் விளம்பரப் பைகள், திறப்புக் கோவைகள், நாட்காட்டிகள், கோப்பிக்கிண்ண மூடிகள், வெளியீடுகள் இன்னபிறவும் தந்ததோடு தங்கள் நறுமணமுள்ள கோப்பித் தூளும் ஆளுக்கு ஒரு பெரியபொதி தந்து இன்னும் இன்னும் வாருங்கள் என்று வீதியோரம்வரை வந்து தங்கள் வண்டியையே உதவிப் பிரியாவிடை கூறினர்கள். கோப்பி தயாரிக்கும் தனிப்பட்ட முறை தொழிலதிபருக்குரிய இரகசியம். அதை வெளி வெளியாக அண்ணா தொழிலதிபருக்கு அன்பாதரவோடு விளக்கி வித்தை கற்பித்த நரசுஸ் வாழ்க. அண்ணா தொழிலகம் இன்னும் தரமுயர்க!


## மில்க்வைற் செய்தி

மில்க்வைற் செய்தி தேவையானேர் பின்வருவனவற்றுள் ஏதாவது ஒரு தொகுதியை அனுப்புங்கள்.
நாங்கள் தபாற்செலவு கட்டி செய்தியை அனுப்புவோம்.

நீல சோப் மேலுறை 10, நீம் சோப் மேலுறை 2
பார் சோப் மேலுறை 2, மெடிக்கேட்டட் ,, 2
சலவைப் பவுடர் மேலுறை 2.

மில்க்வைற் த. பெ. இல. 77, யாழ்ப்பாணம்.


யாழ்ப்பாணம் சாந்தி அச்சகத்தில் அச்சிட்டவர் திரு. தி. நாகரத்தினம்; யாழ்ப்பாணம் மில்க்வைற் சவர்க்காரத் தொழிலகத்தின் சார்பாக வெளியிட்டவர் ''சிவநெறிப்புரவலர்'' க. கனகராசா ஜே. பி. அவர்கள்
கௌரவ ஆசிரியர்: திரு. க. சி. குலரத்தினம். 1-4-82.

"மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெலாம்"

Hony. Editor:
C. KULARATNAM

Publisher:
K. KANAGARAJAH J.P.

மில்க்வைற் தொழிலகத்தின்

Thamil-English Monthly issue of the
MILK WHITE SOAP WORKS, JAFFNA.




MWS
மில்க்வைற்

மில்க்வைற் தயாரிப்புகளுக்கு
நல்லாதரவு தருகின்ற உங்கள் எல்லோருக்கும்
எங்கள் இதயபூர்வமான

நன்றி

வணக்கம்


சாந்தி அச்சகம், யாழ்ப்பாணம். (இலங்கை) தொலைபேசி: 7002